பக்கங்கள் : இருபத்தெட்டு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 28 ஞாயிற்றுக்கிழமை (12.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :105

ஸ்ரீலங்கா இராணுவத்துடன் துணைப் படைகள் இயங்குவதை அம்பலப்படுத்துகிறது அமெரிக்கா

கருணா குழு, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய மூன்றையும் பெயர் குறிப்பிட்டு அறிக்கை

வாஷிங்ரன், மார்ச் 12

ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன், அதன் இராணுவத்துடன் சேர்ந்து பல துணைப்படைகள் இயங்குகின்றன. கருணா குழு, ஈ.பி.டி.பி., புளொட் ஆகியனவும் அவற்றில் அடங்கும். இந்தத் துணைப்படைகள், 2005 ஆம் ஆண்டில் அந்த நாட்டில் நடைபெற்ற பல ஆயுதத் தாக்குதல்களில் ஈடுபட்டன.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் மனித உரிமைகள் அறிக்கையில் மேற்சொன்ன தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்தத் துணைப்படைகள் பல சந்தர்ப்பங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் நேரடியாகச் சேர்ந்தும், அரசின் உளவு முகவர்களுடன் இணைந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை ஒடுக்கும் நோக்குடன் ஆயுதத் தாக்குதல்களில் ஈடுபட்டதாகவும் அந்த அறிக்கையில் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

கடந்த வருடத்திற்குரிய மனித உரிமைகள் குறித்த அமெரிக்க அரசாங்கத்தின் அறிக்கை சென்றவாரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையிலேயே இவ்விடயம் தெட்டத்தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்கூறிய துணைப்படைகள் மூன்றும் 2005 ஆம் ஆண்டில் எத்தனை கொலைகளைச் செய்தன என்ற எண்ணிக்கைகளும் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், திருகோணமலை மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை ஜெயச்சந்திரன் உட்பட 27 விடுதலைப் புலிகள் உறுப்பினர்களைக் கடந்த வருடத்தில் கருணா குழு கொலை செய்துள்ளது.

திருக்கோவில் பிரதேச சபைச் செயலாளர் ஏ.கே.தவராஜா (ஏப்ரல்), பத்திரிகை

(20ஆம் பக்கம் பார்க்க)

மஹிந்தவின் ஆலோசகராக நடிகர் ரவீந்திர ரந்தெனிய?

கொழும்பு,மார்ச்12

மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராக நடிகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவீந்திர ரந்தெனிய நியமிக்கப்படக்கூடும்.

மஹிந்த ராஜபக்ஷவை வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் ரந்தெனிய சந்தித்துப் பேசினார்.

அமைதி முயற்சிகள் அரசியல் மற்றும்

(20ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் ஆணையாளருடன் அரசியல் கட்சிகள் சந்திப்பு

கொழும்பு,மார்ச்12

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பான தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் சந்திப்பு நடைபெறவுள்ளது.

தேர்தல் செயலாளர் அலுவலகத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இச்சந்திப்பு இடம்பெறும்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்

(20ஆம் பக்கம் பார்க்க)

வாகரையில் புலிகளின் நிலையை தாக்கும் முயற்சி முறியடிப்பு!

மட்டக்களப்பு,மார்ச் 12

மட்டக்களப்பு, வாகரைப் பகுதியில் கட்டுமுறிவு என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் நிலை ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியைப் புலிகள் முறியடித்துள்ளனர்.

இராணுவத்தினரும் துணைப் படையினரும் இணைந்து தாக்குதல் தொடுக்க முயன்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணியளவில் மூப்பது பேரடங்கிய குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகள் நடத்திய பதில் தாக்குதலில் ஆயுதங்களைப் போட்டுவிட்டு காயங்களுடன் இராணுவத்தினரும் துணை ஆயுதக்குழுவினரும் தம்பியோடியுள்ளனர்.

தம்பியோடியவர்களின் ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ)

மீன்பிடித் தடை தளர்த்தப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 12

குடாநாட்டில் அண்மையில் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட மீன்பிடித் தடை பகுதியாகத் தளர்த்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக செய்திக் குறிப்பு ஒன்றை நேற்று வெளியிட்ட நடவடிக்கைச் செயலகம், எந்த எந்தப் பகுதியில் மீன்பிடித் தடை தளர்த்தப்பட்டுள்ளது என்ற விவரங்களை வெளியிடவில்லை.

அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்வேறு தரப்பினர் ஜனாதிபதியிடம் கோரியதன் பயனாக, கடற்படைத் தளபதியின் அறிக்கையின் படி சில பகுதிகளில் மீன் பிடிக்க இருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளது.

படிப்படியாக மேலும் சில பகுதிகளிலும் மீன்பிடித்தடை எதிர்காலத்தில் தளர்த்தப் படும்.

கடந்த டிசெம்பரில் விடுதலைப் புலிகள் மீனவர்கள் போல வந்து கடற்படைப் படகு ஒன்றைத் தாக்கியதன் பின்னரே இந்த மீன் பிடித் தடை நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டது.

இப்படி அச்செய்திக்குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

சர்வாதிகாரி மிலோசவிக் சிறைக் கூண்டில் மரணம்!

ஹேக்,மார்ச் 12

யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் சொலபொடான் மிலோசவிக்(வயது 64) (Solobodan Milosevic) உயிரிழந்துவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஹேக் நகரில் அவர் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஐ.நா. தடுப்புக் காவல் முகாமின் சிறைக் கூண்டின் உள்ளே படுக்கையிலேயே உயிரிழந்து காணப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

மனிதப் படுகொலைகள் மற்றும் போர்க் குற்றங்களுக்காக ஐ.நாவின் போர்க் குற்றங்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் மிலோசவிக் விசாரிக்கப்பட்டு வந்தார்.

அண்மைக் காலமாக குருதி அழுத்தம் மற்றும் இருதய வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தார் மிலோசவிக். அவரை சிகிச்சைக்காக ரஷ்யாவுக்கு

(20 ஆம் பக்கம் பார்க்க)

போக்குவரத்துப் பொலீஸாரின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

யாழ். நகரப் பகுதியில் போக்குவரத்து ஒழுங்குகளைப் பேணும் கடமையை போக்குவரத்துப் பொலீஸார் அடுத்தவாரம் முதல் மீண்டும் ஆரம்பிக்க உள்ளனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் போக்குவரத்துப் பொலீஸார் இந்தப் பணியில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினரின் உதவி இன்றியே இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

யாழ். பொலீஸ் நிலையத்தில் போக்குவரத்துப் பொலீஸார் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இது தொடர்பாக விளக்கமளித்தனர்.

கடந்த ஆண்டின் இறுதியிலும் இந்த ஆண்டின் தொடக்கத்திலும் குடாநாட்டில் உருவான அசாதாணரச் சூழ்நிலையை அடுத்துப் போக்குவரத்துப் பொலீஸாரின் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(20 ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலைத் தவணை விடுமுறைகள் மாற்றம் செய்யப்படுவதாக அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 12

இந்த ஆண்டு பாடசாலைத் தவணை நாள்களில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதனாலும் - 2 ஆயிரத்து 550 ஆவது புத்த ஜயந்தி தினக் கொண்டாட்டம் காரணமாகவும் - பாடசாலைத் தவணை நாள்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் முதலாம் தவணை ஏப்ரல் 7ஆம் திகதி முடிவடையும். இரண்டாவது தவணை இரண்டு கட்டங்களாக நடைபெறும். இதன்படி முதலாவது

(20 ஆம் பக்கம் பார்க்க)

ஜெனீவா பேச்சுப் பற்றி விளக்குவதற்கு மஹிந்தவின் பிரதிநிதி இந்தியாவுக்கு?

கொழும்பு,மார்ச் 12

ஜெனீவாவில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் விவரங்களைத் தெரிவிப்பதற்காக இந்தியாவுக்குத் தனது பிரதிநிதியை அனுப்ப ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பேச்சுக்குழுவுக்குத் தலைமை வகித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவே ஜனாதிபதியின் பிரதிநிதியாக இந்தியா செல்வார் என்று தெரியவருகிறது.

ஜெனீவாவில் முதற்சுற்றுப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள், அடுத்த கட்டப் பேச்சுக்களில் விவாதிக்கப்படவுள்ள விடயங்கள் தொடர்பாக இந்தியாவுக்கு விளக்கம் அளிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

'வடக்கின் பெரும் மோதல்' வெற்றி தோல்வியின்றி முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 12

'வடக்கின் பெரும் மோதல்' என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான நூறாவது கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்த ஆட்டம் மூன்றாவது நாளான நேற்று மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டதை அடுத்து வெற்றிதோல்வியின்றி முடிவுக்கு வந்தது.

நேற்றுமுன்தினம் இரண்டாவது நாளில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 140ஓட்டங்களைப் பெற்றிருந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்றுத் தொடர்ந்து ஆடியது.

எட்டு விக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இந்த ஆட்டத்தில் 7 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக களமிறங்கிய நிரூபன் 97 ஓட்டங்களையும் சஞ்சீவன் 84 ஓட்டங்களையும் பெற்றனர். இருவரும் சிறப்பாக ஆடி 181 ஓட்டங்களைக் குவித்தனர்.

யாழ்.மத்திய கல்லூரி வீரர்களான ஜே. வியாசன் 75 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் டி.சதர்சன் 31 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து களமிறங்கிய மத்திய கல்லூரி அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

பி.தயான் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

நிரூபன் 43 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் கஜரூபன் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டித் தொடரில் சிறந்த வீரர்களாக பின்வருவோர் தெரிவாகினர்.

* சிறந்த வீரர் - ரி.நிரூபன் - சென் ஜோன்ஸ் கல்லூரி.
* சிறந்த பந்துவீச்சாளர் டி.சுதர்சன் - மத்திய கல்லூரி.
* சிறந்த துடுப்பாட்ட வீரர் ஜி.சஞ்சீவன் - சென்.ஜோன்ஸ்.
* சிறந்த களத்தடுப்பாளர் - சகிந்தன் - சென்.ஜோன்ஸ்.
* சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் - ரி. நிரூபன் - சென்.ஜோன்ஸ்.

(ஐ-3-190)

வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் போட்டியின் பரிசளிப்பு விழா நேற்று மாலை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள் : பிரதீ)

முன்னாள் அதிபரின் மாட்சி விதப்பு வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

முன்னாள் அதிபரும் மூத்த கல்விமானுமாகிய அமரர் முருகேசு பரமேஸ்வரன் நினைவுச் சபை திருநெல்வேலி வாலையம்மன் சனசமூக நிலையத்துடன் இணைந்து நடத்தும் 'மாட்சி விதப்பும் மனித மேம்பாட்டு உதவி வழங்கும் நிகழ்வும்' இன்று நடைபெறவுள்ளன.

வாலையம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு இந்த நிகழ்வுகள இடம்பெறும்.

அமரர் பரமேஸ்வரன் ஞாபகார்த்தமாக வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் இந்த வைபவத்தில் மாட்சி விதப்புரையை ஆ.செல்லத்துரை வழங்குவார். மணிவிழாக் காணும் கிராம அலுவலர் சி.ல்ட்சுமிகாந்தன் கௌரவம் பெறுகிறார்.

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி, திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை, நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், பரமேஸ்வரன் பாலர் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு மனித மேம்பாட்டு உதவி வழங்கப்படும்.

பேராசிரியர் முனைவர் சி.சிவலிங்க ராஜா இந்த வைபவத்துக்கு தலைமை வகிப்பார்.

(ஐ)

பிரெஞ்சு மொழி கவிதைக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 12

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தின் ஏற்பாட்டில் பிரெஞ்சு மொழிக் கவிதைகளின் கண்காட்சி இன்று ஆரம்பமாகின்றது.

கந்தர்மடத்தில் உள்ள கழகத்தின் அலுவலகத்தில் இன்று பிற்பகல் 3 மணியளவில் 'கவிஞர்களின் வசந்தகாலம்' என்ற கவிதை வாசித்தலுடன் கண்காட்சி ஆரம்பமாகும்.

இக்கண்காட்சி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

பிரான்லினதும் பிரெஞ்சு மொழி பேசும் நாடுகளினதும் கவிதைகளுக்கும் இலக்கியத்துக்குமான மாதமாக இம்மாதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதையொட்டி இந்தக் கவிதைக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-3)

'பொன் அணிகள் போரும்' சமநிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம்,மார்ச்12

வடக்கின் மற்றொரு முக்கிய கிரிக்கெட் போட்டியான 'பொன் அணிகளின் போர்' துடுப்பாட்டப் போட்டியும் நேற்று சமநிலையில் முடிவடைந்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான இந்தப் போட்டி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித் தலைவர் டபிள்யூ.ஐ.ஜக்சன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினரை முதலில் துடுப்பெடுத்தாடும்படி கேட்டுக்கொண்டார்.

களம் இறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆர்.மயூரன், கே.ஐ.டிலான், என்.ஜனார்த்தனன், எஸ்.நிரோஷன் ஆகியோர் முறையே 28,25,18,11 ஆகிய ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான ஜே.சி.பெஸ்ரஸ் கொலின் 5 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஆர்.பி.ரெக்னோ 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் டபிள்யூ.ஐ.ஜக்சன் 10 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். தனது முதலாவது இன்னிங்ஸில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் இரண்டு ஓவர்கள் துடுப்பெடுத்தடி ஓட்டங்கள் எதனையும் பெறாத நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

நேற்று தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 6 விக்கெட் இழப்பிற்கு 247 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தினர்.

எ.ஜெயந்திரன், டபிள்யூ.ஐ.ஜக்சன், கே.ஜீதீஸ்வரன் ஆகியோர் முறையே 98, 59, 24 ஓட்டங்களையும் வி.ஜே.லூட்சன் ஆட்டம் இழக்காமல் 30 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர்களான எஸ்.அமலதிசன் 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் எல்.ஆர். நிகிதன் 15 ஓட்டங்களைக் கொடுத்து ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் களம் இறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 8 விக்கெட்டுக்களை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் கே.ஐ.டிலான் 11 ஓட்டங்களையும் வி.கொயல் செதான், ஜே.செந்தூரன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 19, 10 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான ஜே.சி.பெஸ்ரன் கொலின் 18 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் ஆர்.பி.ரெக்னோ ஆறு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் பி.மரீன்குமார் 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டித் தொடரில் பின்வருவோர் சிறந்த வீரர்களாகத் தெரிவாகினர்.

* சிறந்து துடுப்பட்ட வீரர் - பி.ஜெயந்திரன் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
* சிறந்த பந்து வீச்சாளர் ஜே.சி.பெஸ்ரஸ் கொலின் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
* சிறந்த களத்தடுப்பாளர் - ஆர்.மயூரன் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
* சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் - டபிள்யூ.ஐ.ஜக்சன் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
* சிறந்த ஆட்டநாயகன் - பி.ஜெயந்திரன் - சென்.பற்றிக் கல்லூரி.

(ஐ-190)

சினேகபூர்வ ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 12

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களுக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் இடையிலான ஒரு நாள் சினேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-190)

சமையலறைக் கழிவுகளை உரமாக்க புதிய கொள்கலன்

யாழ்.மாநகரசபை அறிமுகம் செய்தது

யாழ்ப்பாணம்,மார்ச்12

வீட்டின் சமையல் அறையில் சேரும் கழிவுப் பொருள்களை உரமாக்குவதற்கு யாழ். மாநகர சபை 'மக்கு உரமாக்கி' என்ற புதிய கொள்கலனை அறிமுகப்படுத்தியுள்ளது.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நாளாந்தம் சேரும் குப்பைகளைக் கூட்டெருவாக்கும் முயற்சி தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் நேற்றுக் காலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே 'மக்கு உரமாக்கி' கொள்கலன் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுசரணையுடன் யாழ்.மாநகர சபை இந்தத் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது.

முதற்கட்டமாக நூறு கொள்கலன்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

மேலும் நானூறு கொள்கலன்கள் அடுத்த வாரம் அளவில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளன என்றும் -

யாழ்.மாநகர சபைக் குட்பட்ட சனசமூக நிலையங்கள் ஊடாக மக்கள் தேவையான கொள்கலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

ஒரு கொள்கலனின் பெறுமதி சுமார் 700 ரூபாவாகும். இந்த நிதியினைச் செலுத்துபவர்கள் தமக்குத் தேவையான கொள்கலனைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ். மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

சமையல் அறையில் சேரும் மரக்கறிக் கழிவுகள்,தேயிலை, முட்டைக் கோதுகள் போன்றவற்றை இந்தக் கொள்கலனில் போட முடியும்.

இவை மூன்று மாதங்களில் தாமாகவே உக்கி உரமாகிவிடும். அதன் பின்னர் கிடைக்கும் உரத்தினை பொதுமக்கள் பயன்படுத்த முடியும் என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (எ-7)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நாளாந்தம் சேரும் கழிவுகளைக் கூட்டெருவாக்கும் திட்டத்திற்கான கொள்கலனை அறிமுகம் செய்துவைக்கும் வைபவம் நேற்றுக்காலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் உரையாற்றுவதையும் இதில் கலந்துகொண்ட சனசமூக நிலையத் தலைவர்கள், மாநகரசபை சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : பிரதீ)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

எண்ணெய் அகழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தை சூறையாடும் முயற்சி

''இலங்கையில் பெற்றோலிய வள ஆய்வுகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் தொடங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொண்டு வருகின்றது''

– இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார் இலங்கைத் தீவின் ரயில்வே, எரிபொருள்துறை, பெற்றோலியக் கனிய வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி.

நாட்டின் கள நிலைவரம் என்னவென்பதைப் புரிந்து கொள்ளாமல் அரசு முன்னெடுக்கும் ஒரு நடவடிக்கையாகவே இதைக் கருதுகின்றோம்.

இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தைத் தமது பூர்வீகத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்கு இந்தத் தீவின் ஆட்சி அதிகாரத்தில் உள்ள பங்களிப்புக் குறித்த விவகாரம் பெரும் இனப்பிணக்காகவும் ஆயுத மோதலாகவும் வெடித்துள்ள இந்தச் சூழ்நிலையில் இத்தகைய பெற்றோலிய வள ஆய்வு என்ற பெயரில் தனது கைங்கரியத்தை ஆரம்பித்திருக்கின்றது இனப்பிரச்சினையின் மற்றொரு தரப்பான சிங்கள ஆட்சித் தலைமை.

இலங்கையின் கடற்கரையோரப் பிரதேசத்தில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு தமிழர் தாயகத்தை ஒட்டியே அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

இந்நிலையில் ஆழ்கடலில் எரிபொருள் கனிய வள ஆய்வைத் துரிதப்படுத்த முயல்கிறது தென்னிலங்கை அரசு.

தமிழர் தாயகத்தை ஒட்டிய மன்னார் கடற்பரப்பிலேயே எண்ணெய் வளம் கடலுக்கு அடியில் மண்டிக் கிடப்பதாகக் கூறப்படுகின்றது.

தமிழர் தாயகத்துக்குரிய கடற்பரப்பில் புதைந்து கிடக்கும் எண்ணெய்ப் படிவுகளை அகழ்ந்து எடுக்கும் இலங்கை அரசின் முயற்சி, தமிழர்களின் தாயக வளத்தைச் சூறையாடும் ஒரு கபடத்தனமான எத்தனமாகும்.

அதுவும் இனப்பிரச்சினை சூடு பிடித்துள்ள இந்தச் சமயத்தில் அதற்கு இணக்கமான சுமுகத் தீர்வு காணும் முயற்சியைத் துரிதமாக முன்னெடுப்பதை விடுத்து, தமிழர் தயாகத்தில் புதைந்து கிடக்கும் இயற்கைக் கனிய வளத்தைச் சூறையாடும் முயற்சியைத் துரிதமாக முன்னெடுக்கத் துடிக்கின்றது சிங்கள அரசு.

கடந்த ஆண்டு பிற்பகுதியில் – ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிகாரத்தில் இருந்தபோது – இவ்வாறு தமிழர் தாயக எண்ணெய் வளத்தைச் சூறையாடுவதற்கான கபடத் திட்டம் வகுக்கப்பட்டது. அந்த விவகாரத்துக்காகத் தனியான ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டதும் இந்தக் காலப் பகுதியில்தான்.

மன்னார் வளைகுடாவை அண்டிய பிரதேசத்தில் சேது சமுத்திரத்திட்டம் என்ற பெயரில் இந்தியத் தரப்பு அதிகம் பிரசன்னமாக இருக்கவும் அதன் மூலம் அப்பகுதியில் இந்தியப் பாதுகாப்பு வலுப்படுத்தப்படவும் பார்த்தும் பாராமலும் இலங்கை அரசு விட்டுப் பிடித்ததும் இந்தக் கபடத் தனமான எத்தனம் கருதித்தான்.

அப்பகுதியில், சேது சமுத்திரம் ஊடான போக்குவரத்துக்கான பாதுகாப்பு என்ற கோதாவில் இந்தியத் தரப்பின் பாதுகாப்பு நடவடிக்கைகளும் பிரசன்னமும் அதிகரிக்குமானால் –

'அப்பிரதேசத்தை அண்டிய கடற்பகுதியில் தான் மேற்கொள்ளும் எண்ணெய் வள அகழ்வு நடவடிக்கைகளுக்கும் இந்தியத் தரப்பின் பாதுகாப்புக் கிட்டும், புலிகளின் அச்சுறுத்தல் குறையும் – என்றெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டது தென்னிலங்கை அரசுத் தலைமை.

அதனால்தான், சேது சமுத்திரத்தை ஆழப்படுத்தி அதன் ஊடாக கடல் போக்குவரத்தை இந்தியத் தரப்பு ஏற்படுத்துவது பொருளாதார மற்றும் இராணுவச் சமநிலை விவகாரங்களில் இலங்கைக்குப் பெரும் பாதிப்பாகவும் அச்சுறுத்தலாகவும் இருந்த போதிலும் அது குறித்து தென்னிலங்கை அரசு அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

இலங்கையின் ஓய்வுபெற்ற மூத்த இராணுவ அதிகாரிகளை இந்தக் கனியவள ஆய்வு நடவடிக்கைகளுக்குள் இலங்கைத் தரப்பு இழுத்து விட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இது, தமது தாயகத்தைச் சூறையாடும் கபடத்திட்டம் எனக் குறிப்பிட்டு இத்திட்டத்துக்கு எதிராகத் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் சீறிப் பாய்ந்தால் அவர்களை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையின் ஓர் அங்கம் எனக் கருதப்படுகின்றது.

உலகில் ஆழ்கடல் எண்ணெய் வள ஆய்விலும் அகழ்வு நடவடிக்கைகளிலும் முன்னணியில் இருக்கும் நாடு நோர்வே. இலங்கைத் தீவுக்கு அயலில் வல்லாதிக்க நாடாகவும் எண்ணெய் வள ஆய்வு மையத்துக்கு நெருங்கிய தேசமாகவும் இந்த நடவடிக்கையில் அனுபவமிக்க நாடாகவும் இருப்பது இந்தியா.

இந்த இரு நாடுகளையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு தமிழர் தாயகப் பிரதேசத்தின் வளத்தைச் சூறையாடத் திட்டமிடுகின்றது இலங்கை அரசுத் தலைமை.

அத்திட்டத்தின் சில கட்டங்கள் பற்றிய தகவல்களையே அமைச்சர் பௌஸி அண்மைக் காலமாக வெளியிட்டு வருகின்றார். தமிழர் தரப்பின் செய்தியாக அவருக்கு ஒன்றைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இலங்கைத்தீவில் தமிழரின் இனப்பிரச்சினைக்கு நீதியான – நியாயமான – பல தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய – ஒரு தீர்வு காணப்பட வேண்டும். அப்படிக் காணப்பட்டு, அந்தத் தீர்வுச் செயற்பாட்டின் மூலம் தமிழர் தாயகப் பிரதேசத்தில் எரிபொருள் அகழ்வு வேலை நடந்தால் அதைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்வர் – வரவேற்பர்.

அதை விடுத்து, கொழும்பிலிருந்து வரும் ஆட்சியாளர்களின் ஏவலுக்கு அடங்கி, தமிழர் தாயகத்தைச் சுரண்ட யாராவது முயல்வார்களாயின் தமிழ்த் தேசிய சக்திகள் அதற்கு அனுமதிக்கமாட்டா என்பதை அரசுத் தலைமை புரிந்து கொள்வது நல்லது.

அதையும் மீறி முயற்சித்தால் விளைவுகள் விபரீதமாகலாம்.

எண்ணெய் அகழ்வுப் பணி குறித்து அதிகம் துள்ளிக் குதிக்கும் அமைச்சர் பௌஸிக்கு இந்த நிலைப்பாடு பற்றிய தகவல் சமர்ப்பணம்.

மகளிர் குழுக்கள் சங்கமிக்கும் நிகழ்வுத்திடல் 25, 26ஆம் திகதிகளில்

யாழ்.அடைக்கல மாதா விளையாட்டு மைதானத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் குழுக்கள் சங்கமிக்கும் பல் நிகழ்வுத்திடல் நிகழ்வு எதிர்வரும் 25ஆம், 26 ஆம் திகதிகளில் யாழ். அடைக்கல மாதா ஆலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவிருக்கின்றது.

'நாம் தொடங்குவோம்' என்ற தொனிப் பொருளில் யாழ்.பால், பால் நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான செயற்பாட்டுக்குழு இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மகளிர் குழுக்களின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர்.

மகளிர் குழுக்கள் ஓர் இடத்தில் சந்திக்கவும் – அதனூடாக அவர்கள் பல்வேறு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் –

ஒரு களமாக இந்த நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. பெண்கள் தங்கள் திறன்களை வெளிக்கொணரவும் இந்த நிகழ்வு உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது. கண்காட்சிகள், பேச்சுகள், நாடகம் போன்ற நிகழ்வுகள் இதில் இடம்பெறும். (எ-3)

ஊர்காவற்றுறைக்கு நாளை 24 மணிநேர மின்சாரம் கிடைக்கும்

ஊர்காவற்றுறை,மார்ச்12

தீவுப்பகுதிக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக நாளை திங்கட்கிழமை முதல் ஊர்காவற்றுறைக்கு 24 மணிநேர மின்சாரம் கிடைக்கவுள்ளது.

இதுவரை காலமும் ஊர்காவற்றுறைக்கு கிழமை நாள்களில் காலை 10 மணிமுதல் 2 மணிவரையும் அதேபோல் மாலை 6 மணி முதல் இரவு 11 மணிவரையும் –

வார விடுமுறை தினங்களில் மாலை 4.30 மணிமுதல் இரவு 11 மணிவரையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டது.

எனினும், யாழ். அரச அதிபர், பிரதேச மட்டத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் மின் சாரசபை அதிகாரிகள் ஆகியோர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளையடுத்து 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

காரைநகர் கடற்கரையோரமாகவும், ஊர்காவற்றுறை கடற்கரையோரமாகவும் நிறுவப்பட்டுள்ள மின்கோபுரங்கள் ஊடாக கடலிற்கு மேலாக இணைப்பை ஏற்படுத்தி தீவுப் பகுதிக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கும் திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

எனினும், தவிர்க்கமுடியாத சில காரணங்களையடுத்து இந்தப் பணிகளில் மந்தநிலை காணப்பட்டது. இது விடயமாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பலமுறை பிரஸ்தாபிக்கப்பட்டும் இருந்தது.

இந்த நிலையில் – கடந்த ஒரு சில வாரங்களாக இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளையடுத்து மின்சாரம் வழங்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

ஊர்காவற்றுறைக்கு 24 மணிநேர மின்சாரம் கிடைக்கப்பெற்றதும், ஊர்காவற்றுறை வைத்தியசாலை, பிரதேச திணைக்களங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், பொதுமக்கள் இதுவரைகாலமும் மின்சாரம் பெறுவதில் இருந்து வந்த சிரமங்கள் நீக்கப்படும் என பிரதேச நிர்வாகத்திற்கு பொறுப்பான அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-16)

படையினர் நடத்திய போர்ப்பயிற்சி மீனவரின் படகினைப் பதம் பார்த்தது

மணற்காடு கடற்கரையில் சம்பவம்

கரவெட்டி,மார்ச் 12

மணற்காடு கடற்கரைப் பகுதியில் படையினர் நடத்திய போர்ப்பயிற்சி காரணமாக அப்பகுதி மீனவர்களால் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் படகு ஒன்று பலத்த சேதமடைந்தது.

கடந்த வியாழனன்று முற்பகல் 11 மணிமுதல் படையினர் ஷெல் தாக்குதலை நடத்தியும் துப்பாக்கிச் சூடு மற்றும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர் என்றும் –

கடலை, நோக்கியும் தரையை நோக்கியும் இடம்பெற்ற இந்தப் பயிற்சியின் போது மகேஸ்வரன் விஜயன் என்பவருக்குச் சொந்தமான ரூபா 90 ஆயிரம் பெறுமதியான பிளாஸ்ரிக் படகு முற்றாகச் சேதமடைந்தது என்றும் – தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் – மீனவரின் படகு சேதமடைந்தமை குறித்து மணற்காடு கடற்றொழிலாளர் சங்கத்துக்கும் பருத்தித்துறை பிரதேச செயலருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-70-204)

கோண்டாவிலில் இன்று ரதோற்சவம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் ரதோற்சவம் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

கடந்த 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவந்த பெருந் திருவிழாவில் இன்று ரதோற்சவமும் நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி மரபுமுறைப்படி அடியார்கள் பங்குபற்றும் சுளகுமடை இடம்பெறும். (3)

சைவசமய அபிவிருத்திக் கழகப் பரீட்சை பதினேழு பாடசாலைகளில் இன்று நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்.12

வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவ சமய அறிவுப் பரீட்சை 17 பாடசாலைகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் நடைபெறவுள்ளது.

யாழ்.இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் –

நயினாதீவு மகாவித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம், கொட்டடி நமசிவாய வித்தியாலயம், கோப்பாய் நாவலர் வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தாக் கல்லூரி –

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.மகா வித்தியாலயம், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம், ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது

தரம் ஒன்று தொடக்கம் 13 வரையிலான வகுப்புகளைச் சேர்ந்த நாலாயிரத்து 300 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று கழகத்தின் பரீட்சைச் செயலாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (எ)

உதயவாக்கு

வாழ்க்கையின் முற்பகுதியில் வெற்றிபெற சுறுசுறுப்பும், ஊக்கமும், நம்பிக்கையும் தேவை. பிற்பகுதியில் வெற்றிபெறுவதற்கு பொறுமையும் தன்னடக்கமும் அவசியம் தேவை.

– ஓர் அறிஞர்.

நாளை

மாசி 29
திங்கட்கிழமை
13.03.2006
திதி : சதுர்த்தசி
பின்னிரவு : 03.39 வரை
நட்சத்திரம் : மகம்
மாசி மகம்
முன்னிரவு : 07.45
சுபநேரம் : 12.22 – 01.52
ராகுகாலம் : 07.52 – 09.22
(யாவும் பழைய நேரப்படி)

விநோத உருவில் ஆட்டுக்குட்டி

சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் வசிக்கும் எஸ்.சிவராஜா என்பவர் வீட்டில் வளர்க்கும் ஆடு, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரு குட்டிகளை ஈன்றது – அவற்றில் ஒரு குட்டி ஆட்டின் தோற்றத்துடனும் மற்றைய குட்டி விநோதமான உருவத்திலும் காணப்பட்டது. விநோதமான குட்டியை பலர் சென்று பார்வையிட்டனர்.

விநோதமான உருவத்துடன் காணப்பட்ட குட்டி அன்றைய தினமே உயிரிழந்துவிட்டது. அந்த ஆட்டுக் குட்டியினையே படத்தில் காண்கின்றீர்கள். (ஐ-7)

பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

புலோலி வடக்கை நிரந்தர வதிவிடமாகவும் பொலிகண்டி கிழக்கு ஆலடியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பத்திநாதர் ஞானமுத்து யோசேப்பு- றெஜினசீலி ஆகியோரின் மகளாகிய "நாஸ் பபினம்மா" ஆகிய நான் இன்று (12-03-2006) முதல் எனது பெயரை "சுகந்தினி" என மாற்றியுள்ளேன். இன்று முதல் சகல ஆவணங்களிலும் இதனையே பயன்படுத்துவேன் என்று பகிரங்கப்படுத்துகின்றேன்.

ஞா.சுகந்தினி,
(ஞானமுத்து சுகந்தினி).

(47992)(26.17)

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து) ஆட்டோ ஏலவிற்பனை

எமது சங்கத்தின் பாவனையில் உள்ள 202- தொடர் பதிவு இலக்கமுள்ள பஜாஜ் ஆட்டோ 18-03-2006 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு சங்கத்தில் வைத்து ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. 500/- மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாகச் செலுத்தி ஏலவிற்பனையில் கலந்துகொள்ளலாம். ஏலத்தில் பெறுபவர் உடன் பணத்தைச் செலுத்தி வாகனத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பொதுமுகாமையாளர். (சி/48294)(26.17)

பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
09-09-1955

இறப்பு
26-02-1991

திருமதி
ஞானேஸ்வரன் கமலாற்பிகை (மணி)
(புங்குடுதீவு, வட்டாரம் -12)
திதி: 12.03.2006

அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி
பண்பால் உயர்ந்து நின்ற எம் அன்புத் தெய்வமே!
ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

குறிப்பு: எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவாக புங்குடுதீவு தல்லைவற்று முருகன் ஆலயத்தில் இன்று (12-03-2006) ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும். அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலைமணி வீதி,
கட்டப்பிராய்.
தொ.பே.4591875 (47907)(26.17)

நா.தேவி (தங்கை),
குகதீபன் (மகன்).

கிண்ணியாவில் துப்பாக்கிச் சூடு

திருகோணமலை, கிண்ணியாவில் நேற்றுமுன் தினம் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகிக் காயம் அடைந்தார். சேருவில, சிவபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுதாகர் என்பவரே துப்பாக் கிச் சூட்டுக்கு உள்ளானவர் என்று தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர். (எ-க)

இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்.12

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் மற்றும் சனசமூக நிலையம் வருடந் தோறும் 'விக்ரம்ராஜன் கங்கு" ஞாபகார்த்தமாக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இவ்வாண்டுக்கான ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இன்று மோதும் அணிகள் வருமாறு:

✸ காலை 8.30 மணிக்கு- மானிப்பாய் பீரீஸ் வி.க. எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க.

✸ பிற்பகல் ஒரு மணி - யாழ்.பல்கலைக் கழக வி.க. எதிர் ஜொலிஸ்ரார் வி.க.(3-203)

தாச்சிச்சுற்றுப் போட்டி

கைதடி, மார்ச்.12

கைதடி மத்தி குமர நகர் விளையாட்டுக் கழகம், தென்மராட்சி ரீதியாக நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு குமரநகர் சனசமூக நிலையத் தலைவர் சி.சிவபாதம் தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

இறுதிப்போட்டியில் 16 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான சுற்றுப்போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி உதயசூரியன் விளையாட்டுக் கழகமும்-16 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகமும்-

பெண்களுக்கான சுற்றுப்போட்டியில் நாவற்குழி அருள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தச்சந்தோப்பு பிக்பூட் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (எ-75)

31ஆம் நாள் நினைவஞ்சலி

உதயம்
06
-
01
-
1954

மறைவு
10
-
02
-
2006

அமரர்
நடராசா குமரேசமூர்த்தி
(சூரி சேர்)

உங்கள் குழந்தைகள் நாம்
எங்கள் அறிவுப்பசி தீர்க்க
தூக்கம் கலைந்து எழுந்திடுவீர்
தேடுகிறோம் தினம் இங்கே.

துன்னாலை,
கரவெட்டி.

அன்னாரின் பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்:
10 ஆம் தர மாணவிகள்.

(சி/48296)(26.17)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
07
.
02
.
1944

ஆண்டவன் அடியில்
11
.
02
.
2006

அமரர் சின்னத்துரை நேசதுரை
(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

11.02.2006 அன்று சிவபதமடைந்த சின்னத்துரை நேசதுரை அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (13.03.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த அந்தியேட்டி நிகழ்விலும் அதன் பின்னர் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

செல்வதி, அல்வாய். (47998)(32-26-17) -குடும்பத்தினர்.

புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி

தேவஸ்தான தேர்த்திருவிழா சிறப்புமலர் - 2006

புங்குடுதீவு புண்ணிய பூமி

முருகன் அடியார்களுக்கு!

புங்குடுதீவு கிழக்கு தல்லையப்பற்றில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் முருகப்பெருமானுடைய மகோற்சவ விழாவை மனக் கண் நிறுத்தி இறைவன் பக்தகோடிகளைத் தானேநோக்கித் தேடிவற்கு அருள் பாலிக்கும்பஞ்சகிருத்திய நிகழ்வு மிகச்சிறப்பாக இடம்பெயர்வின் பின் மீண்டும் இடம்பெறுவதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

புங்குடுதீவு புண்ணியபூமி மட்டுமன்றி கந்தபுராணக் கலாசாரத்தின் பண்டைய ஊற்றாக விளங்கியது இவ் ஆலயம் என்பதை அறியும் போது அடியார்க்கும் அடியேன் என தொண்டர் தொகை கண்ட சுந்தரரை நினைவுகூருகிறேன். 'மண்ணில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் விழாப் பொலிவு கண்டு இன் புறவே ....' இந்நிகழ்வை சிறப்பாகச்செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

குருமகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள்.

தேவஸ்தான பிரதம குருமணியின் ஆசியுரை

மெய்யடியார்களே!

புங்குடுதீவு எனும் புனித மண்ணில் தலையப்பற்று எனும் சீர் மிகுசேத்திரத்தில் பல நூறு வருடங்களாக அருளாட்சி புரியும் கந்தபுராண கலாசாரத்தின் உறைவிடமாய் விளங்கி கந்தன் புகழ் பாடுகின்ற இப்புனித தலத்தின் பஞ்சகிருத்தியத்தை நினைவூட்டி அருளாட்சி புரியும் வருடாந்த மஹோற்சவம் இடப்பெயர்வின் பின் அவன் திருவருளால் நடந்தேறி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

இத் தெய்வ வழிபாட்டை நீதியானதும் நிலையானதாகக் கொண்டு நடத்தும் செம்மலை செல்வங்களுக்கும் மெய்யடியார்களுக்கும் முருக வழிபாட்டினை பெருக்கி அவர்கள் உன்னுடன் மீண்டும் நெடுநாள் வாழ அருள்வாய்.

சிவாகம கிரியாஜோதி
சிவஸ்ரீ க.குகதாசக்குருக்கள் (ஆலய பிரதம குரு)
புங்குடுதீவு 12.

பரிபாலன சபைத்தலைவரின் ஆசியுரை

"மண்ணில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் விழாப் பொலிவு கண்டு இன்புறலாகும்"

சமயம் என்பது ஒரு நம்பிக்கை. ஐம்புலன்களால் அறியப்படுபவை மட்டுமே உண்மை என ஏற்றுக்கொள்வது விஞ்ஞானம். ஐம் புலன்களுக்கு அப்பால் நின்று தன்னைத்தான் அறிவதே மெஞ்ஞானம். தன்னைத்தான் அறிந்தவனே எல்லாவற் றையும் அறிந்தவன். அவனே ஏகனாகவும் அனேகனாகவும் உள்ளவன்.

"One who knows himself knows everything"

நம்புத்தியன்று சித்தமன்று மனமன்று உடம்பன்று நாம் ஆத்மனே. இதனை நாம் மறந்து வாழ்கிறோம்... இதை நினைவுபடுத்தினால் பிறவிப்பிணியை நீக்கிவிடலாம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

சுபம்

வைத்தியகலாநிதி-
ஆ-பேரின்பநாதன்.J.P, (தலைவர்).

தல்லையப்பற்று முருகன் வேண்டுவனவற்றைத் தருபவன்

இச்சிவபூமியில் சப்தஸ்தானங்களில் நடுநாயகமாக விளங்குவது புங்குடுதீவு. இத்தீவு சைவசான்றோர்களையும் கல்வி மான்களையும் பெருந்திக்கிளார்களையும் இறையருளால் என்றும் கொண்டு இலங்குவது. யாழ்.நகரில் அன்று வேதாகமப்பாடசாலை முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இடம் இம்மண்தான் என்பது இம்மண்ணின் பெருமைக்கு, ஆன்மீக ஆழத்தின் தொன்மைக்குச்சான்றாகும். இடப் பெயர்வின் முன் இங்கு உள்ள 20 சைவ ஆலயங்களில் 16 ஆலயங்களில் தேர் ஓடிய பெருமை கொண்ட மண் இது. கலியுகவரதன் கந்தன் மனம் விரும்பி அமைந்த பதி தலையப்பற்று முருகன் ஆலயம். தமிழ்த் தெய்வமான முருகன் குன்றுதோறும் ஆடுபவன் மட்டுமன்றி தன்னை நின்றுபோற்றுபவர் நெஞ்சத்தும் நிறைந்து விளங்குபவன். முருக வழிபாடு சிந்துவெளிகாலத்தில் இருந்தது என்பதுடன் சங்ககாலத்தில் மிகச் சிறப்புற்று விளங்கியமையை தோல்காப்பிய வரிகளால் "சேயோன் முருகன்) மேய மைவரை (மலை) உலகு "எனும் தொல்காப்பிய வரிகளால் அறியமுடிகின்றது. தொல்காப்பியரின் குருவான அகத்தியரின் குரு முருகனே. ஔவைக்கு, குமரகுருபரர்க்கு, கச்சியப்பருக்கு, ஆதிசங்கரருக்கு, தன்னை நன்கு தமிழ்பாடுமாறு அருள்வாக்கு அளித்தான் முருகன். " முருகு " என்ற பெயரால் காக்கும் எழுத்தாகிய உகரமே இம் மூன்று எழுத்துகளாலும் இடம் பெற்றுள்ளது. மன இருளை - அறியாமையை அகற்றுபவன் குமரன். பிரம்மனுக்கு பிரணவத்தின் பொருளை அறிவித்ததுடன் தந்தை சிவனுக்கே குருவாக மடியிருந்து அப்பொருளை உபதேசித்த குருநாதன். அமரர் வாழ்வும் அசுரர் தாழ்வும் அவதரித்தவன். பரமன் பொறி ஆறும்பொய்கையில் குழந்தையானவன். வரமதால் மாதர் அறுவர் மார்பிரந்து முழலையானவன். கரமதால் அன்னை அணைத்தபோது ஒருவனானவன். தன் தாய் வழங்கிய ஞான சக்தி வேலாக இன்று தல்லையப்பற்றில் காட்சிதருபவன்.

மகாவம்சம்பற்றிப் பேசப்படும் இக்காலகட்டத்தில் இவ் ஆலயத்தின் வரலாறு தமிழர் தொன்மையைப் பறைசாற்றும்வலாற்று ஆதாரமாகும். இவ்ஆலய வலாறு தொண்டைமண்டல சோழ அரசு மரபினரான தனிநாயகத்தினுடைய யாழப்பாண அரசாட்சியுடன் தொடர்புடையது. அவரும் அவரது ஆறு சகோதரர்களும் நெடுந்தீவு, நவாலி, இருபாலை, உடுப்பிட்டி,மறவன்புலோ, பொன்னாவெளி ஆகிய பிரதேசங்களில் கொலுவீற்றிருந்து அரசாட்சி செய்தமையை "யாழ்ப்பாண சரித்திரம்" , "வையார் பாடல்", "கைலாயமாலை", "யாழ்ப்பாண வைபவமாலை" என்ற யாழ்ப்பாண சரித்திர நூல்கள் வாயிலாக அறியலாம். அவற்றில் தனிநாயகத்தின் மரபினருக்கு தீவகத்தில் பதினாறு ஆலயங்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. அவ்வாலயங்களில் ஒன்றே தல்லையப்பற்று சங்கர மூர்த்தி முருகமூர்த்தி ஆலயமாகும். இவ்வாலயத்தின் மூலவர் வேலாக இருப்பதனால் சிவாசாரன வரலாற்றிற்கு முற்பட்ட ஆலயமாக இருந்திருக்க வேண்டும். ஒல்லாந்தர்கள் தமது நிர்வாக காலத்தில் யாழ்ப்பாண அரசை 36 பிரிவு களாக (அலகுகளாக) பிரித்து நிர்வகித்தனர். அவற்றில் ஒரு நிர்வாக அலகே புங்குடுதீவு தல்லையற்பற்று ஆகும். தனி நாயகத்தின் எச்சமான கதிரவேலு மணியகாரர் தல்லையப் பற்றிலிருந்து தீவகத்தை பரிபாலனம் செய்தார். யாழ் கச்சேரி பதிவேடுகளின் படி இவ்வாலயத்தின் பதிவுமணியகாருடைய மகள் "காமாட்சிப் பிள்ளை" வைவத் தியநாதர் உடையார் பெயரிலேயே உள்ளது. இவரது மகனே 1948 வரை யாழ்ப்பாணத்தின் கடைசி மணியகாரன் முத்து குமாரு ஆவார். காமாட்சிப்பிள்ளையின் யாழ்ப்பாண இடப்பெயர் வினால் அவரது தம்பியார் புங்குடுதீவு இராமநாத உடையாரிடம் கையளிக்கப்பட்டது. இவரது தலைமுறையினரதும் பொதுமக்களினதும் உதவுடனும் இவ்வாலயம் பல குடமுழுக்குகளைக் கண்டு இடப்பெயர்வின் பின் இவ்வருடம் மகோற்சவம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கந்தபுராணக் கலாசாரத்தின் மையம்.

யாழ்ப்பாணக் கந்தபுராண கலாசாரத்தின் ஆரம்ப மையமாக விளங்கியது இவ் ஆலயமே. நாவலரினதும், பண்டிதமணி ஐயாவினதும் சீடர்களான இந்துபோட்சேதுபதி ஆசிரியர், ஆறுமுகம் ஆசிரியர் என்போர் இவ்வாலயத்திலும் யாழ்நகர் ஆலயங்களிலும் கந்தபுராணத்தை களைகட்டப்பாடி பயன் சொன்னவர்கள். அவர் பின் ஆறுமுக ஆசிரியரின் மகள் கமலாம்பிகை ஆசிரியையும் அவர் கணவர் அம்பல வாணர் ஆசிரியர் அவர்களும், வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களும் கந்தபுராணத்தை தீவகத்திலும் யாழ்நகரிலும் வாய்ப்பூட்டாகவே சொல்லும் வல்லமை மிக்கவர்களாக விளங்கியவர்கள். கந்தபுராண கலாசாரத்தை பட்டி தொட்டி எங்கும் கட்டி வளர்த்தவர்கள். அப்பணியை அருள் பேராசான் இரத்தினசபாபதி ஆசிரியர் அவர்களும் இங்கும் இன்றும் தொடர்ந்து செய்து வருகின்றார். இவ்வாலயத்திற்கு ஆயிரக்கணக்கான பரப்புகள் முன்னோர்களால் தர்மசாதனம் செய்யப்பட்டுள்ளது. அந்நிலையங்களில் ஆலய நிர்வாகம், அகங்கம், பாலர்பாடசாலை, சனசமூகநிலையம், கிராம முன்னேற்றச்சங்கம் என்பவற்றை நிறுவி சமூகப்பணியாற்றி வருகின்றது இன்றும்.

ஆலய விழாக்கள்

முருகனுடைய விசேட தினங்கள் சிறப்பாக இங்கு இடம் பெறுவதுடன் நிரந்தர அட்சகரினது இரண்டு காலப்பூசையேநாட்டு நிலைமை காரணமாக தற்போது நடந்து வருகின்றது. மாசி மகத்தீர்த்தோற்சவமே இவ் ஆலயத்தின் திருவிழாப் பட்சமாகும். பூங்காவனம் உட்பட 11 நாள்கள்இங்கு மகோற்சவம் இடம்பெறுகின்றது. அழகு ஒழுக தேரிலே வள்ளி தெய்வயானை சமேதராக முருகவேள் பக்தகோடிகளை தேடிவரும் ரதோற்சவ நன்நாள் இவ்ஆலயத்தில் இன்று ஆகும்.

தம்பிஜயா தேவதாஸ்
B.A.(Cey., B.Ed. Cey).
MA. (Journalism And Mass Communication)

விழா சிறப்புற வாழ்த்துவோர்:-

நிரு ரஸ்வதி விலாஸ்
பலாலி வீதி, நீர்வேலி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

கண்ணன் லொஜ்
இராமநாதன் வீதி, நீர்வேலி, நல்லூர்.

நாதன் பாட்டா
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

கமலா காலணி அகம்
இல.4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 3097

அபிராமி புடவையகம்
இல.159, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மனித மலத்திலிருந்து இயற்கை உரம் காரைநகரில் பரீட்சார்த்த முயற்சி ஆரம்பம்

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில்

காரைநகர், மார்ச் 12

பட்டினிக்கு எதிரான நிறுவனம் மனித மலத்தில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கும் பரீட்சார்த்த முயற்சி ஒன்றைக் காரைநகர் நீலங்காடு கிராமத்தில் ஆரம்பித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் காரைநகர் நீலங்காடு கிராமத்தில் இயற்கை உரம் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்த மலசல கூடத்தில் இருந்து உற்பத்தியாக்கப்பட்ட உரம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை வெளியே எடுக்கப் பட்டு அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், அரச, அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன், உர மாதிரியையும் பார்வையிட்டனர். அத்துடன், மலசல கூடத்தின் அமைப்பு முறைகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

இதில் கலந்து கொண்ட பட்டினிக் கெதிரான நிறுவன பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில் :-

இந்தப்பரீட்சார்த்த முயற்சி சூழலுக்கு மாசு ஏற்படாதவாறு வெற்றியளித்துள்ளதால் இதனை ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரித்து வீட்டுத் தோட்டம் மற்றும், வாழை, மரக்கறி செய்கை உள்ளிட்ட பயிர்ச் செய்கைகளுக்குப் பயன்படுத்த முடியும்-

இந்தத் திட்டத்திற்கென முதற் தடவையாக நீலங்காடு கிராமத்தில் 5 மலசல கூடங்கள் தலா 36 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. (எ-73)

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் மனித மலத்திலிருந்து தயாரிக்கப்பட்ட இயற்கை உரத்தை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காரைநகர் நீலங்காட்டில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பட்டினிக்கு எதிரான நிறுவன திட்ட முகாமையாளர் பசுபதிராஜ் கண்ணன் உரத்தினை அறிமுகம் செய்து வைப்பதையும், தயாரிக்கப்பட்ட உரத்தினையும், விவசாய பீட விரிவுரையாளர் திருமதி எஸ்.மிகுந்தன் உரஉற்பத்தியாகும் மலகூடத்தினை பார்வையிடுவதையும், இயற்கை உரம் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மலசலகூடத்தின் தோற்றத்தினையும் உரம் தயாரிப்புக் குறித்துவிளக்கம் அளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (எ-73)

தையல் கண்காட்சி

கைதடி,மார்ச்12

தியாகி அறக்கொடை நிறுவனத்தினால் கைதடியில் நடத்தப்படும் தையல் பயிற்சி மாணவர்களின் தையல் கண்காட்சி இன்று காலை 9.30 மணிக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தின் செயலாளர் செ.கமலநாதன் தலைமையில் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.சிறீ[illegible] சனும் கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் ந.பாலச்சந்[illegible] ரனும் கலந்துகொள்வர். (எ-75)

கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம்

வலி.தென்மேற்கு (சண்டி[illegible]பாம்) பிரதேச செயலகப் பிரிவில் [illegible] இரண்டு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

மாரீசன்கூடல், உயரப்புலம், [illegible] அபிவிருத்திச் சங்கம், சில்லாலை [illegible] மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய சங்கங்களே இவ்வாறு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளன.

வலி. தென்மேற்கு பிரதேச செயலக பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேத்திரா சுதாகர் தலைமையில் இந்த அங்குரார்ப்பணக் கூட்டங்கள் நடைபெற்றன.(எ-135)

அரசு மீண்டும் தவறிழைத்தால் வீதியில் இறங்கிப்போராடுவோம்

ஹெலஉறுமய எச்சரிக்கிறது

கொழும்பு,மார்ச் 12

ஜெனீவாப் பேச்சுக்களில் சென்றமுறை செய்ததுபோல் ஜனாதிபதி இந்த முறையும் தவறுவிட்டுவிடக்கூடாது. அவ்வாறு தவறுவிட்டால் நாம் அரசுக்கு வழங்கிவரும் எமது ஆதரவை வாபஸ் பெற்று வீதியில் இறங்கி அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவோம்.

ஜாதிக ஹெல உறுமய சகல கட்சி மாநாட்டையடுத்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த உடன்பாடனது புலிகளின் கட்டுப்பட்டிலுள்ள பகுதிகளை அங்கீகரிக்கின்றது என்பதை நாம் அறிவோம். அங்கு அவர்கள் ஆயுதங்களை வைத்திருக்க முடியும். நாம் கருணா குழு மற்றும் ஆயுதக் கும்பல்களை நிராயுத பாணிகளாக்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளோம். இது எந்த அளவுக்கு இராணுவத்தால் சாத்தியமாகியுள்ளது என்பது குறித்து கண்காணிப்புக்குழு அடுத்த சுற்றுப் பேச்சுக்களின் போது அறிக்கை சமர்ப்பிக்கவிருக்கின்றது என்று தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமய மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கொழும்பில் கொலைகளைச் செய்விப்பதற்குப் புலிகள் குற்றவாளிக் கும்பல்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. இதைப்பயன்படுத்தி ஆயுதக்குழுக்களை நிராயுதபாணிகளாக்காமை குறித்து அரசின் மீது புலிகள் பழியைச் சுமத்துவார்கள் டிசெம்பரிலும் ஜனவரியிலும் இடம்பெற்ற பல சம்பவங்களுக்கு இவ்வாறுதான் ஆயுதக்குழுக்களின் மீதும் பொதுமக்கள் மீதும் புலிகள் பழியைச் சுமத்தினார்கள்.

கருணா குழு செயற்படுவதால் புலிகளால் போரைத் தொடங்க முடியவில்லை. கருணா குழுவுக்குப் பயந்தே புலிகள் போரைத் தொடங்காமல் தயக்கம் காட்டுகின்றனர். எனவே கருணா குழு இருப்பது அவசியம். கருணாகுழுவை ஆயுதங்களைக் களையும் படி அரசு செய்யுமானால் அது கவலைக்குரியது.

இந்திய அமைதிகாக்கும் படைகளை எதிர்த்துப் போராடப் புலிகளுக்கு ரணசிங்க பிரேமதாஸ ஆயுதம் வழங்கியது போலவே இது இருக்கும்.

- இவ்வாறு ஜாதிக ஹெலஉறுமய தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ப)



சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

தரமான புறொயிலர் கோழிகள் கூடிய, குறைந்த நிறைகளில் விற்பனைக்குண்டு. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். தொடர்பு: எஸ்.சின்னராசா, 77/3, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு. (47876)

Sharp எப்சன் இரு புறொஜெக்ரர் மற்றும் MD 90 மோட்டார் சைக்கிள் (மொடல் நம்பர் 22), TVS GLX 125 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777111400 - சிறி (47909)

நாரந்தனையில் வீட்டுக்கூரைகள், ஓடுகள் யன்னல்கள், கதவுகள் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 270666 (47973)

மோட்டோறோலா சோலருடன் விற்பனைக்குண்டு. (Booth box உண்டு) தொடர்பு: 021 2264377 (47890)

Washing Mision, சைக்கிள், KTV காட்டுடன் Recever விற்பனைக்குண்டு. தொடர்பு: 521, நாவலர் மண்டபம் முன்பாக, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (47980)

இன விருத்தி செய்யக்கூடிய ஒரு வயது நிரம்பிய நல்லின யமுனாபாரி கிடாய் ஆடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 70, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச் சந்தி அருகில், யாழ்ப்பாணம். (47977)

நீர் இறைக்கும் இயந்திரங்கள் (வில்லியஸ் மாக் - 25 மாக்-12), றொபின் பிஸ்ரன் ஸ்ராண்ரட் - Ey - 20 யப்பான். உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 103, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (ICRC அருகில்) (47983)

ரொயட்டா ஹயஸ் வான் 54 xxxx உடன் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு 0777-173073, 026 222 1341 தொடர்பு கொள்ளவும். (சி-48291)

பந்தல் விற்பனைக்கு

50 அடி சொக்கட்டான் பந்தல் அதனுடன் கூடிய மணவறை, கதிரைகள், சமையற்பாத்திரங்கள், சில்வர் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: சீ.மகாலிங்கம் (ராசன்), தில்லையம்பதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். T.P. 0776002626. (47900)

கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 12 Sri xxx தொடரிலக்கமுடைய லான்சர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776147201 (47876)

காணி விற்பனைக்கு

நல்லூர் பருத்தித்துறை வீதியில் 100 அடி அகல முகப்புடன் கூடிய நீள் சதுர வடிவமான நன்கு பராமரிக்கப்பட்ட 5 ½ பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777325545, 0777382928. (சி/48256)

கோண்டாவில் மேற்கு, K.K.S. வீதியில் இருந்து 100 யார் தூரத்தில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: 2590978, 0714179225 (சி/48221)

நவக்கிரியில் 110 பரப்புக் காணி மற்றும் 13½ பரப்பு வெறும் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776569 570. (47962)

நாவலர் வீதி, மாம்பழம் சந்திக்கு அருகில் 2¾ . பரப்புக் காணி (02-14.34) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.விமலராஜா (விமலா), 108, புங்கன்குளம், அரியாலை. (47978)

வீட்டுடன் காணி விற்பனைக்கு

254, கண்டி வீதி, அரியாலையிலுள்ள 5½ பரப்புக் காணியும் நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய நாலு அறை வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: தொ.இல. 021 2226338. (47879)

வீடு விற்பனைக்கு

கோப்பாயில் 2½ பரப்புக் காணியில் அமைந்துள்ள சகலவசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0714234383 (47845)

திருநெல்வேலிப் பகுதியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 4590067. (47873)

8 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு S. சிறி, பிறவுண் வீதி, கொக்குவில். T.P.0777111400 (47909)

திருநெல்வேலி சந்திக்கு அருகில் உள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: - 021 222 6390 (47843)

புத்தகங்கள் விற்பனைக்கு

வேதாகமப் புத்தகம், தமிழ் மிஷன் சபைப்பாடல் புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P. 021 222 6821 (47909)

கடை விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதி (போதனா வைத்தியசாலை O.P.D முன்பாக) இயங்கிக் கொண்டிருக்கும் நல்ல நிலையில் உள்ள கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 0112593830 . (47857)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம்.(Electronic நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48228)

கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.03.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி உடுவில் நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/48015)

கடை வாடகைக்கு

மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கு அருகில் இரு கடைகள் உடன் வாடகைக்குண்டு. (சகல வியாபாரங்களுக்கும் உகந்த இடம்) மேலதிக விவரங்கட்கு T.P. 0714 - 896711, 0112-729997 (47809)

யாழ்.பெரியகடைப் பகுதியில் உடனடியாகக் கடை வாடகைக்குத் தேவை. தொடர்பு: 021- 222 7286 (47809)

வீடு வாடகைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, சந்தைக்கு முன்பாக சகல வசதிகளுடனும் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு. சுற்றுலாப் பயணிகள் நாள், வாரம், மாதம் தங்கி இருப்பதற்கும் திருமண வைபவங்கள் நடத்துவதற்கும் ஏற்ற வீடு. தொடர்பு: இ.இராதாக்கிருஷ்ணன், 21/3, ஆடியபாதம் வீதி, (திருநெல்வேலி சந்தைக்கு முன்பாக) திருநெல்வேலி. T.P. 021 222 5597, 021-4591148 (47979)

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில், சகல நவீன வசதிகளுடன் கூடிய 6 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 021 222 5283 (47981)

கட்டடம் வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் வின்சர் தியேட்டர் சந்திக்கும், பாட்டா சந்திக்கும் இடையில் வியாபார மையத்தில், களஞ்சியப் பாவனைக்கு கட்டடம் வாடகைக்கு உள்ளது. தனி அறைகளாகவும் பாவிக்கலாம். தொடர்பு 121A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 8379, 0776 055157 (47827)

மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975 பரணி, மேடராசி, 8இல் செவ்வாய், கிரகபாவம், 49 ¼, உயரம் 5'5'' வெள்ளை நிறம் LL.B Attorney at Law Notary Public மணமகளுக்கும் 1977 அச்சுவினி மேடராசி 14½ கிரகபாவம் உயரம் 5'3'' வெள்ளை நிறம் B.Sc. Civil Engineering மணமகளுக்கும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், விரிவுரையாளர், உயர்பதவி வகிக்கும் மணமகன் தேவை. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல. 11, யமுனாவீதி, நல்லூர். T.P. 0776528641. (47827)

யாழ்.றோமன் கத்தோலிக்கம், 1976 கேட்டை விருச்சிகராசி, 38 ½ கிரகபாவம், 5'4'' உயரம், வெள்ளை நிறம், A/L Computer B.A. (தபால் மூலப் பயிற்சி) மணமகளுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், சட்டத்தரணி, வெளிநாட்டு மணமகனும் விரும்பத்தக்கது. R.C., 1981, உயரம் 5'5'' வெள்ளை நிறம், A/L பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை மணமகளுக்கும் படித்த உள்நாட்டு, வெளி நாட்டு மணமகன் தேவை. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனா வீதி, நல்லூர். T.P. 0776528641. (47827)

யாழ்.இந்து கௌரவ, 1974 புனர்பூசம், 3ஆம் பாதம், பொது நிறம், 5'3'' நிரந்தர அரச ஆசிரியைக்கு அரச, (கௌரவமான) தனியார்துறை மணமகன் தேவை. திருமண பொருத்துநர்களும் தொடர்பு கொள்ள முடியும். தொடர்பு: 0776544158 (47862)

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1966 ஆம் ஆண்டு பிறந்த, திருவோணம் நட்சத்திரம், கணக்காளர் பதவியில் இருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: T.P. 0112593831 (47888)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1967இல் பிறந்த, மிருகசீரிடம், மிதுனராசி, சுய தொழில் புரியும் மணமகனுக்கு O/L, A/L படித்த நற்குணமுள்ள, மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொழில் புரிவோர் தொழிலற்றோர் இருவரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: இல.9 றக்கா றோட், யாழ்ப்பாணம். T.P.021 222 9530. (47828)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1973 புநர்பூசம், கர்க்கடகராசி 1இல் செவ்வாய் 51 கிரகபாவம் 5'7'' உயரம், M.Sc. பட்டதாரி (சிரேஷ்ட விரிவுரையாளர்) மணமகனுக்கும் 1969, புநர்பூசம் மிதுனராசி 1இல் செவ்வாய் LL.B Atany at Law மணமகனுக்கும் டாக்டர் என்ஜினியர், எக்கவுண்டன் உயர் பதவி வகிக்கும் மணப்பெண்கள் தேவை. கொழும்பில் வீடு எதிர்பார்க்கப்படும். தொடர்பு: Shivalaya International marriage Bureau No.11 Jamuna Vethy, Nallur. T.P.No. 0776528641. (47859)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், பிரித்தானியா குடியுரிமையுடைய, 1973 சித்திரை, கன்னிராசி, 7இல் செவ்வாய் 41½ கிரகபாவம், 5'4'' உயரம் அழகிய A/L தனியார் கம்பனியில் பணிபுரியும் மணமகனுக்கு A/L இற்கு மேல் படித்த அழகிய மணமகள் தேவை. மணமகன் யாழ்.வரவுள்ளார். தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம், இல.11, யமுனாவீதி (பருத்தித்துறை வீதி), நல்லூர், யாழ்ப்பாணம். T.P.No. 0776528641. (47859)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 37 வயதுடைய, B.Sc. பிசிக்கல் சயன்ஸ் பட்டதாரி கொழும்பில் அரச திணைக்களத்தில் உயர்பதவி வகிக்கும் மணமகனுக்கு 32 வயதிற்குட்பட்ட அழகிய மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0777668725, 0112341330. (47859)

யாழ்.இந்து கௌரவ குடும்ப, U.K இல் Research Scientist (B.Sc - Ph.D) ஆகக் கடமைபுரியும் மகம் நட்சத்திரம் செவ்வாய்க் குற்றமற்ற, 32 வயது ஆணுக்கு அழகிய டொக்டர் அல்லது எக்கவுண்டர் மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2813, மே/பா உதயன். (47130)

மணப்பெண்கள் தேவை

7இல் செவ்வாய், கிரகபாவம் ஐம்பது. 1968 வங்கி முகாமையாளருக்கும் 1970 MBBS டாக்டருக்கும் விரிவுரையாளர், பொறியியலாளர் தரத்திலும் 1967 செவ்வாயற்ற கிரகபாவம் நாற்பது, வர்த்தகருக்கும் இந்து கௌரவ குடும்பத்து மணப்பெண்களை சிறியதாயார் தேடுகின்றார். தொடர்பு: விளம்பர இல.2826, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (47869)

திருமண சேவை

திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமை நாள்களில் மாத்திரம் தான் வேல் அமுதன் திருமண வேவை ஆற்றுகின்றார் என்பதல்ல தினசரி இரவிலும் நெடுநேரம் பணியாற்றுகின்றார்!! ஆனால் வேல் அமுதன் தனிமனிதன் நிறுவனம் என்பதால் திங்கள், புதன் வெள்ளி கிழமைநாள்களில் மாலை 4.30 - 8.00 மணி வரையான நேரகாலத்தை தொலைபேசி தொடர்பிற்கு என ஒதுக்கியுள்ளார் என்பதை தயவுசெய்து வாடிக்கையாளர் கவனிக்க!!! விவரங்களுக்கு வேல்அமுதனின் தொலைபேசி இலக்கங்கள் 2360488, 4314396, 0602158067. (சி-48258)

மலசலகூடம் நிறுவ ஏற்பாடு

வலி.தென்மேற்கு,மார்ச்.12

சர்வதேச கெயர் நிறுவனம், மாதகல் கிழக்கு கிராம அலு வலர் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 10 குடும் பங்களுக்கு மலசல கூடங்களை நிறுவிக் கொடுப்பதற்கு முன் வந்துள்ளது.

இதற்கான பயனாளிகள் தெரிவு இடம் பெற்று வருவதாக வலி.தென் மேற்கு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

REFRESH SYSTEM

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: (021 4591818, 077-5253104, 077 6279671)

சுதுமலை,மானிப்பாய். (47878)

சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நிரிழிவு தோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையும், உப உணவுமாகும். குருதியில் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A,C உடன் இரும்பு, நாகம், குரோமியம், கல்சியம், நார்ப்பொருள்கள் போன்ற நன்மை பயக்கக்கூடிய பொருள்களும் உண்டு.

தொடர்பு:- BIOTEC INTERNATIONAL
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி (பாம் ஸ்கூல் அருகில்)
T.P.021 4590907
32/3, ரெயில்வே அவனியூ, கொழும்பு -05.
(45514) T.P.0112 852269 (21.17.19)

பௌதிகவியல்/ இணைந்த கணித வகுப்புகள்

பல வருடங்கள் ஆசிரியராகவும் பரீட்சகராகவும் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட வினாத்தாள் உட்பட 3000 இற்கு மேற்பட்ட M.C.Q விற்கான விளக்க விடைகளுடன் மேற்படி பாடங்கள் கற்பிக்கப்படும். முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. வகுப்புகள் நடைபெறுகின்றன. தனிப்பட்ட முறையில் கற்பிக்க 6 வகுப்பு நேரம். கட்டணம் 1000 ரூபா.

விவரங்களுக்கு:
R.பாலசுப்பிரமணியம் B.sc (Cey.)Dip.in.Edu.
17/1, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 6648751 (47986)(39.21.17.19)

வீடு வாடகைக்குத் தேவை

சித்தன்கேணி, தொல்புரம், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக பாவனைக்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: K.தங்கராஜா,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
T.P.: 07730 53191

முதலாவது
12.03.2006
பிறந்தநாள் வாழ்த்து
தயாபரன் சபிநாத்
வளர்ந்து வரும் சபிநாத்தே - நீ
அன்போடு தவழ்ந்து பண்போடு எழுந்து
பல்கலையும் கற்று பார் போற்றும்
உத்தமனாய் வாழ்க என
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்
அப்பா - தயாபரன் (பிரான்ஸ்)
அம்மா - தர்சினி (நீர்வேலி)
அப்பம்மா, சித்தப்பா,
அத்தை (நீராவியடி),
அம்மப்பா அம்மம்மா, மாமா,
சித்திமார் (நீர்வேலி).
சபிநாத்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(சி-48295)

ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசின் பாதகமான போக்கே விஞ்சி நிற்கின்றது

ஜெனீவாவில் அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிளுக்கும் இடையில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் சிறிய அளவிலேனும் நடைமுறைக்கு வந்ததாக இல்லை. அதற்குப் பதிலாக தெற்கில் இருந்து கிளம்பும் எதிரான கருத்துக்கள் அடுத்தகட்ட நகர்வு குறித்துக் கேள்வியை எழுப்பியுள்ளது.

நேரடிப் பேச்சு நடைபெற்று 15 நாள்கள் கழிந்த நிலையிலும் களத்தில் மாற்றங்கள் எதுவும் தென்படவில்லை. மாறாக கொந்தளிப்பு நிலை மீண்டும் உருவாகுமா என்ற அச்ச நிலையே காணப்படுகின்றது.

கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி இலங்கை வந்த நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும் அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் சிங்களத் தரப்பின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுடனும் தமிழர் தரப்பின் தலைவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனும் பேச்சுகளை நடத்தி இருதரப்பினரும் நேரடிப் பேச்சை ஜெனீவாவில் நடத்த ஏற்பாடாகியது. அந்த முடிவு எட்டப்பட்டதும் மக்கள் மனதில் நம்பிக்கை ஓரளவு துளிர்விட்டது. அமைதியான சூழலும் ஓரளவு உருவானது.

கடந்த மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் ஜெனீவாவில் நடந்த நேரடிப் பேச்சுகள் அமைதிநிலை பூரணமாக - முழு அளவில் - என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அந்த எதிர்பார்ப்பு நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியாகவும் சிதைந்து கொண்டிருப்பதையே களத்தில் காணமுடிகின்றது.

ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி, அடுத்த கட்டப் பேச்சுக்கு அதாவது ஏப்ரல் 19ஆம் திகதி நடத்துவதென நிர்ணயிக்கப்பட்ட பேச்சுக்கு இருதரப்பினரும் செல்லக்கூடிய சூழல் உருவாக்கப்படவேண்டியது அவசியம்.

ஒரு பக்கத்தில் பேசிக்கொண்டு, மறுபுறத்தில் தமிழ் மக்களின் சிவில் நிர்வாக வாழ்க்கையில் படையினரை ஈடுபடுத்தும் போக்கு தெற்கு அரசுத்தலைமையிடம் உருவாகியுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சிவில் நிர்வாகத்தை - இயல்பு வாழ்க்கையை - வழமை நிலைக்குக் கொண்டுவரும் பொறுப்பு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமே உள்ளது. அந்த நிலையை உருவாக்கி சமாதானச் சூழலை - யுத்தநிறுத்தச் சூழலை- தக்கவைக்க வேண்டும் என்பதற்காகவே இருதரப்பினரும் பேசிவருகின்றனர்.

இருதரப்பினரும் செய்திகளை - தகவல்களை - அனுசரணையாளர் மூலம் பரிமாறி சுமுக நிலையைப் பேண வேண்டும். அப்போதுதான் சுமுக நிலையை தக்கவைக்க முடியும்.

தமிழ் மக்கள் மீது நெருக்குவாரங்களையும் - அத்துமீறல்களையும் - கட்டவிழ்த்து சுமுக வாழ்க்கைக்கு ஊறு விளைவித்தால் சுமுக நிலையை எவ்வாறு தோற்றுவிக்க முடியும் என்ற கேள்வி எழுவது நியாயமே.

சுமுக நிலைக்கு பதில் கொந்தளிப்பு உருவாகலாம்

குடாநாட்டில் உள்ள மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளை - பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை - கல்வியாளர்களை - படைமுகாமுக்கு அழைத்து சுமுகநிலை குறித்து ஆராய்வதும், கல்வியாளர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுப்பதும் சுமுக நிலை உருவாவதற்குப் பதிலாக கொந்தளிப்பு நிலையையே உருவாக்கும் என்று மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படும் விடயமாகும்.

இக்கொந்தளிப்பின் எதிரொலியே குடாநாட்டில் கொடும் பாவிகள் எரிப்பும் பாடசாலைப் பகிஷ்கரிப்புமாகும். கடந்த சில மாதங்களாக குழம்பியிருந்த கல்விச் செயற்பாடுகள் ஓரளவு சீராகி, பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளும், மாணவர் மத்தியில் பல்வேறு போட்டிகளும் நடத்தக் கூடிய சூழல் உருவாகியிருந்தது.

யாழ். பல்கலைக்கழகத்திலும் இறுதியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள், பரீட்சைகளைக்கூட ஆரம்பிக்கும் சூழல் உருவானது.

இத்தகைய சூழல் உருவாகி மாணவர் மத்தியில் அமைதியான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கான ஏது நிலையில், மாணவர்களுக்கு எதிராக - கல்வியாளர்களுக்கு எதிராக - எழுந்த அச்சுறுத்தல்கள் கல்விச் செயற்பாடுகள் மீண்டும் முடங்கிப் போய்விடுமோ என்ற அச்சநிலை பெற்றோர்கள், மாணவர் மத்தியில் மீண்டும் துளிர்த்துள்ளது.

சிவில் நிர்வாகத்தில் தலையிடும் இராணுவத்தினரின் செயற்பாடுகளால் தோன்றியுள்ள பாதகமான சூழ்நிலைக்குப் புறம்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கான புதிய துணைவேந்தர் நியமனமும் தற்போது சேர்ந்துள்ளது.

தமிழர் விரோதப் போக்குடையவரை துணைவேந்தர் பதவிக்கு நியமித்து கல்விச் செல்வத்தை அழிக்க முயலவேண்டாம் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பகிரங்க வேண்டுகோளை அரசுத் தரப்புக்கு விடுத்திருந்தும், அதைப் பொருட்படுத்தாமல் செய்யப்பட்ட புதிய நியமனத்தின் மூலம் மாணவர் மத்தியில் குழப்ப நிலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பாதகமான சூழலைத் தவிர்க்க....

அரசினதும் படைத்தரப்பினதும் காய் நகர்த்தல் எப்படியாக இருந்தாலும், மீண்டும் மாணவர்கள் குழம்பி வீணானபதற்றமான சூழலுக்குச் செல்ல இடமளிப்பது ஒருபோதும் ஆரோக்கியமான செயற்பாடாக அமையாது. இதுவே இன்று குடாநாட்டு மக்களின் குறிப்பாக மாணவர்களின் பெற்றோர் களது கருத்தாக உள்ளது.

குடாநாட்டில் சிவில் நிர்வாகம் சரி கல்விச் செயற்பாடுகள் சரி அவை தொடர்பாக சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஆலோசித்து, தகவல்களைப் பரிமாறிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதே பாதகமான நிலையைத் தவிர்க்க உதவும்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் சீராக நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் உருவாக்குவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் திருத்தவேண்டும் மீளாய்வு செய்யவேண்டும் என்று கூறிவந்த ஜனாதிபதி தலைமையிலான அரசு, அந்த உடன்படிக்கையை முழுமையாக ஏற்று அதை நடைமுறைப்படுத்த ஜெனீவாவில் இணங்கியது.

அந்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தினாலேயே பிரச்சினைக்குத் தீர்வை காண்பதற்கு வழிவகுக்கும். அதை விடுத்து மேலும் காலத்தை இழுத்தடிக்க அரசு முனையுமானால், நாட்டின் மக்களின் எதிர்காலம் இருள்மயமாகவே போகும்.

யுத்தநிறுத்தத்தில் பரிந்துரைக்கப்பட்ட படி, படைகளின் பிரசன்னத்தை விலக்கி, மக்களின் முழு அளவிலான இயல்பு வாழ்க்கை திரும்பும் சூழலை அரசு விரைந்து உருவாக்க வேண்டும்.

அவ்வாறு, செய்யவேண்டியதைச் செய்யாமல், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களை படையினர் மூலம் திரட்டுதல், வீதியில் செல்பவர்களைத் காரணம் இன்றி மிரட்டுதல், மாணவர்கள் போராட்டத்தில் குதிக்கும் சூழலை உருவாக்குதல், கல்வியாளர்களை மிரட்டுதல், அவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டல் போன்ற வற்றில் அரசும் படையினரும் ஈடுபட்டால் முழு அளவிலான சுமுகச் சூழலைத் தக்கவைக்க இயலுமா?

அதாவது -

களநிலையை - யதார்த்த நிலையை - அரசு புரிந்து விரைந்து செயற்படுவதன் மூலமே சுமுகமான சூழலைத் தக்கவைக்கலாம்.

ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் அவசரம் காட்டாது, சர்வகட்சி மாநாடு நடத்தி யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒருவகையில் திருத்தப்பட்டுள்ளது என்ற நிலைப்பாட்டை வெளிக்கொணர்வதும் அடுத்த பேச்சுகளில் சகல கட்சிப் பிரதிநிதிகளையும் நோக்கர்களாக அமர்த்தப்போவதாக அறிவிப்பதும் பேச்சுகள் அடுத்த கட்டத்துக்குள் செல்லுமா என்ற சந்தேகத்தை மிகப்பெரிய அளவில் தோற்றுவித்துள்ளது. பேச்சுக்களில் சர்வகட்சிப் பிரதிநிதிகளையும் நோக்கர்களாக அமர்த்தவேண்டுமாயின் பேச்சின் ஒரு தரப்பான விடுதலைப் புலிகளின் அனுமதி பெறப்பட வேண்டும். அது சாத்தியமா என இப்போது கூற முடியாது.

"சமாதானப் பேச்சுகள், அமைதி நடவடிக்கைகள் மூலமாக அல்ல. படைகளைப் பலப்படுத்தியே புலிகளைச் சமாளிக்க முடியும் "என்று அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. கருத்து வெளியிடுவதற்கும் -

ஏனைய குழப்பமான அம்சங்களையே வெளிப்படுத்துவதற்கும் -

சர்வகட்சி மாநாட்டை மேடையாக்காது, ஜெனீவாவில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளை ஆராயும் மேடையாக அதனைப் பயன்படுத்த தெற்குத் தலைமைகள் முன்வரவேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலாலும் பாதகநிலை தோற்றுவிக்கப்படுகிறது

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் யார் கூடுதலான ஆசனங்களைப் பெறுவது என்ற சிந்தனையுடன் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் விரோதக் கருத்துக்களை விதைத்து வாக்கு வங்கியை பலப்படுத்த

ஜெனீவாப் பேச்சை தெற்கு அரசியல் கட்சிகள் பயன்படுத்த முனைவதை அவதானிக்க முடிகிறது.

நாட்டில் அமைதி நிலை திரும்பி நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு சமாதான முயற்சிகள் வெற்றி பெறக் கூடிய வகையில் தெற்குத் தலைவர்கள் செயற்படவேண்டும்.

கடந்த 50 வருட காலப்போராட்டங்களில், தெற்குத் தலைமைகளுக்கு - பல சந்தர்ப்பங்கள் தமிழர் தரப்பினால் வழங்கப்பட்டிருந்தன. அச் சந்தர்ப்பங்களை சிங்களத் தரப்புகள் சரியாகப் பயன்படுத்தவில்லை. அதன் விளைவால் தான் சிங்கள அரசியல் தலைமை இப்போது திக்குமுக்காடுகிறது.

தமிழர் தரப்பு, இதுவரை காலமும் சர்வதேசத்தின் பிரசன்னம், கரிசனை, ஆதரவு இன்றி நேரடியாக சிங்களத் தரப்புடன் தொடர்புகளை, உறவுகளை வைத்து சம அந்தஸ்துள்ள மக்களாக வாழ்வதற்கு வழிசெய்யக்கோரி அதற்காக பல கஷ்ரங்களின் மத்தியிலும் முனைந்து செயற்பட்டது.

அந்த முனைப்பின் போதும், முயற்சிகளின்போதும் கண்ட தோல்விகள் ஏமாற்றங்களின் பின்னர் இப்போது சர்வதேசத்தின் பிரசன்னத்தில், அனுசரணையில், இருபெரும் சிங்களக் கட்சிகளுக்கும் தமிழர் தரப்பு சந்தர்ப்பம் வழங்கி உள்ளது.

சிங்களத் தரப்புக்கு தமிழர் தரப்பு வழங்கியுள்ள இறுதிச் சந்தர்ப்பம்

இரு பெரும் கட்சிகளில் ஒன்றான ஐ.தே.கட்சியுடன் ஆறு சுற்றுப் பேச்சுகளை நடத்தி அதில் தோல்வி கண்ட தமிழர் தரப்பு, இப்போது மற்றைய பெரிய அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு - அதன் அரசியல் கூட்டுக்கு - சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

தமிழர் தரப்பால் சிங்களத் தரப்புக்கு அதுவும் பலம் வாய்ந்த கட்சிகளின் ஒன்றான சுதந்திரக்கட்சிக்கு இப்போது இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தை சரியான முறையில், தக்கவாறு பயன்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு சுதந்திரக் கட்சிக் கூட்டமைப்புக்குத் தலைமை ஏற்றுநிற்கும் ஜனாதிபதி மஹிந்தவுக்கு உண்டு. இந்தச் சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்தத் தவறினால், எதிர்காலத்தில் சிங்களத் தரப்பும் தமிழர் தரப்பும் இரு தேசங்களின் அரசுகளின் தலைவர்கள் மட்டத்தில் பேசும் நிலையே உருவாகும் என எதிர்வு கூறப்படுகின்றது.

இத்தகைய நிலை உருவாக சிங்களத் தலைமைகள் அனுமதிக்கப் போகின்றனவா? அல்லது இரு இனங்களும் சம உரிமைகளுடன், சமமான அந்தஸ்துடன் வாழும் நிலையைத் தோற்றுவிக்கப் போகின்றனவா? காலந்தான் பதில் கூறும்.

நடைமுறை அரசுக்கான மற்றுமொரு பரிமாணம்

★ ★ ★

புதிய காணிச் சட்டம்

இந்த நிலையில், விடுதலைப் புலிகள், தமிழர் தரப்பு நடைமுறை அரசுக்கான கட்டுமானங்களில் மற்றுமொரு பரிமாணமாக தமிழீழ அரச காணிச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளனர்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் உள்ள காணிகளின் பயன்பாடு, அவற்றை காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பது, புலம்பெயர்ந்தவர்களின் காணிகளைக் கையளித்தல், காணிகளின் விலை மதிப்பீடு, அவை தொடர்பான நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்ளும் வகையில் இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நீதிநிர்வாகத்துறையின் சட்டவாக்கச் செயலகம் பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை அறிந்து அதன் அடிப்படையில் இச் சட்டத்தை வடிவமைத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் காணி தொடர்பான விடயம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. காணி விவகாரங்கள் தொடர்பாக பெரும் எண்ணிக்கையான வழக்குகள் ஸ்ரீலங்காவினதும் தமிழீழத்தினதும் நீதிமன்றங்களில் விசாரணைகளில் உள்ளன. வழக்குகளின் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரும் பிணக்குகள் தொடர்கின்றன.

இந்தச் சிக்கல்களுக்கு தீர்வுகாணும் - வழிகாணும் - நோக்கத்துடன் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் எண்

(16 ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்

வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள

வி.நாகராஜ சுவாமிகள், N.முனியம்மா அவர்கள்

இவர்கள் ஜாதகம், கைரேகை மூலமாகத் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம். குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றனர். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

➢ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளைச் சந்திக்கலாம். (47885) (26.17.15)

பிள்ளையார் இன்

அறை என் 5, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.:077 9582596.

31ஆம் நாள் நினைவஞ்சலி

தீவகக் கல்வி வலய ஆசிரிய நிலையத்தில் கடமையாற்றும்

திருமதி விஜயரட்னம்

அவர்களின் அன்புத் தாய்

திருமதி

சின்னத்தம்பி மருதையினார்

(நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் தற்போது ஒட்டங்குளம் துணுக்காயை வதிவிடமாகவும் கொண்டவர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பம் மற்றும் சகோதரர்களுடன் எமது துயரைப் பகிர்ந்துகொள்கின்றோம். அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அலுவலக உறவுகள், வேலணை.

(47961)(32-19-45)

A House for Rent

Jaffna, A large house with 4 rooms and ample parking facilities available for rent, close to I.C.R.C office.

Contact Colombo.

T.P.: 2361965. (47970)

YMCA சேவைகள்

சுவாத்தியமான தங்குமிடம், சுத்தமான உணவகம், நோயாளர் வாகனசேவை, திருமண மண்டப வசதிகளுடனும் கூடிய கேட்போர்கூடம் அனைத்தையும் நியாயமான கட்டணத்தில் பெற்றுக் கொள்ள,

யாழ். YMCA,
109, கண்டி வீதி. தொ.பே 222 2499. (A 8067)

சாவகச்சேரி நகரத்தின் அபிவிருத்தி குறித்த கூட்டம்

தென்னிராட்சி,மார்ச்12

சாவகச்சேரி நகர அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு நகர அபிவிருத்தி முன்னெடுப்புக்கு ஒத்துழைக்குமாறு நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் சபை எல்லைக்குட்பட்ட பொதுஅமைப்புகளின் தலைவர்களுக்குழ் நகர சபை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரியுள்ளார். (எ-117)

மெய்வன்மைப் போட்டி

ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர்தலைமையில்நடைபெறும் இந்த விளையாட்டுவிழாவில், ஊர்காவற்றுறை பங்குத்தந்தைஅருட்திரு. எக்ஸ். டபிள்யூ ஜேம்ஸ் அடிகளார்முதன்மை விருந்தினராகவும் ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-16)

பா/சென் மேரீஸ் றோ.க.த.க. பாடசாலை (O.L.R)

திருமதி மேரி ஏரிகாம் (B.A. Dip. in Edu.)

உப அதிபர்

சேவைநலன் பாராட்டு வாழ்த்து

12.03.2006

15.05.1989 ஆம் ஆண்டு தொடக்கம் எமது பாடசாலையில் ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் 14.05.2004 ஆம் திகதி தொடக்கம் உப அதிபராகவும் கடமையாற்றி 11.03.2006 இல் ஓய்வு பெறும் திருமதி மேரி ஏரிகாம் அவர்கள் தமது ஓய்வு காலத்தில் நோய் நொடியின்றி, சீரும் சிறப்புடனும் வாழ, அடைக்கல அன்னையை வேண்டி வாழ்த்துகிறோம்.

(47800)(51.32.1945)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
பா/ சென் மேரிஸ் றோ.க.த.க.பாடசாலை.

ENGLISH மொழியா? உங்கள் பிரச்சினை

இன்றே தபால் மூல ஆங்கிலப் பாடநெறியில் இணையுங்கள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கில கல்வியை குறுகிய காலத்தில் (அடிப்படையில் இருந்தே) கற்பிக்கின்றோம்

Free **இதோ இலவச அழகிய குடை**

எமது எந்த ஒரு பாடநெறியிலும் இணையும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கு

* அழகிய குடை ஒன்றும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் (முந்துங்கள்)

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறுங்கள்

UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0773 123 523

சில கல்வி நிலையங்கள் போன்று மாணவர்களிடம் பணத்தை அறவிடுவது அல்ல எமது நோக்கம்

இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

தமிழ் PCTIMES

தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

2006 மார்ச் முதல் மாதாந்தம் வெளிவருகிறது.

இலங்கையின் சகல பாகங்களிலும் கிடைக்கும்!

புதிய

- தகவல்கள்
- செய்திகள்
- மென்பொருள் (SoftWare)
- வன்பொருள் (HardWare)
- செய்முறைகள்
- செயற்பாடுகள்

இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

விஜய பதிப்பகத்தாரின் மற்றுமோர் வெளியீடு.

இதோ அறிமுகப்படுத்துகின்றோம்

சிதார வர்ம தைலம்

உடைவு, முறிவு, வீக்கம், சுளுக்கு, இரத்தக் கட்டு, முழங்கால் மூட்டுவலி, குதிக்கால் வலி ஆகியவைகளுக்கு காலை மாலை பூசி வரவும்.

Reg.Number 10171 ARPR No.228

(வெளிப்பிரயோகத்திற்கு மட்டும்)

சந்தைப்படுத்துவோர்:

சிவா நறுமணப்பூங்கா

288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone 222 2567

சகல பார்மசிகளிலும் கிடைக்கும்

(A-48146) (21.17.19)

தரிகையின்

மணநாள் சேவைகள்

- பேஷியல்கள் (Facials)
- மணமகள் ஒப்பனை
- இமை சீர்செய்தல்
- ஐசிங் கேக்
- சுவரலங்காரங்கள் (றெஜி:போம் வேலை)
- திருமண அழைப்பிதழ், அன்பளிப்பு பைகள் அச்சிடல்

இன்னும் பல சேவைகள்....

தொடர்புகளுக்குரிய இல: 0779143171
0779691380

பயிற்சி வகுப்புகள்

குறுங்கால மனையியல், அழகுக்கலை பயிற்சி வகுப்புகள் IIஆம் பிரிவு 16.03.2006 ஆரம்பமாகின்றன.

* அனுமதிகளை முன்னரே பெற்றுக்கொள்ளலாம்.
* பயிற்சி முடிவில் தேர்வு அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனச் சான்றிதழ் வழங்கப்படும்.

(47896)(51.32.19.45)

ம.ம.வி. வீதி, நெல்லியடி. செங்குந்தா வீதி, கல்லியங்காடி.

எண்ணம், சொல், நடத்தையில் இன்றியமையாதது பணிவு —

மானிடப் பிறப்பின் மகிமை சொல்வதற்கு இயலாதது - சொல்லில் அடங்காதவை. நாம் பிறந்தது எமக்கும், பிறருக்கும் பயன் உள்ளவிதத்தில் வாழ்வதற்கே. அந்தப் பயனானது இல்லாவிடத்து அந்தப் பிறவியில் பயன் ஏது?

ஒரு முறை இந்த உலகத்தில் உள்ள அனைத்து வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய அனைத்தையும் சிறப்பாகக் கற்ற ஒரு மகானிடம் சபையில் வைத்து ஒரு வினா தொடுக்கப்பட்டது. 'இந்த உலகில் உள்ள அனைத்து வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றின் சாராம்சம் என்ன?' என்பதே அந்த வினா. அப்போது அந்த மகான் 'எவருக்கும் துன்பத்தைக் கொடுக்காதே, அதேபோல துன்பத்தை எடுக்கவும் செய்யாதே. அதாவது சந்தோஷத்தைக் கொடுத்து சந்தோஷமாக வாழ்' என்று பதில் அளித்தார்.

நாம் அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்து சந்தோஷமாக வாழ்வதற்கு எமக்குத் தேவையானது அளவற்ற பொன்னோ, பொருளோ அல்ல, பணிவு என்ற மிசச் சிறந்த தெய்வீகக் குணமேயாகும். யார்? அனைவர் மீதும் எந்தவிதப் பாரபட்சமும் இன்றி சுயநலமற்ற அன்பைக் கொண்டுள்ளார்களோ, அவர்களாலேயே பணிவுள்ளவர்களாக விளங்க முடியும்.

ஆணவத்தை உடையவர்களுக்கு வாழ்வில் வெற்றி இல்லை

அதே போன்று இத்தகையவர்களால் மாத்திரமே வாள்வில் தாம் கொண்டுள்ள இலக்கில் வெற்றியை அடையவும் முடியும். ஆனால், ஆணவத்தைக் கொண்டிருப்பவர்களால் இலகுவாக வெற்றியை தங்களுடைய வாழ்க்கையில் அடைய முடியாது.

சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! என்னிடம் பணம் உண்டு, பொருள் உண்டு, படிப்பு உண்டு, மாளிகையுண்டு என்று

'பணிவு' அர்த்தம் நிறைந்தது வாழ்வின் வெற்றியும் அதுவே!

நாம் ஆணவத்தால் ஊறிவிட்டோமேயானால் அதில் என்ன பயன்? இந்த உலகத்தைப் பொறுத்தவரையில் நாம் அனைவருக்கும் ஒரு விடுதியில் வசிக்கின்ற ஒரு நபரைப் போன்றவர்களே.

ஏனெனில், ஒரு விடுதியில் வசிக்கும் காலம் அல்லது அந்தக் குறிப்பிட்ட நாள்களுக்கு மட்டுமே அந்த விடுதியில் உள்ள இடம், பொருள்கள் அனைத்திற்கும் நான் சொந்தக்காரன். நான் சென்றவுடன் அல்லது செல்லும் காலத்தில் அந்தவிடுதியின் அறைக்கு அடுத்து வருபவனே சொந்தக்காரன்.

ஆகவே, யார்யாருக்கு என்னென்ன சொந்தம்? எதுவும் இல்லையே. இதனால் தான் மாபெரும் மன்னன், அலெக்சாண்டர். 'நான் வெறுங் கையுடன் வந்தேன், வெறுங்கையுடனே திரும்பிச் செல்கிறேன்' என்று கூறினார். இதுவே, சத்தியமும் கூட. ஆகவே அத்தகையதோர் அகங்காரம் எங்களுக்குள் இருக்கலாமா? இருந்தால் இன்றிலிருந்து அகற்றிவிடுவோம்.

பணிவு என்பதன் உண்மையான அர்த்தம்

பணிவு என்பது நாம் அனைத்திற்கும் தலை குணிந்து நிற்பது என்றோ, அவமானப்படுவது என்றோ பொருள்படாது. மாறாக, அனைவரையும் உங்களுக்கு மரியாதையைக் கொடுக்கச் செய்யவும் அன்பைக் கொடுக்கச் செய்யவும் கூடிய ஒரு கருவி அல்லது காந்தமே பணிவு ஆகும்.

உயர்வின் அல்லது சிறப்பின் அத்திபாரம் பணிவே. யார் பணிவுடன் இருக்கிறார்களோ, அவர்கள் அனைவரின் இதயத்திலும் சிறந்த ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஆணவத்தை இல்லாதொழிக்கக் கூடிய அதிசிறந்த ஆயுதம் பணிவேயாகும். இத்தகைய பணிவானது இலகுவாகவே புகழ்ச்சிக்கு தகுதியானவர்களாக மாற்றக் கூடியது. ஆனால், ஆணவமோ எம்மை அவமரியாதைக்கு தகுதியுடையவனாக மாற்ற வலலது. அது போல எம்மிடம் உள்ள சிறப்புக்களைக் கூட இல்லாதொழிக்க வல்லது ஒரு கதை உண்டு.

ஓர் ஆலயத்தில் அக்கா மெழுகுவர்த்தியும் தங்கை அகர்பத்தியும் இருந்தார்களாம் அப்போது அக்கா மெழுகுவர்த்தி தங்கை அகர்பத்தியைப் பார்த்து, ஏளனமாகக் கூறினாளாம். "பார் நானே பெரியவள், என்னால் மாத்திரமே ஒளியைக் கொடுக்க முடியும். நீயோ சாதாரணம் என்று" அப்போது ஒரு சில நிமிடங்களில் ஒரு பெரும் காற்று வீசியது. அக்கா மெழுகுவர்த்தி அணைந்துவிட்டாள். அப்போது தங்கை அகர்பத்தி "பார் அக்கா நீயோ இந்தக் காற்றைக் கூடத் தாங்க முடியாது அணைந்துவிட்டாய்.நானோ சாதாரணம். ஆனால், இந்தக் காற்று மேலும் எல்லாத் திசைகளுக்கும் பரவிவிட்டது" என்று கூறினாள்.

ஆகவே, இது போன்றுதான் ஆணவம் கூட எம்மிடம் உள்ள சிறப்புகள் அனைத்தையும் கூட அழித்துவிடக் கூடியது. இப்பொழுது பணிவு என்ற சிறந்த குணத்தின் மகிமை எவ்வளவு சிறந்தது என்று எங்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றது. எனவே, இந்தப் பணிவு என்ற தெய்வீகக் குணத்தை எங்கள் எண்ணங்களில் - எங்கள் பார்வையில் - எங்கள் வார்த்தையில் - அத்தோடு எங்கள் உறவுகளில் மற்றும் தொடர்புகளிலும் கொண்டிருப்போம். அப்போது புகழ்ச்சிக்கும் மரியாதைக்கும் உரியவர்களாக ஆகுவோம்.

- ஆதிநங்கை.

கடவுள் பொழியும் அன்பு பகிரப்பட வேண்டியது

திருத்தந்தை 16ஆம் பெனடிற்றின் முதல் திருமடலான 'கடவுளே அன்பாய் இருக்கிறார்' என்னும் மடலிலிருந்து எடுக்கப்பட்ட சில கருத்துக்களை இங்கு தருகின்றோம்.

"கடவுள் அன்பாக இருக்கின்றார். அன்பில் நிலைத்து இருக்கிறார். கடவுளோடு இணைந்திருக்கின்றார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கின்றார்" (1 யோவான் 4:16)

புனித யோவான் எழுதிய முதல் கடிதத்தில் உள்ள மேற்கூறப்பட்ட வார்த்தைகள் கிறிஸ்தவ விசுவாசத்தின் சாராம்சத்தை அல்லது அதன் மையத்தை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றன. கிறிஸ்தவ விசுவாசத்தின் மையம் மனிதன் கடவுளைப் பற்றிக் கொண்டிருக்கின்ற எண்ணக்கருவும், அந்த எண்ணக்கருவின் விளைவாக மனிதன் தன்னைப்பற்றியும் தன்னுடைய முடிவைப் பற்றியும் கொண்டிருக்கின்ற எண்ணக் கருவுமே ஆகும். அதே வசனத்தில் புனித யோவான் கிறிஸ்தவ வாழ்வின் சாராம்சத்தைப் பின்வருமாறு கூறியிருக்கின்றார். கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம். அதை நம்புகின்றோம்.

இந்த வார்த்தைகள் மூலமாக ஓர் கிறிஸ்தவன் தன்னுடைய வாழ்க்கையில் மேற்கொள்ளவேண்டிய அடிப்படைத் தீர்மானத்தை வெளிப்படுத்தலாம். கிறிஸ்தவனாக இருப்பது என்பது ஓர் நன்னெறி சார்ந்த ஓர் தெரிவின் விளைவோ அல்ல மென்மையான ஒரு எண்ணக் கருவின் விளைவோ அல்ல, மாறாக ஒருவரின் வாழ்வில் ஓர் உறுதியான திசையையும் புதிய ஓர் விடியலையும் கொடுக்கக் கூடிய வகையில் ஒரு நிகழ்வில் ஓர் ஆளைச் சந்திப்பதாகும்.

அன்பின் மையத்தன்மையைப் புரிந்து கொள்கையிலே, கிறிஸ்தவ விசுவாசம் இஸ்ராயேல் மக்களின் விசுவாசத்தின் அடிப் படையை அல்லது அதன் சாராம்சத்தை தன்னகத்தே வைத்துக்கொண்டு அதனை இன்னும், ஆழப்படுத்தி புதிய அர்த்தத்தைக் கொடுக்கின்றது. இவ்வாறு கடவுளை முழுமையாக அன்பு செய்ய வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்ற வார்த்தைகளில் ஒரு பக்தியுள்ள யூதன் நாளாந்தம் செபிப்பான்.

கடவுளின் பெயரால் வன்முறைகள்

தற்காலத்தில் பழிக்குப் பழிவாங்குதல், வெறுப்புணர்வுகள், இன்னும் வன்முறைகள் கடவுளின் பெயரால் செய்யப்படும் இந்த உலகில் இத்திருமடல் வெளிக்கொணரும் கடவுள் அன்பாய் இருக்கிறார் என்னும் செய்தி முக்கியமானதும் காலத்தின் ஓர் தேவையுமாகும். இதன் காரணமாகவே கடவுள் எம்மீது பொழிகின்ற அன்பு எம் சகோதரர்களோடு பகிரப்பட வேண்டும் என்பது பற்றி எனது முதலாவது திருமடலில் பேசவிரும்புகின்றேன். கடவுகளை அன்பு செய்ய வேண்டும், அயலவரை அன்பு செய்ய வேண்டும் என்ற இரண்டு அம்சங்களுமே எனது இத்திருமடலின் சாராம்சமாகும்.

இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றோடு ஒன்று இறுக்கமாக இணைந்துள்ளது. முதல் பகுதி அதிகம் கருத்துப் பாங்கானது (Speculative) காரணம் எனது திருத்தந்தைப் பதவிக்காலத்தின் தொடக்கத்திலேயே கடவுள் எமக்கு விளங்கிக் கொள்ளமுடியாத வகையிலும் எதையும் எதிர்பார்க்காத வகையிலும், நமக்கு அளிக்கும் அன்பின் ஓர் சில முக்கிய உண்மைகள், பற்றியும் இந்த இறையன்புக்கும் மனித அன்புக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றியும் நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். இந்த அயலவர்க்கான அன்பு பற்றிய கட்டளை திருச்சபையில் எவ்வாறு வாழப்படுகிறது என்பது பற்றி இத் திருமடலின் இரண்டாம் பகுதியில் குறிப்பிடுவதானால் இந்த இரண்டாம் பகுதி நடைமுறை சார்ந்ததாக (Practical) அமைந்துள்ளது. இந்த அன்பு என்னும் மையக்கருத்து பரந்த தார்ப்பரியங்களைக் கொண்டது. எனவே, இந்த அன்பு என்ற பொருள் பற்றி நீண்ட ஆய்வு செய்வது எனது திருமடலின் நோக்கத்துக்கு உட்பட்டது அல்ல.

திருத்தந்தையின் விருப்பமும் இதுவே

தவக்காலச் சிந்தனை

எனவே, இத் திருமடலில் கடவுளின் அன்புக்கு இந்த உலகின் மனிதன் புத்துணர்வு பெற்ற சக்தியோடும், அர்ப்பணிப்போடும் பதில் கொடுக்கக்கூடிய வகையில் அன்பின் ஓர் சில அடிப்படைக் கூறுகளை நான் அழுத்திக் கூற முனைகின்றேன்.

மொழி பற்றிய பிரச்சினை

இறைவனின் அன்பு எம் வாழ்வுக்கு அடிப்படை. இந்த இறைவனின் அன்பு கடவுள் யார்? நாங்கள் யார்? என்ற முக்கியமான கேள்விகளை எம்முள் எழுப்புகின்றது. அன்பு பற்றிப் பேசும் போது நாம் பாவிக்கின்ற வார்த்தைப் பிரயோகம் எமக்கு ஓர் பெரிய தடையாக உள்ளது. இன்று அன்பு என்ற சொல் அதிகம் பயன்படுத்தப்படும் சொல்லாகவும், அதிகமாகத் தப்பாகப் பயன்படுத்தப்படும் சொல்லாகவும் இருக்கின்றது. இன்னும் அன்பு என்ற சொல்லை நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமான அர்த்தங்களோடும் கருத்துகளோடும் பாவிக்கின்றோம். இந்தத் திருமடலின் முக்கிய நோக்கம் திரு நூலிலும் திருச்சபை பாரம்பரியத்திலும், அன்பு எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகின்றது; வாழப்படுகின்றது என்பதனை ஆராய்வதே ஆகும். ஆனால் இவ்வாறான முயற்சியை மேற்கொள்கிறபோது, அன்பு என்ற சொல் பல கலாச்சாரங்களிலும் தற்காலத்தில் எப்படிப்பட்ட கருத்தைக் கொண்டிருக்கின்றது என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ளாதிருக்க முடியாது.

பல வடிவங்களில் அன்பு

முதலில் நாம் அன்பு என்ற சொல் கொண்டிருக்கும் பொருள்களை எம் மனதிற்குக் கொண்டுவருவோம். நாட்டிற்கான அன்பு, ஒருவன் தன் பணி மட்டில் கொண்டுள்ள அன்பு, நண்பர்களுக்கு இடையே உள்ள அன்பு, தொழில் மட்டில் உள்ள அன்பு, பெற்றோர் - பிள்ளைக்கு இடையே உள்ள அன்பு, குடும்ப அங்கத்தினர் இடையே உள்ள அன்பு, கடவுள் மட்டில் உள்ள அன்பு, அயலவர் மட்டில் உள்ள அன்பு என்று அன்பைப் பல வடிவங்களில் பேசுகின்றோம். இவ்வாறான அன்பு பல அர்த்தங்களைக் கொண்டிருந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள அன்பில் அவர்களின் உடலும் ஆன்மாவும் பிரிக்க முடியாத வகையில் இணைக்கப்படுகிறது. இந்த இணைப்பில் மனிதர்கள் அவர்களுக்கிடையே உள்ள கவர்ச்சியினால் பெரிதும் ஈர்க்கப்பட்டு மகிழ்வின் கணநேர கண்ணோட்டத்தை அனுபவிக்கின்றனர். இதுவே அன்பின் ஓர் சுருக்கம் போலத் தோன்றுகின்றது. இந்த அன்புடன் ஒப்பிடும் பொழுது மற்ற வகையான எல்லா அன்பும் ஒப்பீட்டளவில் மறைந்து போவதுபோன்ற தோற்றம் பெறுகிறது. இங்கு நாம் ஓர் கேள்வியைக் கேட்க வேண்டும். பல வடிவங்களில் வெளிப்படுகின்ற அந்த அன்பு அடிப்படையில் ஒரே அன்பு தானா? அல்லது நாங்கள் அன்பு என்ற ஒரே சொல்லை வேறு பட்ட பல விடயங்களைப் பற்றிக் குறிப்பிடப்பயன்படுத்துகின்றோமா? ✱

ஜெனீவா பேச்சும் சர்வகட்சி மாநாடும்

ஏப்ரல் மாதம் ஜெனீவாவில் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அதற்கான சூழல் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளதா என்பது இன்னும் சந்தேகத்திற்கிடமாகவே உள்ளது. குறிப்பாக ஜெனீவா பேச்சுக்கள் குறித்து கருத்து வெளியிட்டிருந்த அரசதரப்பு, போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றத்தை ஏற்பத்தியதாக தெரிவித்த கருத்தானது ஏற்படுத்திய சர்ச்சை இன்னும் ஓயவில்லை.

இதற்கிடையில் வவுணதீவில் புலிகள் மீது இடம்பெற்றுள்ள தாக்குதலானது ஜெனீவா பேச்சுக்களின் பிரதிபலனையும் வெளியிட்ட கூட்டறிக்கையினையும் கேலிக்குரியதாக்கியுள்ளது.

பேச்சின் போது சர்வதேசத்திற்கு முன்னால் உறுதியளித்த ஒரு விடயத்தையே தம்மால் செயற்படுத்த முடியாது என்ற இயலாமையை அரசாங்கம் வெளிப்படுத்திய நிலை தோன்றியுள்ளது.

– என். ஜீவேந்திரன்

மேலும் கடந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கால பேச்சுக்களின் போது காணப்பட்ட சுமூகத்தன்மை இம்முறை ஜெனீவா பேச்சுக்களில் காணப்படாத நிலையில் இந்த சிக்கல்கள் எதிர்கால பேச்சுக்களை பாதிக்க வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாடு ஓரளவு நிலைமையை மேம்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டியுள்ளது. குறிப்பாக ஜேவிபி, ஹெல உறுமய கட்சிகளது எதிர்ப்பினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமாளித்துள்ளதாகவே தெரிகிறது.

ஜே.வி. பி, ஹெல உறுமய போன்ற கட்சிகள் இவ்விடயத்தில் மிகவும் கபடத்தனமாக நடந்து கொண்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

ரணில் விக்கிரமசிங்க இதே போர்நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்திய போது நாட்டைக்காட்டிக்கொடுப்பதாக வீதிக்கு இறங்கிய இக்கட்சிகள் தற்போது அரிக்கைகளுடன் தமது எதிர்ப்பினை மட்டுப்படுத்திவிட்டன.

எவ்வாறெனினும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இச்சூழல் சாதகமானதொன்றே. இவ்வாறான ஒரு சர்வகட்சி மாநாடு ஒன்றின் மூலமாக சகல கட்சிகளதும் அபிப்பிராயத்தைப் பெற்று பேச்சை நடத்துவதாக அவரால் காட்டிக்கொள்ள முடியும். அதேபோல இனிவரும் பேச்சுக்களில் கட்சிகளின் பிரதிநிதிகளை அவதானிகளாக அனுமதிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை முக்கிய விடயமாக அமைந்துள்ளது.

இவ்வாறான விடயங்கள் மூலம் கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிலைமைகளை சமாளித்தாலும் விடுதலைப்புலிகளை சமாளிக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமே.

குறிப்பாக உறுதியளித்தபடி போர்நிறுத்த உடன்படிக்கையை பேணி நடக்க முயன்றால் மட்டுமே ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள பேச்சு பலனைத்தருவதாக அமையும்.

இதற்கிடையே ஜெனீவாவில் அரசதரப்புக்கு புலிகளால் கையளிக்கப்பட்ட துணைப்படைகள் குறித்த விபரம் ஆங்கிலப்பத்திரிகையொன்றில் வெளியானமையானது தேசத்துரோக செயலாக ஜே.வி.பி கட்சி கூறுகிறது. அரச தரப்பிலிருந்தும் சிலர் ஏறத்தாழ இதே கருத்தையே வெளியிட்டுள்ளனர். இச் செயற்பாடானது ஊடகங்கள் மீது அதிகாரத்தரப்புகள் காட்டுகின்ற அழுத்தத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.

எவ்வாறெனினும் தமக்கு ஆதரவாக எழுதும் போது ஊடகங்களை பாராட்டுவதும், தாம் பாராளுமன்றத்தில் எதிர்தரப்பில் இருக்கும் போது ஊடகங்களை ஜனநாயகத்தின் தூண்களாக போற்றுவதும், பின்னர் ஆட்சிக்கு வந்ததும் தமது ஊழலை அம்பலப்படுத்தும் ஊடகங்களை திட்டித் தீர்ப்பதும் இந்த அரசியல் வாதிகளுக்கு வழமையாகிப் போய்விட்டது.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை – 21

1. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு.
2. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

கருத்தாடல் களம்

வவுணதீவு தாக்குதல் சமாதான விரோதிகளின் செயல்

வவுணதீவில் புலிகள் மீது இடம் பெற்ற தாக்குதலானது அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே ஜெனீவாவில் இடம்பெற்றுள்ள போர்நிறுத்த உடன்படிக்கை குறித்த பேச்சுக்களை குழப்புகின்ற செயலாகவே உள்ளது.

விசேடமாக சமாதானத்தை விரும்பாத சில இனவாதத்தரப்புகளும், கருணா உள்ளிட்ட ஒட்டுப்படைகளும் சமாதானமான சூழலை விரும்பவில்லை என்பது வெளிப்படையானது. அவ்வாறு சமாதானம் ஏற்பட்டால் தமக்கு இருப்பு இல்லாமல் போய்விடும் என்பதே இவர்களது பயமாகும்.

எஸ்.சரவணபவானந்தன், அரியாலை

மஹிந்த முஸ்லிம்களை ஏமாற்றியுள்ளார்.

ஜெனீவா பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்காமல் பேரியல் அஷ்ரப்பை அரச குழுவில் இடம்பெற வைத்ததன் மூலம் முஸ்லிம்களை மஹிந்த ராஜபக்ஷ ஏமாற்றியுள்ளார்.

அடுத்து இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றிலும் கூட முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்குவது தொடர்பாக எவ்வித உறுதி மொழியையும் மஹிந்த ராஜபக்ஷ வழங்கவில்லை. இதன் மூலம் அவர் முஸ்லிம்களின் விடயத்தில் அலட்சியமாக நடக்கிறார் என்றே கூற வேண்டியுள்ளது.

முகமட் ரிஷாட், காத்தான்குடி

முஸ்லிம்களின் மீது மகிந்த அக்கறை கொண்டுள்ளார்.

கடந்த ரணில் அரசாங்க காலத்தில் இடம் பெற்ற பேச்சுக்களில் முஸ்லிம்களுக்கு தனி இடம் வழங்கப்படவில்லை. அத்தோடு அப்பேச்சில் கலந்து கொண்ட ரவூப்ஹக்கீம் முஸ்லிம்கள் குறித்து வாய்திறக்கவில்லை.

எனினும், இம்முறை பேச்சில் அமைச்சர் பேரியல் முஸ்லிம்கள் குறித்து பேச முடிந்தமையானது மஹிந்த முஸ்லிம்கள் மீது கொண்டுள்ள அக்கறையையே எடுத்துக் காட்டுகிறது.

ஏ. முகமட் ரிஷ்வி, சம்மாந்துறை

சமாதான நிகழ்வுகள்

தொண்டுத்துவத்தினூடாக அபிவிருத்தியும் சமாதானமும்

சர்வதேச தொண்டர் தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி ஸ்தாபனம், தொண்டர்களுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆகியவை ஒன்று சேர்ந்து கடந்த மார்ச் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை காலி சாந்த அலோசியஸ் கல்லூரியில் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் தொண்டர்வம், விளையாட்டினூடாக சர்வதேச அபிவிருத்தி இலக்குகளையும், சமாதானத்தையும் அடைவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. பல்வேறு பிரதேசங்களையும் பல்வேறு இனங்களையும் சேர்ந்த நூற்றுக்கான தொண்டர்களும் பயிலுனர் ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி தேர்தலில் பெண்கள்

அரசியலில் பெண்களது பங்கெடுப்பை ஊக்கப்படுத்துவது குறித்த பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் அண்மையில் பெண்கள் ஊடக கூட்டமைப்பானது உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் பெண்கள் குறித்த ஊடக கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இலங்கை கல்வி நிறுவகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பெண்கள் அமைப்புகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வன்முறையும் கல்வியும்

வன்முறையும் கல்வியும் என்பதை வெவ்வேறு பரிமாணங்களில் நோக்க முடியும். ஒரு பரிமாணம் என்ன வென்றால் கல்வியினூடாக எவ்வாறு வன்முறை பரவலாம் என்பதை நோக்கல்.

கல்வியினூடாக எவ்வாறு வன்முறை பரவலாம்? படிக்கின்றார்கள், வேலை இல்லாமல் போகிறது, வேலை கேட்கிறார்கள், வேலை தரவில்லை. எனவே, வன்முறையில் இறங்குகிறார்கள். ஆனால், நான் அதைப் பற்றி இங்கு பேச வரவில்லை. இன்னுமொரு வடிவிலும் நோக்கலாம். வன்முறையை தவிர்த்துக் கொள்வதற்கு எவ்வாறு கல்வியைப் பயன்படுத்தலாம்?

இந்த நாட்டிலே இன ஒற்றுமை குலைந்து விட்டது. இனங்களுக்கிடையே பிரச்சினை தோன்றிவிட்டது. ஏன் அவ்வாறு என்றால் அதற்கு காரணம் இந்த கல்விமுறைதான். கல்வி முறையிலே நாங்கள் சிறந்த அறிவை, இன ஐக்கியத்திற்கு சாதகமான உணர்வுகளை, சிறந்த மனப்பான்மையை எங்களுடைய கல்வியினூடாக நாங்கள் ஊட்டவில்லை எனவேதான் இன வேறுபாடுகள் தோன்றுகின்றன. வன்முறை பிறக்கின்றது என்ற ஒரு கருத்தையும் பலர் முன்வைக்கிறார்கள் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அதைப் பற்றியும் கூற விரும்புகின்றேன்.

சில புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வன்முறையை தூண்டும் சந்தர்ப்பங்களும் உண்டு. இலங்கையில் 1970இன் பின் பல்கலைக்கழக அனுமதியில் புள்ளிகளைத் தரப்படுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து முக்கிய விஞ்ஞானப் பயிற்சி நெறிகளில் தமிழ் மாணவர்களின் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது. உயர் கல்வி வாய்ப்புகளைக் கணிசமாக இழந்தமையால் தமிழ் இளைஞர்கள் அடைந்த விரக்தி நிலையும் தமிழர் அரசியல் வன்முறைப்படுத்தப்பட்டமைக்கு ஒரு முக்கிய காரணம் எனக் கருதுவோர் உளர் பல்கலைக்கழக வாய்ப்புகள் போதிய அளவுக்கு, தேவைக்கு ஏற்ப விரிவு செய்யப்படாமை தென்னிலங்கையில் வன்முறை அரசியலில் இளைஞர் ஈடுபடத் தூண்டிய ஒரு காரணியென இளைஞர் அமைதியின்மையை ஆராய்ந்த சனாதிபதி ஆணைக்குழு கூறியிருந்தது. இந்தியாவில் பின்தங்கிய வகுப்பினருடைய மேம்பாடு கருதி அவர்களுக்கு மேலதிக உயர்கல்வி வாய்ப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட போது பல மாநிலங்களில் வன்முறைச் சம்பவங்கள் தோன்றின.

நான் பேசவிருப்பது என்னவென்றால் இந்த வன்முறைகள், பலாத்கார நடவடிக்கைகள் எவ்வாறு கல்வி வளர்ச்சியைப் பாதிக்கின்றன என்பதுதான். என்னுடைய தலைப்பின் உட்பொருளாக அமையும். கல்வியை ப்பற்றிக் கூறுவதாக இருப்பின் யாவருக்கும் கல்வி என்ற கோட்பாடு இன்றைய காலகட்டத்தில் தான் முன்வைக்கப்பட்டிருக்கிறது. யாவருக்கும் கல்வி யாவருக்கும் விஞ்ஞான கல்வி என்ற கருத்து 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே முன் வைக்கப்படவில்லை அண்மையில் 1990களில் தான் முன்வைக்கப்பட்டது. காலங்காலமாக கல்விமுறை எவ்வாறு இருந்து என்பது பற்றி நாம் ஆராய்ந்து இருந்தால் கல்விமுறைகள் வசதி மிக்கவர்களுக்குரியதாக செல்வாக்கு மிக்கவர்களுக்குரியதாக ஒரு பொழுது போக்குச் சாதனமாகத்தான் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்றைய நவீன கால கட்டத்திலே கல்வியின் ஒரு முக்கிய பணி என்ன வென்றால் கல்வி மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதாகும்.

– பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

தேசிய இனப்பிரச்சினை போர்க்காலத்தில் கல்வி போர்க்காலத்தில் சிறுவர் உளவியல் – எனும் புத்தகத்திலிருந்து பெறப்பட்டது.

அப்படித்தான் செய்வார்கள்

பூக்களுக்கு
வாழ்த்துக்கள் கூறி
அதன் வேர்களுக்கு
நஞ்சூட்டினர்

தென்றலை
வரவேற்று
பின் நின்று
தீப்பிழத்தனர்

முகம் நோக்கி
புன்முறுவல்கள் காட்டி
கழுத்துக்குப் பின்
கத்திகளை நீட்டினர்

நாங்கள்
உங்கள் மனிதர்கள்
என்று சொல்லி
எங்களை விட்டு
அந்நியப்பட்டு
எதிரிகளுடன் கலந்து
அடையாளமிட
வந்தனர்

எமது யுத்தமென
உரத்துக் கூறி
துவக்குகளை
முகம் பார்க்க
வைத்துக்கொண்டனர்

ஈழகணேஷ்

நன்றி விடிவுஸ்ரீ

இவ்வார விழிப்பிவ்

- சர்வகட்சிமாநாடும் அரசியல் சூழலும்
- உங்கள் குரல்
- வடக்கு முஸ்லிம்களின் எதிர்காலம்
- ஆறு சுற்று பேச்சுக்களும் படிப்பினைகளும்
- சமாதான நிகழ்வுகள்

வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net

விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், சூபவாஹினி 'ஹ' அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) – சிற்றம்பலம் கணேசன்

இந்தியாவில் மாநிலங்களின் தேர்தல் காலத்தில் நடத்தப்பட்ட வாரணாசிக் குண்டு வெடிப்புகள்

காசி இந்துக்களின் - அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் மிகமிகப் புனித நகரமாக தொல்பழங்காலத் திலிருந்து பேணப்பட்டு வருகின்ற ஒரு புனித தலமாகும்.

காசிக்குச் சென்று திரும்பினால் - அல்லது அங்கேயே உயிரைவிட்டு புனித கங்கை யாற்றின் கரையில் எரியூட்டப்பட்டு சாம் பலை அந்த ஆற்றில் கரையச் செய்துவிட் டால் மனிதனின் மீண்டும் மீண்டும் பிறப் பெடுக்கும் கரும வினையெல்லாம் தீர்ந்து விடும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

பண்டைய அரசர்கள் காலத்திலிருந்து

வாரணாசி குண்டு வெடிப்பில் காயமுற்ற ஒருவர்.

புனித நகரமாகப் போற்றப்பட்டும்; பேணப் பட்டும் வருகின்ற அந்த நகரில் அதுவும் கோயில் ஒன்றில் குண்டுகள் வெடிக்க வைக் கப்பட்டு 20 பேருக்கு மேல் கொல்லப்பட் டுள்ளார்கள் என்ற செய்தி இந்து சமயத்தைப் பின்பற்றுகின்ற அனைத்து மக்களதும் மனங் களைப் பெரிதும் பாதித்திருக்கும் - புண் படுத்தியிருக்கும் சிலரை ஆத்திரம் கொள்ள வும் செய்திருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை.

புனிததலங்களைத் தாக்குவதாலோ அங்கே கூடியிருக்கும் பக்தர்களைக் கொல்வதாலோ அந்த மதத்தை ஒழித்துவிடலாம் அல்லது அந்த வழிபாட்டை நிறுத்திவிடலாம் என்று எவரும் கருதுவார்களானால் அது பேதமை யன்றி வேறொன்றுமில்லை. அதனால், சம்பந் தப்பட்டவர்கள் மீது வெறுப்பும் பகைமை யும் அதிகரிக்கும் என்பதும் ஒரு புறமிருக்க, நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராடுபவர்களுக்கு இருந்துவரும் ஆத ரவும் அனுதாபமும் கூட இல்லாமல் போய் விடும்.

காசி (வாரணாசி) அனுமார் கோயிலி லும் அருகிலுள்ள ரயில் நிலையத்திலும் வெடித்துள்ள குண்டுகளினால் குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டிருக்கலாம். பலர் காய மடைந்திருக்கலாம் என்று முதல் வந்த செய்திகள் கூறின. இந்தச் சம்பவத்துக்கு இஸ்லாமிய அமைப்பொன்று பின்னணியில் இருந்திருக்கவேண்டும் என்று அதிகாரிகள் நினைக்கிறார்கள்.

நல்லவேளையாக இந்திய மத்திய அர சாங்கமும் மகாராஷ்டிரா மாநில அரசும் உட னடியாகத் தலையிட்டு நிலைமை கட்டுக்குள் இருக்கும்படி செய்துவிட்டார்கள். இதைப் பாராட்டவேண்டும். இந்திய அதிகாரிகள் உடனடியாகவே செயற்பட்டு வாரணாசியில் மட்டுமன்றி இந்தியா முழுவதிலுமே மேற் கொண்டும் புனித ஸ்தலங்களில் இம்மாதிரி சம்பவங்கள் இடம்பெறாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகளை ஜரூர் படுத்தியுள்ளார்கள்.

மதம், சமயம், மார்க்கம் மற்றும் வேதம் என்று மனிதர்களால் தத்தமது சிந்தனைக்கும் மொழிக்கும் ஏற்ற முறையில் தமது தெய்வ நம்பிக்கைக்குப் பெயர் இட்டு அழைத்துக் கொண்டாலும் இவை அனைத்துமே பெயரோ, உருவமோ ஆதியோ அந்தமோ இல்லாத ஒரு 4 பேர் உயர் சக்தியாம் இறைவனை அடைவதையே நோக்கமாகக் கொண்டுள் ளன. இறைவனின் விரும்பத்தின் பேரா லேயே தம் சமயம் உருவானதாக ஒவ் வொரு சமயத்தவரும் எண்ணிக்கொள்கிறார் கள். இறைவன் தனக்கு உடந்தையில்லா சம யங்களை அழித்துவிடும் அல்லது இல்லாது செய்துவிடும் ஆற்றல் அவ்வாறு செய்யா திருப்பதுவும் இல்லாதவனல்ல என்பது எவ ருக்கும் தெரியும் அவன் விருப்பமாகத் தானே இருக்கவேண்டும். எனவே, மிகவும் சிக்கலான இந்த விடயத்தில் இறைவன் செய்யவேண்டிய காரியத்தை மனிதர்கள் தாம் செய்ய முற்படுவதனாலேயே மதச் சிக் கல்கள் ஏற்படுவதாகின்றது.

எல்லா மதங்களிலும் உண்மையிருக்கின் றது. அவரவர் தம்தம் சமயங்களைச் சரிவரப் பேணிக் கொண்டால் மதச்சில்கல்களுக்கு இடமில்லை. இமயத்தில் ஊற்றெடுக்கும் ஓடைகள் எல்லாம் தத்தமது வழியில் சுற்றிச் சுழன்றும் நேர்கோடாகவும் ஆறாகப் பெருகி சமுத்திரத்தில் கலப்பதுபோல் சகல சமயங் களுக்கும் இறைவனை நோக்கியே நகர்கின் றன என்ற முற்காலத்து இந்துதர்ம ஞானி

அதனை வைத்து அரசியல் நடத்தக்கூடாது

களின் உபதேசங்கள் இந்துக்களை வழி நடத்தவேண்டும். அதை அவர்கள் பற்றி நிற் பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், இந்தியாவில் பல மாநிலங்களி லும் தேர்தல்கள் இடம்பெறவிருப்பதால் தீவிர இந்து தத்துவக் கட்சிகள் காசிக் குண்டு வெடிப்பை வைத்து அரசியல் நடத்த முனை யக்கூடும். அவ்வாறு செய்து நிலைமையைக் கெடுத்துவிடக்கூடாது. சகிப்புத் தன் மைக் குப்பேர்போன இந்துக்கள் அதைத் தொடர்ந் தும் நிலைநாட்டவேண்டும்.

* * *

இஸ்ரேல் - பலஸ்தீன்
நேரடி மோதலுக்கு ஆயத்தங்கள்

பலஸ்தீனத்தில் புதிய அரசமைப்பதற் கான ஆயத்தங்களை 'ஹமாஸ்' அமைப்பு ஏற்பாடுகளைச் செய்துவரும் அதேவேளை, இஸ்ரேலிலும் இம்மாதம் 28ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இந்த நிலைமையில் இரு நாடுகளின் முக் கிய தலைவர்கள் வெளியிட்டுவரும் கருத்து கள் புதிய நேரடி மோதலுக்கு அவர்கள் ஆயத்தம் செய்துவருகிறார்களோ என்ற



வாரணாசி குண்டுவெடிப்பின் பின்னர் பொலீஸாரும் பொதுமக்களும் சம்பவ இடத்தில் காணப்படுகின்றனர்.

ஐயத்தை எழுப்பியுள்ளது.

இஸ்ரேலுக்கு எதிரான ஆயுதப் போராட் டத்தைக் கைவிடப் போவதில்லை - பலஸ் தீன அதிகார சபை இஸ்ரேலை அங்கீகரித்த

பலஸ்தீன் - இஸ்ரேல் மீண்டும் நேரடி மோதலுக்குத் தயார்?

தன் மூலம் எதையும் சாதித்துவிடவுமில்லை என்று பலஸ்தீனத்தின் அதி உயர் தலைவர் மார்ஷால் ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திவிட்டு வந்த கையோடு டுபாய் தொலைக்காட்சியான அல் அராபி யாவுக்கு அளித்த பேட்டியில் உறுதிபடக் கூறியிருக்கிறார். அதேவேளை, யூதக் குடி யிருப்புகள் மீது அரபுத் தீவிரவாதிகள் தாக் குதல்களைப் புதுப்பிப்பார்களானால் அவர் களின் தலைவர்கள் பலஸ்தீனப் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்மாயில் ஹனி யேஹ் உட்பட எவரும் தப்பமாட்டார்கள். அவர்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்து வதை இஸ்ரேல் கைவிடாது. இப்படி கூறி யிருக்கிறார் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச் சர் ஷாஷல் மோபாஸ் - கடந்த காலத்தில் சிரேஷ்ட ஹமாஸ் தலைவர்கள் சிலரை இஸ் ரேலியர் குறி வைத்துத் தாக்கிக் கொன்றிருக் கிறார்கள். ஹமாஸின் நிறுவுநர் அகமது யாகினும் இவ்வாறே கொல்லப்பட்டவர். இரு தரப்புக்குமிடையில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதையடுத்து தாக்குதல் கள் நிறுத்தப்பட்டன. ஹமாஸ் அமைப்பும் ஒத்துழைத்து வந்துள்ளது.

ஹமாஸையும் ஏனைய தீவிரவாதக் குழுக் களையும் ஆயுதங்களைப் போட்டுவிட்டு அரசியல் கட்சிகளாக மாறுங்கள் என்று கூறு வது யதார்த்த நிலைக்கு ஒத்துவராது. பலஸ் தீனத்தின் யதார்த்த நிலைக்கு இது ஒத்து வராது. எனவேதான், எதிர் நடவடிக்கைகளி லும் எமது மக்களைப் பாதுகாப்பதிலும் நாங் கள் தொடர்ந்து ஈடுபட்டுவரவிருக்கின் றோம். அதேநேரம் பலஸ்தீனத்தின் உள்ளக ஒழுங்குகளைச் சீர்படுத்துவதற்காக அமைதி யான அரசியல் செய்ய விரும்புகின்றோம் என்று ஹமாஸ் தலைவர் தொலைக்காட்சி பேட்டியில் கூறியிருந்தார்.

எமது பிரச்சினைக்கான தீர்வு இஸ்ரேலை அங்கீகரிப்பதில் தங்கியிருக்கவில்லை. இஸ் ரேலியரின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதிலேயே அதுஇருக்கின்றது. இஸ்ரேல் எங்கள் மீது போர் தொடுக்குமா னால் நாங்களும் போருக்கு ஆயத்தமாக விருக்கின்றோம். ஆனால், இஸ்ரேல் அமை தியை விரும்பினால் பலஸ்தீன இறைமைக் குட்பட்ட ஆக்கிரமிப்பு நிலங்களிலிருந்து வெளியேறட்டும் என்று மார்ஷால் தெரிவித் துள்ளார்.

***

ஜப்பானில் பெண் அரச வாரிசுக்கு எதிர்ப்பு

உலகின் மிகத் தொன்மையான ஜப்பா னிய அரச குடும்பத்தில் பெண்களும் அவர் களின் வாரிசுகளும் சிம்மாசனம் ஏறி முடி சூட்டிக் கொள்வதற்கு வழிசமைக்கும் ஒரு சட்ட மூலம் ஜப்பானிய நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவிருக்கின்றது. இந்தச் சட்ட மூலத்தை ஜப்பானிலுள்ள பழைமை வாதிகள் மூர்த்தண்யமாக எதிர்க்கிறார்கள். இவ்வாறு எதிர்ப்பவர்களின் ஆர்ப்பாட்டம் ஒன்று அண்மையில் ஜப்பானிய தலைநக ரில் இடம்பெற்றது. பத்தாயிரம் பேர் வரை இந்த எதிர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். நாட்டின் பாரம்பரியத்தையும் வரலாற்றை யும் புறக்கணித்து புதிய நாடு ஒன்றை உரு வாக்குவதற்கு இந்த புதிய சட்டத் திருத்தத் தைக் கொண்டு வருகிறவர்கள்; முயல்கின் றார்கள். என்று மேற்படி ஆர்ப்பாட்டத்தின் அமைப்புக் குழுவின் தலைவரான டோரு மியோஷி என்பவர் கூறினார். இவர் ஜப் பானிய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைவருமாவார். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜப்பானிய தேசிய கீதத்தை இசைத்து கொடி யையும் உயர்த்தினார்கள்.

1965ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜப்பா னிய அரச குடும்பத்தில் ஆண் குழந்தை எது வும் பிறக்கவில்லை. இதனால், ஜப்பானிய மரபின்படி அரசுக் கட்டில் ஏறுவதற்கு ஆண் வாரிசு இல்லாமற்போய்விட்டது. ஆகவே தான், பெண்களும் அரசுக் கட்டில் அமர லாம் என்று கூறும் சட்டத் திருத்தம் ஒன்றை நர்டாளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சி நடைபெறுகின்றது.

முடிக்குரிய இளவரசர் நருஹிட்டோவின் இளைய சகோதரரின் மனைவி இளவரசி கிக்கோ இப்பொழுது கர்ப்பிணியாகவுள்ளார். இவருக்காகுதல் ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஜப்பானியர்கள் எதிர்பார்க்

ஜப்பானிய முடிக்குரிய இளவரசி மாசாக்கோ புன்னகையுடன் காணப்படு கிறார்.

கிறார்கள். இத்தச் செய்தி புதிய சட்டம் நாடா ளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதை தாமதிக் கச் செய்துள்ளது. எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கியோட்டோ பல்கலைக்கழக விஞ்ஞான பேராசிரியர் டெரு மாசா நாக்கானி ஷி கூறுகையில், இளவரசி கிக்கோ கர்ப்பம் தரித்திருப்பதைப் பெரிதும் வரவேற்றார். இந்த கர்ப்பத்தின் மூலம் ஏதா கிலும் அற்புதம் நடக்கலாம். அது மனித சக் திக்கு அப்பாற்பட்டது என்றார் அவர்.

புதிய சட்டம் கொண்டுவரப்படுவதற்கு நாட்டில் பரவலாக இளைய தலைமுறையின் மத்தியில் வரவேற்பு இருக்கின்றது. ஆனால், பழைமை விரும்பிகள் எதிர்க்கிறார்கள்.

முடிக்குரிய இளவரசனான நாருஹிட் டோவுக்கு அவரது மனைவி மாஸாக்கா - அமெரிக்காவில் கல்வி கற்ற முன்னாள் தொழில்முறை ராஜதந்திரி - மூலம் ஒரு நாலு வயது பெண்குழந்தையுண்டு. புதிய சட்டமூலம் நிறைவேறினால் இக்குழந்தை அரச கட்டில் ஏறி முடிசூட்டிக்கொள்ளும் வாய்ப்பைப் பெறும்.

இளவரசி கிக்கோ கர்ப்பமாகவிருக்கிறார் என்ற செய்தி வெளிவந்ததும் புதிய சட் டத்தை பிரதம மந்திரி ஜனிசிரோ கொய்சுமி கிடப்பில் போட்டுவிட்டார்.

ஐ.நா. மீது பெண்கள் பாய்ச்சல்

உலகமட்டத்தில் பெண்களின் பிரச்சி னைகளை ஐ.நா. ஸ்தாபனம் உரியமுறையில் அணு கவில்லை. ஐ.நாவின் சீர்திருத்தங்களில் பால் சமத்துவத்தை ஓர் அம்சமாக நோக்கி அதன் நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு பெண்கள் உலக அமைப் பொன்று ஐ.நா நிறுவனத்தைக் கடுமையாகச் சாடியுள்ளது.

நாங்கள் ஏமாற்றம் உற்றுள்ளோம். உண் மையில் நாங்கள் ஆத்திரமூட்டப்பட்டுள் ளோம். பால், சமத்துவம் மற்றும் பெண் களுக்கா நவீன முன்னேற்றங்களை ஸ்திரப் படுத்துவது எதுவும் செயல்படுத்தப்பட வில்லை. ஐ.நாவின் சீர்திருத்தச் செயற் பாட்டு நிகழ்ச்சி நிரலில் இவை முக்கிய இடம்பெற்றிருக்கவேண்டும் என்று அவ்வ மைப்பு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் மற்றும் உலக நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ள பகிரங்க அறிக்கையில் தெரி வித்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பெண்களின் அந்தஸ்து தொடர்பான இரண்டு நாள் ஐ.நா. மாநாடு ஒன்றில் இப்பெண்கள் குழுக்கள் கலந்துகொண்டன.

1995ஆம் ஆண்டு பீஜீங்கில் நடை பெற்ற மாநாட்டில் பால் சமத்துவத்துக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 10 ஆண்டு களுக்கு மேலாகிவிட்டன. ஆனால், ஒருசில முக்கிய குழுக்களில் ஒருசில நியமனங் களைத் தவிர இன்னமும் பெண்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வில்லை. ஐ.நா. பிழையான முறையில் தீர் மானம் எடுத்துவருகிறது. தீர்மானம் எடுக் கும் தலைமை நிலைகளில் 50/50 ச ம, பெண்கள் இடம்பெறவேண்டும் என்று ஒரு பெண் அமைப்பின் தலைவர் கூறினார். **

ஜப்பானிய அரச வாரிசு பற்றிய சர்ச்சை

முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கலந்துரையாடல்

சாவகச்சேரி மார்ச்12

தென்மராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரை யாடல் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணிக்கு மீசாலை புத்தூர் சந்தியிலுள்ள முன்பள்ளி கல்வி மேம் பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது என தென்மராட்சி முன் பள்ளி நிலைய இணைப்பாளர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் முன்பள்ளி சிறார்களுக்கு (போசாக்கு) சத்துணவு வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

(3-31)

யாழ் ரெக் DIGITAL MEDIA COLLEGE
Affiliated with AIMST UNIVERSITY - MALAYSIA
02 மாத குறுகியகால அடிப்படையில் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றன
கொழும்பின் முன்னணி ஆசிரியர்கள் மீண்டும் யாழில்...
DIPLOMA IN DTP
DIPLOMA IN GRAPHIC DESIGNING
DIPLOMA IN VIDEO EDITING
DIPLOMA IN MULTIMEDIA
DIPLOMA IN 3D ANIMATION
DIPLOMA IN HARDWARE ENG.
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டிச்சந்தி

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய மூன்று சாரதிகளுக்கு நீதிமன்றம் அபராதம்

தென்மராட்சி, மார்ச்12

அனுமதியின்றி மணல் ஏற்றிய மூன்று உழவு இயந்திர சாரதிகளுக்கு தலா 54 ஆயி ரத்து 500 ரூபா வீதம் ஒரு லட்சத்து 63 ஆயி ரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன் கிழமை இவ்வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த அபராதம் விதிக் கப்பட்டது.

அத்துடன் உழவு இயந்திரத்தில் கொண்டுவரப்பட்ட மணலை ஏற்றிய இடத் தில் பறிக்குமாறும்-

இரண்டு வருட காலத்திற்கு இவ்வாறான குற்றச் செயல்கள் செய்யமாட்டோம் என்ற உத்தரவாதக் கடிதம் வழங்குமாறும்-

மறு கட்டளை பணிக்கப்படும்வரை தின மும் உழவு இயந்திரத்துடன் வந்து நீதிமன் றில் கையொப்பமிடல் வேண்டுமெனவும் - நீதிவான் உத்தரவிட்டார்.

(3-117)

இதோ ஓர் அரிய வாய்ப்பு !!! மட்டுப்படுத்தப்பட்ட அளவினர்க்கே
ALL OF FULL VERSIONS
Password Breaking Software Kit Only 600/=
Word, Excel, Access, Powr Point, Out look, E-mail, Internet Explorer, Messengas(MSN, Yahoo, ALO, ICQ ,ATT, odigo, T-Onlain, Etc...), FTP, Outlook Express, SQL, ACT, Backup Key, Money Key, Arehive, Lotus, VBA, MS Office,Adobe PDF, Win RAR, WinZIP, Etc...
மேலுள்ள அனைத்து வகையான Passwordகளையும் உங்கள் ஒருவரால் உடைக்க முடியும் ரூபா 600/= மட்டுமே!
Windows Administrator Password Remover
எந்த ஒரு WINDOWS கணனியிலும் Adiministrator User பாஸ்வேட் டினை உடைப்பதற்கான 100% உத்தரவாதம்.
ஒரு கணனிப் பொறியியலாளரால் செய்ய முடியாததை உங்களால் செய்ய முடியும். முதலில் வரும் 100 பேருக்கு மட்டுமே வழங்கப்படும் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.
~~18,000/=~~ 1,000/=
Total Free for you:
PDF to Word, Zip Repair, Deleted File Recovery, EXE Password & PC Security
CD's CITY
205/5, KASTHOORIYAR ROAD, JAFFNA.
Call ME: R.Sutharshan 0776687564

AYURVEDIC MEDICINE
+ ஆயுர்வேத மருந்துகள் +

இந்தியாவில் பிரசித்திபெற்ற ஆயுர்வேத மருந்துகள் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பின்வரும் நோய்களுக்கு நிவாரணி

தோல் நோய்கள், வாத நோய்கள், சுவாசத்தொகுதிகளில் ஏற் படக்கூடிய (ஆஸ்துமா, இருமல், தடிமல்) நோய்கள், சமிபாட் டுத்தொகுதி நோய்கள், கை, கால்மூட்டு வியாதிகள், நீரிழிவு நோய், ஆண்மைக் குறைபாடு, பெண்களுக்கான மாதவிடாய் சம்பந்தமான பிரச்சினைகள், மலச்சிக்கல், மூல வியாதி, அதிகப் படியான கொலஸ்ட்ரோல் மற்றும் உடற்பருமனை குறைக் கக்கூடிய மருந்து வகைகள் அத்துடன் விசேடமாக தயாரிக் கப்பட்ட சிறுபிள்ளைகளுக்கான சமிபாட்டுக் குளறுபடிகளுக் கும் மற்றும் சகல குழந்தைகளுக்குமான மருந்துகளும் இப் பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கும்.

யாழ்ப்பாண விநியோக முகவர்:

ஜெகன் மருந்தகம்

462 'B' ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 021 - 222 2194, 222 3191

இறக்குமதியாளர்கள்:

லங்கா ஹேபல்ஸ் (பிரை) லிமிடெட்,
14, ஸ்ரேசன் வீதி, தெகிவளை.
தொலைபேசி:- 543217, 5432100
உடன் அழைப்பு:- 0777 395194

47 ஆவது நாள் நினைவு அஞ்சலி

மண்ணில்
27
09
1976
விண்ணில்
23
01
2006



அமரர் சந்திரகாயன் விஜயதர்சன் (கோபி)
(உரிமையாளர் - கண்ணன் களஞ்சியம், மீசாலை)

ஒளி பெறும் உன் முகம் காணும் போது
வழியேதும் சொல்லாது பறி போனாயே!
விழிகள் நனைகின்றது விடியவில்லையே!
வாடுகின்றோம் உன்னைக் காணவில்லையே!
ஆறாது உன் பாசமொழிகள்
மாறாது என்றும் எம் மனதிலிருந்து

அம்பன், குடத்தனை.

அக்கா கிரிதா குடும்பம்,
லங்கநாதன் குடும்பம்,
நகுலராஜா குடும்பம்.

(47847)(61-11)

4வது வருடத்தில் BBS இன் 4 வளாகங்கள்

யாழ்ப்பாணம் கோயில் வீதி
யாழ்ப்பாணம் கண்டி வீதி
மந்திகை, புலோலி.
மானிப்பாய் ஆலடிச்சந்தி

எதிர் வரும் மாசி மகம் அன்று ஏடு தொடக்கி இம்மாதமும் சித்திரை மாதமும் பாலர் பாடசாலை அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

Year 1-5 English Medium
Week End Classes நடாத்தப்படும்.
ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், பாடல்கள் ஆகிய பாடங்கள் நடை பெறுகின்றன.
மற்றும்
அலுவலக உத்தியோகத்தர்களுக்கு விசேட
Diploma in Business English
Includes Report Writing & Letter Writing

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை
விசேட அம்சங்கள்
வயது 2+ முதல் வயது 3 வரை Play Group
வயது 3+ முதல் வயது 4 வரை Montessori
வயது 4+ முதல் வயது 5+ வரை Pre-School
✲ ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
✲ தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
✲ பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
✲ முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

BBS ஆல் நடாத்தப்படும் மற்றைய ஆங்கில மொழி பாடநெறிகள்
Diploma in English
Certificate in English
IELTS
5+ to 14+ சிறார்களுக்கு
PRE-FOUNDATION
FOUNDATION
LOWER INTERMEDIATE
INTERMEDIATE
UPPER INTERMEDIATE

BRITISH BUSINESS SCHOOL
இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
பா.ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை, புலோலி.
இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய்.
HOT LINE : 021-222-5796 e-mail: british.businessschool@gmail.com
British BUSINESS SCHOOL

கச்சதீவுத் திருவிழாவில் அன்று நடந்தவை மீண்டும் நடைபெறப் போவது எப்போது?

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று நடைபெறுகின்றது. மூன்று தசாப்தங்களின் முன்னர் மேற்படி தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழா எவ்வகையில் நடைபெற்றது என்பது பற்றி தமது நினைவுகளை மீட்டுகின்றார் கட்டுரையாளர்.

மூன்று தசாப்தங்களின் முன்னர் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகிறது எனின், யாழ். குடாநாடும் தமிழகமும் மட்டுமன்றி, ஏன் இலங்கையின் மலையகப் பகுதியும் களைகட்டிவிடும்.

ஆறு தினங்கள் வரை தமிழகத்தில் உள்ள தமது உறவுகளைச் சந்திக்க வென அப்போதெல்லாம் மலையக மக்கள் அங்கு வருவதுண்டு. உறவினர்களைச் சந்தித்து அவர்களைக் கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து தம்முடன் எடுத்துவந்த பொருள்களை வழங்கி மகிழ்ச்சியுறும் காட்சிகள் இன்றும் மனக்கண்ணில் நிழலாடுகின்றன. என்ன ஒரு சந்தோஷம்? மகிழ்ச்சியும் கோடி. அற்புதரின் அருளாசியும்.... அது ஒரு பொற்காலம்...

இன்று அந்த நிலை இல்லை. இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையால் பொலிவிழந்தவற்றுள் கச்சதீவும் ஒன்று. சுமார் 15 வருடங்களாக எமது மக்கள் அங்கு சென்று புனித அந்தோனியாரைத் தரிக்க முடியாத நிலை இருந்தது. எனினும், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் அங்கு மூப்பர் தலைமையிலான குழு சென்று திருப்பலிகளை முடித்து உடன் நெடுந்தீவுக்குத் திரும்பிவிடும். இப்போது ஓரளவு சிறுமாறுதல். அதாவது, மக்கள் சென்று தமது பிரார்த்தனைகளை நிறைவேற்றியபின் மறுநாள் அங்கிருந்து வெளியேறிவிடவேண்டும்.

கடந்த ஆண்டில் யாத்திரிகர்களின் வருகை சிறிது கூடுதலாக இருந்தது. தமிழக மக்கள் 803 பேரும் இலங்கையைச் சேர்ந்த 600 பேரும் அங்கு பிரார்த்தனைகளில் கலந்துகொண்டனர்.

மீண்டும் பழைய பொலிவுடன் தீவு விளங்கும் என்ற நம்பிக்கையுடன் வந்த இந்திய இளசுகள் ஒரு கட்டி சவர்க்காரத்திற்காக ஏங்கியதுண்டு. ஒரு காலத்தில் இலங்கை இந்திய மக்களுக் கிடையிலான பொதுச்சந்தையாகவும் உற்சவ காலம் இருந்தது குறிப்பிடத்தக்கது. அந்தக் கனவுடன் வந்தவர்கள் இவர்கள்.

வரண்ட வலயத்திற்குரிய முட்புதர்கள் சிறிய புற்தரைகள் கடற்கரைத் தாவரங்களைக் கொண்டதான 285 ஏக்கர் சுற்றளவான இந்தக் குட்டித் தீவு இலங்கை, இந்திய அரசுகளின் பார்வைக்குள் இன்றும் இருந்து வருகின்றது?

1974இல் திருமதி இந்திராகாந்தி, சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரிடையே ஏற்பட்ட உடன்பாட்டுக்கு அமைய இத்தீவு இலங்கைக்கு உரிமையாக்கப்பட்டது. இருநாட்டு அரசுகளுக்குமிடையில் கச்சதீவு குறித்த பிரச்சினை 1927 முதலே இருந்துள்ளது. இந்திய மீனவர்கள் அங்கு தொழில் செய்ய கச்சதீவு உடன்படிக்கை அனுமதிக்கின்றது.

எனினும், கச்சதீவை முற்றாகத் திரும்பப் பெற இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

கி.பி. 2ஆம் நூற்றாண்டளவில் நெடுந்தீவு தனிராச்சியமாக இருந்துள்ளது. கச்சதீவும் அதனுடன் இணைந்த பகுதியாகும். இத்தீவு நெடுந்தீவுக்குச் சொந்தமான ஒரு பகுதியே. இங்கு நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் நெற்செய்கைகளை மேற்கொண்டிருந்தனர். கணிசமான மழைவீழ்ச்சி இருப்பதால் நெடுந்தீவு மக்கள் நெற்செய்கைக்கு இத்தீவைப் பயன்படுத்தினர்.

மீண்டும் தலையெடுத்துள்ள கச்சதீவு பற்றிய உரிமைப் பிரச்சினை

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த கர்ணத்தின் ஆட்சி வரம்புக்கு உட்பட்ட பிரதேசம் இது என்றும் -

கச்சான் தீவு மருவி கச்சதீவாயிற்று

நம்புதாளை என்ற சிற்றூரைச் சேர்ந்த தமிழர் ஒருவரே இங்கு காணப்படும் கோயிலை 1913இல் கட்டியதாகவும் இந்தியத் தரப்பில் கூறப்படுவது தவறு.

1819இல் நெடுந்தீவைச் சேர்ந்த போஞ்சி அந்தோனி என்பரே இங்கு உள்ள கோயிலுக்கான முதல் குடிசையை அமைத்தவராவார். பின் நாளில் ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டியவர் நெடுந்தீவில் இருந்த வாஸ் அடிகளாரே. 1917இல் இது இடம்பெற்றது என 54 வருடங்கள் இந்த ஆலயத்தின் மூப்பராக இருந்த ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை உறுதிப்படுத்தியுள்ளார்.

- நெடுந்தீவு லக்ஸ்மன் -

கச்சதீவு எனப் பெயர் ஏற்படக் காரணமாக புராணக் கதைகள் கூறப்பட்டாலும், நெடுந்தீவில் இருந்து கச்சான் திசையில் தீவு இருப்பதால் கச்சான் தீவு என வழங்கப்பட்ட இது பின்னர் கச்சதீவாக மருவியுள்ளது. 'கச்' என்பது கடற்கரையையும் 'தீவு' என்பது நாற் புறமும் நீரினால் சூழப்பட்ட நிலத்தையும் குறிக்கும் என்பதால் கடற்கரைத் தீவு என வரையறை செய்யலாம் என வும் கூறப்படுகிறது. எனவே, இந்தப் பெயர் கடற்கரைத் தீவின் மருவலாகவும் பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். இந்தக் குட்டித் தீவைக் குஞ்சாட்டி எனவும் முன்னோர்கள் அழைத்துள்ளனர்.

கச்சதீவு குடிதண்ணீர் கிடைக்காத குடிசனமற்ற ஒரு பாலைவனம் போன்று காணப்படினும் அரசுகளின் பார்வையில் வேறு அர்த்தங்கள் இருப்பினும் புனித அந்தோனியாரின் அருள் வேண்டிய பார்வை இலங்கை, இந்திய மக்களிடையிலும் இருப்பதால் மக்கள் இத்தீவை நேசிக்கிறார்கள்.

"இலங்கை இந்திய நாடுகளின் பொதுவான ஒரு தீவாக இது விளங்கவேண்டும். இருநாட்டுமக்களுமன்றி ஏனைய மக்கள்கூட இங்கு வந்து செல்லக்கூடிய ஒரு நல்ல சுற்றுலா மையமாக இது மாற்றப்படவேண்டும்" என்பது கடந்த ஆண்டில் முதல்தடவையாக இங்கு வந்திருந்த தமிழகத்தைச் சேர்ந்த தமிழரசியின் கனவாகும். ★

கிளிநொச்சி இரு கல்வி வலயங்களானால் வளப்பங்கீட்டில் முன்னேற்றம் ஏற்படும்

கிளிநொச்சி கல்வி வலயத்தை இரு கல்வி வலயங்களாகப் பிரிந்து இயங்குவதற்கு எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

இலங்கையரசின் கல்விக் கொள்கையின்படி ஏனைய மாவட்டங்களில் பல கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

வன்னி மடல்

கிளிநொச்சி மாவட்டம் ஒரு கல்வி வலயத்தை மட்டும் கொண்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயம் 1236 கி.மீற்றர் பரப்பளவில் 96 பாடசாலைகளுடன் இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலைகளில் 32 ஆயிரம் வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தை இரு கல்வி வலயமாக இயக்கினால் பௌதிக வள உதவிகள் என்பன கூடுதலாகக் கிடைக்கும் என்ற கருத்து கல்வி துறைசார்ந்தவர்களிடம் காணப்படுகின்றது.

கடந்த வாரங்களில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கல்வி அதிகாரிகள் உரையாற்றுகையில் ஸ்ரீலங்காவில் தமது கல்வி வலயமே ஒரு மாவட்டத்தில் ஒரு கல்வி வலயம் என்றும் -

கூடுதல் பாடசாலைகள் உள்ள நிலையில் அரசின் வள உதவிகள் குறைவாகக் கிடைக்கின்றன என்றும் -

உதவிகளைப் பங்கீடு செய்யமுடியாத நிலையில் தவிக்கிறோம் - என்றும் கூறினர்.

முல்லைத்தீவு மாவட்டம் முல்லைத்தீவு, துணுக்காய் என்று இரு கல்வி வலயங்களைக் கொண்டுள்ள நிலையில் வளப்பங்கீடு எல்லாப் பாடசாலைகளுக்கும் ஓரளவு கிடைக்கக்கூடிய நிலையுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், கிளிநொச்சி கல்வி வலயம் 96 பாடசாலைகளைக் கொண்டுள்ளது என்று பெருமைப்படலாம். ஆனால், வளரீதியாக முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றன.

கிளிநொச்சி கல்வி வலயம் இரு பிரிவுகளாக உருவாக்கப்பட்டால் பூநகரி, கண்டாவளை கோட்டப் பாடசாலைகள் கூடுதலான வளர்ச்சியடையுமல்லவா?

- சி.மைதினி -

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அண்மையில் அபிராமிப்பட்டர் திருவிழா பக்திபூர்வமாக நடந்தேறியது. ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர், அபிராமிப்பட்டரின் திருவுருவத்திற்குத் தீபாராதனை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். வேரவில் வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்களும் படத்தில் உள்ளார். (எ)

யா/விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2006

இடம்: **கல்லூரி கேட்போர் கூடம்**
காலம்: **19.03.2006 ஞாயிறு மு.ப.9மணி**

1) பிரேரணைகள் இருப்பின் 17.03.2006 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.
2) வருட அங்கத்தவர்கள் இவ்வருட அங்கத்துவ சந்தாப் பணம் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ளவும்.

தங்களுக்கு எழுத்தறிவித்த, தங்களை உருவாக்கிய கல்லூரியின் மேம்பாட்டுக்கு உதவ அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவோடு வேண்டுகின்றோம்.

லயன் க.தணிகாசலம், தலைவர்.
கி.ரவிகுமார், செயலாளர்.
T.P.: 021 226 3138
(சி/48266)(26.19.45)

சின்னமடு பாடசாலையில் இன்று கட்டடத்திறப்பு விழா

ஊர்காவற்றுறை சின்னமடு றோ.க. பாடசாலையில் நிகொட் திட்டத்தின் கீழ் புதிதாக நிறுவப்பட்ட ஆரம்பக் கல்வி பிரிவுக்காக புதிய கட்டடத் திறப்பு விழா இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.சண்முகம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் கபரீமோகனன், ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், சின்னமடு தேவாலயப் பங்குத் தந்தை அருட்திரு பீற்றர்துரைரெட்ணம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-16-202)

கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பகுதியில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி **தில்லைநாயகி சிறிகரன்** அவர்களின் தந்தை

சண்முகநாதன்

காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலை
தாதி உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.
(47972)(21.26.19.45)

O/Lஐ நிறைவு செய்த நீங்கள் உங்களை ஏன்? தகவல் தொழில்நுட்பத்துடன் இணைத்துக் கொள்ளவில்லை!

கவர்ச்சி கரமான கட்டணக் குறைப்பை பெற்றுக்கொள்ள இக் கூப்பனை நிரப்பி நேரில் அல்லது கடிதம்மூலம் NIIT 347-2/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (தொ.பே:021 222 7250, 021 459 0567) என்ற முகவரி அனுப்பிவைக்கவும்

Name: ----------
Address: ----------
----------Tel: ----------

School: ----------
e-Mail: ----------

A/L இற்கு தயாராகும் போதே உங்கள் தொழிற்பயிற்சியினையும் தொடங்குங்கள்

உங்கள் தொழிற்பயிற்சி, ஆரம்பத்தில் வாரத்துக்கு 1 மணித்தியாலங்கள் மட்டுமே!

தொழில்வாய்ப்புக் கல்வியை வழங்குவதற்கே NIIT நிறுவனம்! துரிதமாக வளர்ந்து வரும் நிறுவனம் ஆகும். நீங்கள் தகவல் தொழில்நுட்ப நுணுக்கங்களைத் தெரிந்து வேலையைப் பெற்றுக் கொள்ள கணனிப் பட்டதாரி ஆகுங்கள்!

A/Lஐ ஏப்ரல் மாதத்தில் நிறைவு செய்யும் மாணவர்களுக்காக விசேட பிரிவு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.



NIIT

GLOBAL LEADERS IN IT EDUCATION AND TRAINING

Union place 011 4 720790, Bambalapitiya 011 4 519111, Nugegoda 011 4 408770, Kandy 081 4 470800, Kurunegala 037 4 691000, Gampaha 033 4 673222, Jaffna 021 222 7250, Trincomalee 026 222 7767, Anuradhapura 025 4 581003, Tissamaharama 047 4 378930

enabling the young professional for a better future

Australian Red Cross (ARC)

Working with the SriLanka Red Croos Society

Vacancies

The Australian Red Croos is implementing projects in the House and Hospital Refurbishment, First Aid, Livelihoods and Organisational Development sectors. It presently has a team of 16 staff and has offices in Jaffna and Kilinochchi Districts, as well as a site office in Vadamarachi East.

Finance / Administration officer (Jaffna)

Qualifications:
- Relevant tertiary level qualification.
- At least 3 years work experience in a similar position.

Competencies:
- Fluent in English, both written and spoken.
- Stong understanding of HR, petty cash, budget and office management practices
- Very competent with Microsoft Office; good understanding of PC use and troble-shooting
- Able to pick up new skills quickly
- Able to deliver results against specific objectives without constant supervision

Responsibilities
- Ensuring office is well maimtained and functions effectively
- Managing petty cash/bank reconciliations, working advances, and receipts/vouchers
- Facilitating budget development
- Facilitating travel by air to/from Colombo
- Supporting the administrative side of fleet management
- Managing correspondences and arranging meetings
- Supporting ARC security management plans
- Supporting ongoing recruitment

Finance Officer (Kilinochchi)

Qualifications:
- Relevant tertiary level qualitication.
- At least 3 yeras work experience in a similar position.

Competencies:
- Fluent in English, both written and spoken.
- Stong understanding of all standard office finacial processes: petty cash, working advances, budgeting, reconciliation, managing journals, audit etc.
- Very competent with Micrsotf Office; good understanding of PC use and trouble - shooting
- Able to deliver resuts against specitic objectives without constant supervision

Responsibilities
- Managing petty cash, cash/bank reconciliations, working advance, and receipts/vouchers
- Faciliating budget development
- Executing payments
- Monitoring pay-roll and per diems
- Keeping appropriate filing system

Administrative Officer (Kilinochchi)

Qualifications:
- Relevant tertiary level qualification.

Competencies:
- Fluent in English, both written and spoken.
- Very competent with Micrisoft Office; good understanding of PC use and trouble -Shooting
- Able to pick up new skills quickly
- Able to deliver results against specific objectives without constant supervision

Responsibilities
- Ensuring office is well maintained and functions effectively
- Facilitating travel by road and air
- Managing correspondences and arranging meetings
- Managing the office filing system
- Supporting ARC security management plans
- Supporting ongoing recruitment

Applications (including Curriculum Vitae) should be submitted to the Director of the Sri Lanka Red Cross Society in Jaffna (73 Kandy Road) or Kilinochchi (Railway Station Road). Full details of educational background, work experience and referees must be provided.

Application deadline: Wednesday 22 nd March 2006

A competitive salary and benefits packages will be offered to the selected candidates

(C/48269)

1000 விக்கெட்டார் முரளி

பங்களாதேஷ் உடனான இரண்டு டெஸ்டிலும் மூன்று சாதனைகளைப் புரிந்துள்ளார் இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் முரளிரன்.

முதல் டெஸ்டில் சர்வதேச கிரிக்கெட்டில் 1000 விக்கெட்டுகள் வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனையைப் பெற்ற முரளி, இரண்டாவது டெஸ்டில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட்டுகள் இலக்கை அடைந்த இரண்டாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

அதேவேளை - அந்த டெஸ்டில் பங்களாதேஷிற்கு எதிராக 50 விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமையைப் பெற்றதோடு டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகள் ஒவ்வொன்றுக்கு எதிராகவும் 50 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய முதல் பந்துவீச்சாளர் என்ற சாதனையையும் பெற்றார்.

இலங்கையின் மலையகப் பிரதேசமான கண்டி மாவட்டத்தில் 1972ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி பிறந்த முரளிதரன் 14 ஆண்டுகாலமாக இலங்கை அணியில் விளையாடிவருகின்றார். தனது சுழல் வித்தையின் மூலம் பல முன்னணி வீரர்களைப் பல ஆட்டங்களில் தொடர்ந்து ஆட்டமிழக்கச் செய்துள்ளார். இந்திய அணியின் முன்னிலைத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் மற்றும் மேற்கிந்தியத் தீவின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் பிரைன் லாரா ஆகியோரும் அதில் அடங்குகின்றனர்.

1992ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்டில் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகிய முரளி, தற்போது பல உலக சாதனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளமையானது இலங்கை ரசிகர்கள் ஒவ்வொருவரையும் பெருமைகொள்ளச் செய்கின்றது. சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் நான்கு இலக்கங்களைக் கொண்ட [1011] விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்திருக்கும் முதல் வீரர் முரளிதரனே.

பல சாதனைகளைக் கடந்த முரளிதரன் பல சோதனைகளிற்கும் உள்ளாகியுள்ளார். தான் அறிமுகமாகிய ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்தவர்களாலேயே முரளி பெரிதும் சிக்கல்களை எதிர்கொண்டார். 1995ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய நடுவர் டெரல் ஹெயர் என்பவரால் முரளிதரன் பந்தை எறிகிறார் என ஆஸ்திரேலியாவில் வைத்து குற்றஞ்சாட்டப்பட்டது.

இவரது குற்றச்சாட்டைத் தொடர்ந்து முரளியின் பந்து வீச்சு முறை சர்வதேச கிரிக்கெட் சபையால் பரிசோதிக்கப்பட்டது. மேற்கு ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட பரிசோதனையின் பின்னர் முரளிதரனின் பந்து வீச்சுமுறை விதிகளிற்குட்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. 1998 - 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் முரளி மீது குற்றஞ் சுமத்தப்பட்டது. மற்றொரு ஆஸி. நடுவரான ரோய் எமர்சன் என்பவரால் குற்றஞ்சாட்டப்பட்டாலும், ஆஸ்திரேலியாவின் பேர்த் பல்கலைக்கழகம் முரளியை பரிசோதித்த பின்னர் அவரைச் சர்ச்சைகளிலிருந்து விடுவித்தது.

2004ஆம் ஆண்டு முரளியின் புதிய கண்டுபிடிப்பான தூஸ்ரா விதத்திலான பந்துவீச்சு பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. தூஸ்ரா விதத்தில் முரளிவீசும்போது முழங்கைச் சுழற்சி அதிகளவில் உள்ளதாக நடுவர் கிறிஸ்பிராட் குற்றஞ்சாட்டினார். மீண்டும் முரளிக்குப் பரிசோதனை, எனினும், மீண்டும் முரளிக்குச் சாதகமான முடிவு.

[18ஆம் பக்கம் பார்க்க]

மைகா தொடரில் ஷேன் வோர்ன்

விளையாட்டுத்துறை பிரபலங்கள் விளம்பரங்களில் நடிப்பதில் ஒன்றும் புதினமல்ல. பல வீரர்கள் வெவ்வேறு பொருள்களின் விளம்பரங்களிற்காக சின்னத்திரையில் மின்னிவருகின்றனர். ஆனால், சில வீரர்கள் மெகா தொடர்களிலும் நடித்துவருகின்றனர். அவர்களோடு தற்போது ஆஸ்திரேலியாவின் சுழல் மன்னன் ஷேன் வோர்ன் இணைந்து கொண்டுள்ளார். ஆஸ்திரேலியாவில் பல வருடங்களாக ஒடிக்கொண்டிருக்கும் 'நெய்பர்ஸ்' என்ற தொடரின் படப்பிடிப்பில் கடந்த வாரம் ஷேன் வோர்ன் கலந்துகொண்டுள்ளார். இத்தொடர் 18 வருடங்களிற்கு மேலாக ஒளிபரப்பட்டு வருகிறது.

இத்தொடரில் வோர்ன் வோர்னாகவே நடிக்கின்றார். தொடரின் கதை முழுவதும் தெரு ஒன்றில் நடப்பது போலவே படமாக்கப்பட்டுள்ளது. வோர்ன் தொண்டு நிறுவனம் ஒன்றிற்கு இத்தெருவில் நீதி திரட்டுவது போல காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

படப்பிடிப்புக் காட்சிக்காக ஓர் இளைஞனுக்கு பந்து வீசுகிறார் வோர்ன். சுமார் இரண்டு மணி நேரம் கமரா முன்பு தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். அவர் நடித்த காட்சிகள் வரும் ஜூலை 6ஆம், 7ஆம் திகதிகளில் ஆஸ்திரேலிய தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படவுள்ளன.

தென்னாபிரிக்காவுடனான 4ஆவது ஒரு நாள் ஆட்டம்

பரபரப்பாக அமைந்த ஆட்டத்தில் ஆஸி. ஒரு விக்கெட்டால் வெற்றி

தென்னாபிரிக்காவுடனான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா ஒரு விக்கெட்டினால் வென்றது. இதன் மூலம் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்த ஒருநாள் தொடரின் கடைசி ஆட்டம் வெற்றியாளரைத் தீர்மானிக்கவுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள ஆஸி.அணி முதல் இரு ஒருநாள் ஆட்டங்களிலும் அடிவாங்கியது. ஆனால், மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டது. நான்காவது ஆட்டம் நேற்றுமுன்தினம் டர்பனில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்டுகளை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் பொயிற்றா டிப்பென்னர் 145 பந்துகளில் 101 ஓட்டங்களையும் பொலக் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணிக்கு ஆரம்ப வீரர்களான அடம்கில்கிறிஸ்ட் மற்றும் சைமன் கட்டிச் ஆகியோர் இணைப்பாட்டமாக 87 ஓட்டங்களைப்பெற்றுக் கொடுத்து நல்ல அடித்தளம் ஒன்றை இட்டனர். எனினும், அதன் பின்பு 14 ஓட்டங்களைப் பெறுவதற்கிடையில் 4 விக்கெட்டுகளை இழந்து பரிதவித்தது ஆஸி.

எனினும், பின்னர் வந்த அன்ட்ரூ சைமன்ஸ் 76 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுக்க அணி வெற்றியை நெருங்கியது. கடைசி விக்கெட்டில் ஜோடி சேர்ந்த மில் லூவிஸ் மற்றும் ஸ்ரூவேட் கிளாக் ஆகியோரின் நிதானமாக ஆட்டத்தினால் 5 பந்துகள் மீதமிருக்க ஆஸ்திரேலியா ஒரு விக்கெட்டினால் வெற்றியைத் தனதாக்கியது.

முன்னதாக, முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 9 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. கிரேம் சிமித் மற்றும் ஹேசல் கிப்ஸ் ஆகியோர் பிரக்கனின் பந்தில் ஆட்டமிழந்தனர். மூன்றாவது விக்கெட்டிற்கு ஜோடி சேர்ந்த டிப் பென்னர் மற்றும் டீவில்லியர்ஸ் 73 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று அணியை சரிவிலிருந்து மீட்டனர். பிரட்லீயின் பந்தில் இரண்டு சிக்ஸர்களை விளாசிய வில்லியர்ஸ் லூவிஸின் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆகி வெளியேறினார்.

எல்போ காயத்திலிருந்து மீண்டுவந்து ஜகவின் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பொலக் மற்றும் டிப்பென்னர் ஜோடி கடைசி நேரத்தில் 54 பந்துகளில் 72 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 246 ஓட்டங்களைப்பெற்றது.

பொலக் 33 பந்துகளில் 53 ஓட்டங்களை விளாசினார். கடைசி இரண்டு ஓவர்களிலும் 7ஓட்டங்களுக்கும் 3 விக்கெட்டுகளை தென்னாபிரிக்க அணி இழந்தது. ஆஸியின் ஆரம்பவீரர்களான கில்கிறிஸ்ட் 45 ஓட்டங்களையும் கட்டிச் 46 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த ஆட்டத்தில் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் டிப்பென்னர் தெரிவுசெய்யப்பட்டார்.

மின்னாமல் முழங்காமல் மட்டக்களப்பு வந்த இந்தியத்தூதர் முஸ்லிம் பிரதிநிதிகளை மட்டும் சந்தித்துத் திரும்பியது ஏன்?

ஜெனீவாப் பேச்சுத் தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்ளாத மட்டு. - அம்பாறை மக்கள் மத்தியில் மீண்டும் சமாதானம் சந்தேகப் பொருளாகவே சந்தேகிக்கப்படுகிறது. மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் தொடரும் சிறுசிறு சம்வங்கள் இதனை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

வவுணதீவு முன்னரங்க காவலரண் மீதான தாக்குதல் ஜெனீவா வரை சென்றிருக்கிறது. இரு புலிப் போராளிகள் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டமை தெரிந்ததே. இதுபோன்ற தாக்குதல் தொடருமாயின் ஏப்ரல் பேச்சு சந்

அம்பாறை மடல்

தேகத்திற்கிடமானது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டு - திருமலை பஸ்ஸில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். இதுபோன்ற சிறுசிறு சம்பவங்கள் தொடருவது ஜெனீவாப் பேச்சைப் பயனற்ற தாக்கிவருகிறது. இருநாள் பேச்சு என்பது சர்வதேசத்திற்கே தவிர மக்களுக்கல்ல என்ற சாரப்பட சம்பவங்கள் தொடர்கின்றன.

அடுத்த கட்டப் பேச்சு ஏப்ரலில் நடைபெறுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளதென மக்கள் கருதுகிறார்கள். யுத்த நிறுத்தம் பற்றிப் பேசி முடிவாக வெளியிட்ட தீர்மானங்களில் ஒன்றையாவது இதுவரை நடைமுறைப்படுத்தப்படாதது குறித்து பலத்த சந்தேகங்கள் நிலவுகின்றன. அவற்றை அமுல்படுத்துவதில் அரசு பாரிய சிக்கல்களை எதிர் நோக்கவேண்டி நேரிடுமென கடந்தவாரம் இப்பந்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

எது எப்படியிருந்தபோதிலும் மக்கள் விரும்புவதெல்லாம் நிரந்தர சமாதானத்தையே என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

ஆழிப்பேரலை பாதித்த ஆசிரியருக்குக் கிடைத்த ஏமாற்றம்

மேலும் ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒரு வருட வட்டி இல்லாக்கடன் வழங்குவதாக அறிவித்த வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு இவ்வாரம் ஒரு மாத சம்பளத்தைக் கடனாக வழங்கத் தீர்மானித்துள்ளது. மாகாணசபை ஆசிரியர்களைப் பகடைக்காயாகக் கருதுகிறது என்பதற்கு இது உதாரணம். சுற்றறிக்கைப்படி எந்த வலயத்திலும் குழு அமைத்து பாதிக்கப்பட்டவர்களை இனங்காணாத மாகாணசபையின் செயற்பாடு குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே, இதனை ரத்துச்செய்து ஒரு வருட சம்பளத்தைக் கடனாக வழங்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

தமிழர் மகாசங்கம் எழுப்பும் கேள்வி இது

இந்தியத் தூதுவரின் மட்டு. விஜயம்

இந்த நிலையில், மட்டு. - அம்பாறை மாவட்டத்தில் திடீரென இந்தியத் தூதுவர் நிருபமாராவின் விஜயம் அமைந்திருந்ததன் பின்னணி பற்றி மக்கள் பலவாறாகப் பேசிக் கொள்கிறார்கள். ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து இரு மாதங்களில் ஒரு தடவை இதே இந்தியத் தூதுவர் அகதிகளைச் சந்தித்துச் சென்றவர். தற்போது மீண்டும் விஜயம் செய்து பல்கலைக்கழக சமூகத்தைச் சந்தித்து விட்டுச் சென்றிருக்கிறார்.

அம்பாறை மாவட்டத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஜயஞ்செய்த அவர், முஸ்லிம் பிரதிநிதிகளை மட்டும் சந்தித்து விட்டுச் சென்றுள்ளார். அங்குள்ள தமிழ் மக்களுக்கான குறைநிறைகளைக் கேட்டறிய அவர் முயற்சிக்கவில்லையென தமிழர் மகாசங்கம் கவலை தெரிவித்துள்ளது.

மின்னாமல் முழங்காமல் நடந்த இந்திய தூதுவரது விஜயம், கடந்தவாரம் மட்டு. - அம்பாறை மக்கள் மத்தியில் பலவித சந்தேகங்களைத் தோற்றுவித்தமையை மறுக்கமுடியாது.

இந்நிலையில், வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. முன்னர் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப் பாளர் புலித்தேவன் இந்தத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரியிருந்தார். தற்போது தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேரடியாக ஜனாதிபதியைச் சந்தித்து இத்தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரியுள்ளனர்.

தேர்தல் களேபரம் இல்லை

உள்ளூராட்சித் தேர்தலைப் பொறுத்தவரை அதற்கான ஏற்பாடுகள் மட்டு- அம்பாறை மாவட்டங்களில் ஆமை வேகத்தில் நகர்ந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக- தமிழர் பிரதேசங்களில் தேர்தல் மிகவும் அமைதியாக நகர்கிறது. பல பிரதேசங்களில் நீதிமன்ற இடைக்காலத் தடையுத்தரவுகள் எந்நேரமும் வரலாம் என்ற அடிப்படையில் பல வேட்பாளர்கள்கூட முயற்சியெடுக்காமல் வாழாவிருக்கிறார்கள். அப்படியெனின், மக்கள்?

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச சபைக்குத் தாக்கல் செய்த தமிழரசுக் கட்சி வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. இறுதி நேர அவசரம் காரணமாக சமாதானநீதிவான் ஒருவர் ஒப்பமிடாதபடியினால் இவ்விழப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்றேல் மூன்று தமிழர்கள் இச்சபைக்குத் தெரிவாக வாய்ப்பேற்பட்டிருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. மொத்தத்தில் தமிழர் தரப்பில் தேர்தல் தொடர்பாகப் பாரிய அக்கறை காண்பிப்பதாகத் தெரியவில்லை.

மகளிர் தினத்தன்று ஆசிரியை கடத்தல்

நிற்க, மகளிர் தினக் கொண்டாட்டங்கள் பரவலாக அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின் 'பொக்கற்றுகள்' நிரம்ப வழி சமைத்தன என்று கூறலாம். ஒப்புக்குப் பல நிகழ்ச்சிகள் நடந்தேறின. மகளிர் தினத்தன்று சம்மாந்துறையில் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த ஆசிரியை ஒருவர் பட்டப்பகலில் காமுகன் ஒருவரால் கடத்தப்பட்டிருக்கிறார். பொலீஸார் இதுவிடயத்தில் உடனடியாக இயங்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

இந்த ஆசிரியை மகளிர் தினத்தில் கடத்தப்பட்டமை தொடர்பாக எந்தவொரு மகளிர் தின வைபவத்தில்கூட மூச்சுக்காட்டவில்லை. மகளிர் உரிமை, பாதுகாப்புப் பற்றி உரக்கக் கத்தும் அவர்கள் இந்த ஆசிரியை விவகாரத்தில் கண்டும்காணாமலிருந்தமை எந்தளவிற்கு உணர்வு பூர்வமாகச் செயற்படுகிறார்கள் என்பதைத் தெளிவாக்குகிறது.

பிரஸ்தாப தினங்கள் ஒப்புக்கு அனுஷ்டிப்பதை இனிமேலாவது கைவிடவேண்டுமென அச்சமூகம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

ராஜபுத்திரன்

இதனிடையே மட்டு. - அம்பாறை மக்கள் மத்தியில் குறிப்பாக குழந்தைகளிடையில் ஒருவித வைரஸ் காய்ச்சல் மிக வேகமாகப் பரவிப் பாதித்துவருகிறது. சுகாதார அமைச்சு தூங்கிக்கொண்டிருப்பதாகப் பேசப்படுகிறது. ஆழிப்பேரலையால் முற்றாகப் பாதிக்கப்பட்ட காரைதீவு வைத்திய சாலையை மீள் நிர்மாணம் செய்ய இதுவரை அடிக்கல்கூட நடப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் வாய்மூடிமௌனியாக உள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் இ.தியாகலிங்கம் மாணவருக்கு உணவு வழங்கும் திட்டத்தை மட்டு.- செங்கலடியில் ஆரம்பித்து வைக்க, மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விசாகலிங்கம் தலைமையிலான குழுவினர் கல்முனை - சம்மாந்துறைப் பகுதிகளில் கடந்த வாரம் முகாமிட்டிருந்தனர். எனினும், கல்விச் செயற்பாடுகள் திருப்திதருவாக இல்லையென்று மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

. புத்தாண்டை எதிர்நோக்குவதற்காக வேளாண்மை அறுவடையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். அரசு நெல் கொள்வனவை ஆரம்பித்திருப்பது ஓரளவு ஆறுதல் அளிக்கின்றது. ✸

விற்பனைக்கு

கொழும்பில் உபயோகித்த தொழில்பட்டறை உபகரணங்களும் (ஒரு தொகை - one lot) சின்ன எஞ்சின்களும் விற்பனைக்குண்டு. கீழ்க் கண்ட விலாசத்தில் பார்வையிட்டு கேள்விகளை ஒரு கிழமைக்குள் அறிவிக்கவும். உயர்ந்த கேள்விக்குக் கொடுக்கப்படும். மேலதிக விவரத்திற்கு தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 226 3609.

விலாசம்: "யோக வாசா",
கலைமன்றம் வீதி, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
(ஞானசம்பந்தர் கலைமன்றம் அருகில்).

(சி/48288)(32-45)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சக ஆசிரியை
திருமதி தயாழினி சிவபாதலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை
சிதம்பரி தங்கவேல்
(ஓய்வுபெற்ற அதிபர், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)
அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு, துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/அச்சுவேலி மத்திய கல்லூரி,
அச்சுவேலி. (சி/48286)(32-45) ஆசிரியர் கழகம்.

மகாலக்சுமி றியல் எஸ்டேட்

காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை. கொடிகாமம் வீதி, நெல்லியடி.

- கட்டடங்கள் புதிதாக நிர்மாணித்தல்
- கட்டடங்கள் திருத்தம் செய்தல்
- காணிகள், வீடுகள் வாங்கல் - விற்றல்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை பகுதிகளில் காணிகள், வீடுகள் விற்பனைக்குண்டு.

விற்க விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்.

T.P.. 077 3053082
077 3583880

(47976)(32-45)

பிள்ளையார் இன் 'A' தரம் உல்லாசப் பயணிகள் தங்குமிடம்
('A' Grade HOTEL APPROVED BY THE CEYLON TOURIST BOARD)

றூவ் காடின் றெஸ்றோரன்ட், கொரிசொப் றெஸ்றோறன்ட், கொக் ரெயில்ஸ் (COCK TAILS), றெஸ் றோறன்ட் யாவும் மீண்டும் இயங்க ஆரம்பித்துவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இவை யாவும் காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை திறந்திருக்கும்.

உங்களின் திருமண வைபவங்கள், விருந்துகள், பிறந்தநாள் நிகழ்வுகள், கலந்துரையாடல்கள், காரியாலயப் பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்கு உகந்த இடம்.

16 குளிரூட்டப்பட்ட இணைந்த குளியலறைகள், விசாலமான வாகனத்தரிப்பிடம், சிறப்பான உபசரிப்புகள் சேவைகள் யாவுக்கும் நாடவேண்டிய இடம்.

இன்றைய ஸ்பெசல் (Today's Special)
BLOODY MARY } COCK TAILS
LANKA COLA }

PILLAIYAR INN
MANIPAY Rd,
Jaffna.
(47974)(32-39-45)

Tel.: 021 222 2829
021 222 5595
Fax.: 021 222 5595
E-Mail: Piyarinn@sltnet.lk

வெளிநாட்டில் உயர்கல்வி

Your VISA to the World

Basic Qualification G.C.E. (O/L)

STUDY IN LONDON
CANADA, MALAYSIA, SINGAPORE
CYPRUS & INDIA

Available Courses

Management
Business Ad. (BBA, MBA, Phds)
Marketing
HRM
Law
Computer Science
IT Networking
Pattern Designing & Textile
Nursing etc.
Hotel Management
Travel & Tourism
Engineering (Aerospace, Electrical & Electronical etc...)
Medicine
Dental
Fine Arts
Beauty Culture
Shipping Courses

All Courses are available in any field

- பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
- 15% விலைக்கழிவுடன் விமானச்சீட்டு, பகுதிநேர வேலைவாய்ப்பு, இலகுவாக செலுத்தக்கூடிய தங்குமிட வசதிக்கட்டணம்
- 1000 £ Scholarship for UK University

Midas College இன் டிப்ளோமாவின் பின் London இல் பட்டப்படிப்பு

COLLEGEVIEW International
(Professional Overseas Educational Consultants & Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0 115 672131, 0114 512175 Fax : 0114 512175
Hotline : 0714 245166, 0773 113156
Email : collegeview@visualnet.lk

ஜெனீவா...

[07 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணத்தில் கருவாகி, புதிய காணிச் சட்டம் ஒன்று உருவாகியுள்ளது.

நடைமுறை அரசுக்கான கட்டமைப்பில் மற்றொரு மைல்கல் இந்தச் சட்டம் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழர் தாயகத்தில் உள்ள காணிகளின் சரியான நிலைப்பாட்டை, பயன்பாட்டை உறுதி செய்வதற்கு இச்சட்டம் வழிகோலும் என்று கருதப்படுகிறது. ★

சரவணையில் இன்று மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தீவக அரிமாக்கழகம் இன்று ஞாயிற்றுக் கிழமை சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

வலயத் தலைவர் லயன் ரி. அன்பானந்தன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நிகழ்வில் நீரிழிவுக் கருத்தரங்கு, பரிசோதனை, இலவச மருந்துவழங்கல், மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்கள் வழங்கல், நுளம்பு வலை வழங்கல், ஊனமுற்றோருக்கு முச்சக்கரவண்டி வழங்கல், புதிய அங்கத்தவர்கள் இணைதல் ஆகியவை இடம் பெறும்.

(எ-202)

தையல், மனையியல் கண்காட்சி

வலி.கிழக்கு, மார்ச் 12

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சி நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ.ரி. ஞானசேகரவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக மாவட்ட செயலக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திர பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி அ. சாந்தசீலன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா. தியாக மூர்த்தி ஆகியோரும் கலந்துகொள்வர்.

(எ-180)

வீடு தேவை

இலவச கணனிப் பயிற்சி மற்றும் ஆங்கில வகுப்புகளை நடத்தி வரும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் பயிற்சி நிலைய, நிர்வாகப் பணிகளுக்காக வீடு/கட்டடம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு யாழ்.நகரப் பகுதிக்குள் தேவைப்படுகிறது. உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 021 4591982

(47985)

சக்சஸ் மல்ரி ஹவுஸ்
S.M.H

புத்தூர்ச் சந்தி மீசாலை

8ஆவது
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

பெயர்: வீ.கந்தசாமி
இலக்கம்: 342
விலாசம்: சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

புத்தூர்ச் சந்தி, மீசாலை. உரிமையாளர். S.M.H.

(சி/48285)

விற்பனைப் பிரதிநிதி தேவை

உலகப் பிரசித்தி பெற்ற இலத்திரனியல் பொருள்களை யாழ்.நகரில் விற்பனை செய்தவற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.

R.Senthuran,
Old Post Office Rd,
Kokuvil.

T.P.: 021 4590813
077 3053082

(47975)(32-45)

VACANCIES
UNIVERSITY OF JAFFNA, SRILANKA

Further to the advertisement dated 22-02-2006, inviting applications for the posts under the caption of Vavuniya Campus, Faculty of Biological Science and Faculty of Applied Science is hereby deleted and replaced as follows:

FACULTY OF APPLIED SCIENCE

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Biological Science

Preference will be given for those who have the degree in Environmental Science or related fields.

Senior Professor / Professor in Information and Communication Technology

Senior Lecturer Grade I, Senior Lecturer Grade II, Lecturer (Probationary) in Information and Communication Technology

Demonstrator / Tutor (on contract) in Information and Communication Technology

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
10.03.2006

(C/45289)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 03 . 1927

மறைவு 15 . 02 . 2003

அமரர்
கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
("நந்தினி ஸ்ரோர்ஸ்", முன்னாள் உரிமையாளர், கொடிகாமம்)

திதி: திரயோதசி 12.03.2006

அன்பால் எம்மை அரவணைத்து
அறிவால் எம்மை உயர்த்தி
பண்பால் பலர் போற்ற பாரினிலே
வாழ்ந்திட்ட எம் தெய்வமே!
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
ஆறாதய்யா உங்கள் பிரிவு
என்றும் எங்கள் நெஞ்சினிலே
நின்றும் நினைத்திடும் ஐயா!

நித்தம் உங்கள் பிரிவால் தளிக்கும்:
சு.அமிர்தலிங்கம் (மகன்).
"ரேகிதன் வியாபார நிலையம்",
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.
(சி/48284)(32-45)

மரண அறிவித்தல்

மாணிக்கம் சின்னத்தம்பி

(முன்னாள் உபஅதிபர், யா/கொக்குவில் நாமகள் வித்தியாசாலை)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மத்தி, நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் சின்னத்தம்பி அவர்கள் 09.03.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் (முன்னாள் ஆசிரியை, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், சசிதேவி (ஜேர்மனி), சித்திராதேவி (கனடா), ஜீவாதேவி (லண்டன்), ஸ்ரீதரன் (லண்டன்), சசிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசையா (இந்தியா), காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/இணுவில் இந்துக் கல்லூரி), தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சுதுமலை வடக்கு அ.த.க. பாடசாலை), பாலசுப்பிரமணியம், கமலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/இணுவில் மத்திய கல்லூரி), இரகுபதி (படவரைஞர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சடாசிவம் (கனடா), வைத்திலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), குணராசா (முன்னாள் தபால் திணைக்கள உத்தியோகத்தர்(M.O)), இரத்தினம்மா, காலஞ்சென்ற செங்கமலம் மற்றும் ஞானாபரணம், காலஞ்சென்ற சோதிப்பிள்ளை மற்றும் மகாலஷ்மி, அம்பிகாதேவி (மின்சார சபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் குமார குலசிங்கம் (ஜேர்மனி), வாமதேவன் (கனடா), மனோகரன் (லண்டன்), மஞ்சுளா (லண்டன்), கஜனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சதீஸ், தயாளன், தினேசன், சுதர்சன், டீனோயா, நிலோசன், ஆர்த்திகா, டிலக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை கோண்டாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 12 மணியளவில் இணுவில், காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(47991)(32-45)

கோண்டாவில் மத்தி,
நெட்டிலிப்பாய் பிள்ளையார்
கோயிலடி,
கோண்டாவில்.

தகவல்:
திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி (மனைவி - முன்னாள் ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிங்களவர் - தமிழர் பிரச்சினை இப்போது பனிப்போர் நிலைக்கு...!

இலங்கை ஓர் ''இறைமையுள்ள'' அரசென்றும் ''தன்னாதிக்கமுள்ள'' தேசமென்றும் பாலர்பாடம் பயின்றிராச் சிறுவர்களாலும் விசமத்தனமான அரசியல் வாதிகளாலும்தான் சொல்லமுடியும். இலங்கையின் சுதந்திரத்தை "சதந்திரக்"கட்சி இனவாத இரத்தச் சகதிக்குள் புதைத்து விட்டது. மக்கள் ''விடுதலை'' முன்னணி (ஜே.வி.பி.) மக்கள் இனவாதச் சங்கிலியால் கட்டி இரத்தச் சகதிக்குள் வீசுகின்றது.

2500 ஆம் ஆண்டுக்கு மேலான தொடர் நாகரிக வளர்ச்சி கொண்ட இலங்கையின் நாகரிகமானது இப்போது வேடர்களின் காலடியை தழுவும் நிலைக்குப் போய்விட்டது. உண்மையான அர்த்தத்தில் சிங்களக் கட்சிகளின் பிரச்சினை தான் இனப்பிரச்சினையாக வடிவம் பெற்று நிற்கின்றது.

இன்னும் தெளிவாக வரையறுப்பதென்றால் புலிப்பிரச்சினைதான் இனப் பிரச்சினை என்றும் புலிப்பிரச்சினை இல்லையேல் நாட்டில் பிரச்சினையே இல்லை என்றும் கூறும்அளவுக்கு இப்போது சிங்கள அரசியற் பிரச்சினை மாறியுள்ளது.

ஆனால், நாம் இதனை வேறு விதமாகவே அடையாளம் காணவேண்டும். நோயை அடையாளம் காணாமல் நோய்க்கு மருந்து செய்யமுடியாது. உண்மையில் சிங்கள அரசியற் கட்சிகளை பீடித்துள்ள குடும்ப ஆதிக்க, வர்த்தக ஆதிக்க அரசியற் பிணிதான் தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினையாக விஸ்வரூபமெடுத்து நிற்கிறது.

நோய் சிங்கள அரசியல் பீடையாக இருக்கும் போது முதலில் சிங்கள அரசியற் பணிக்கே வைத்தியம் செய்யவேண்டும். அத்தகைய பீடையிலும் பிணியிலிருந்துதான் இனப்பிரச்சினை ஊற்றெடுக்கிறது. முதலில் இத்தகைய பிணியைச் சரிவர அடையாளம் காணவேண்டும். இத்தகைய சிங்கள அரசியற் பிணியை அடையாளம் காண்பதற்கான முயற்சியாகவே 'கொழும்பு 2007' என்ற தலைப்பிலான ஒரு சிறு நூலை எழுதியுள்ளேன்.

சிங்கள அரசியலின் முற்றிய நோய் கூறு ஒன்றே ஜே.வி.பி.

அத்தகைய சிங்கள அரசியலின் முற்றிய ஒரு நோய்க்கூறாக ஜே.வி.பி. உள்ளது. சிங்கள உயர்குழாதிற் காணப்படும் பதவிக்கான குடும்பாதிக்க போட்டியும் போரும், புறக்கணிக்கப்பட்ட தென்னிலங்கை அரசியற் சக்திகளின் பிரதிபலிப்பான ஜே.வி.பியினர் பதவிக்கான அவ்வுயர் குழாத்துடன் புரியும் போட்டியும்போரும் இப்போதுபுலிப்பிரச்சினையாய் சித்திரிக்கப்படுகின்றது.

சிங்கள உயர்குழாத்தை வீழ்த்தி தாம் பதவிக்கு வந்து விடலாம் என ஜே.வி.பி. ஒரு சீரழிந்த கொள்கையை வகுத்துள்ளது.

ஜே.வி.பி. தனது ஆரம்ப காலத்தில் பதவிக்கு வருவதற்கான உபாயமாக இந்திய எதிர்ப்பு வாதத்தையும் தமிழின எதிர்ப்பு வாதத்தையும் ஒன்று கலந்து கையில் எடுத்தது. ஆனால், சிங்கள ஆட்சியாளர் இந்திய அரசின் நேரடி இராணுவ உதவியைப் பெற்று ஜே.வி.பியினரை நசுக்கினர். இது முதலாவது கட்டம்.

அடுத்து இரண்டாம் கட்டம், இனப் பிரச்சினையின் பெயரால் இலங்கையில் இந்திய இராணுவம் நிலைகொண்ட 1980களின் பிற்பகுதியாகும். அப்போது புலிகளும் இந்திய இராணுவத்துடன் போரில் ஈடுபட்டிருந்த பின்னணியில் தீவிர இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை சித்தாந்தமாகக் கொண்டு ஜே.வி.பி. வளரத் தொடங்கியது. ஆனால் புலிகளுடனான பிரேமதாஸ அரசாங்கத்தின் ஒப்பந்தத்தின் நிமித்தம் இந்திய இராணுவம் நாட்டைவிட்டகலவே, ஜே.வி.பியினருக்கு கோஷம் இல்லாது போனது. இவ்வாறு ஜே.வி.பியினருக்கு கோஷம் இல்லாது போன அந்த வெற்றிடத்தில், சிங்கள இராணுவமே ஜே.வி.பியினரின் தலைகளைச் சீவி எறிவது சாத்தியமானது. இத்துடன் அவர்களது இரண்டாவது கட்டம் முற்றுப்பெற்றது.

இந்திய எதிர்ப்புச் சித்தாந்தத்தை விட்டு புலி எதிர்ப்புச் சித்தாந்தத்தை கையில் எடுப்பு

இந்திய எதிர்ப்புச் சித்தாந்தம் ஒரு போதும் தமக்குக் கைகொடுக்காது என்ற நிலையில் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணிக்கொண்டு புலி எதிர்ப்புச் சித்தாந்தத்தை கையில் எடுப்பதென்ற முடிவுக்கு வந்தார்கள். இதன் பின்னணியில்தான் இப்போதிருக்கும் ஜே.வி.பி தலைவரான சோமவன்ச அமரசிங்க, இந்திய தூதரக உதவிபெற்று 1990 ஆம் ஆண்டு நாட்டைவிட்டுத் தப்பி ஓடினார். அன்று முதல் அவர்களின் தீவிர சித்தாந்தமானது புலி எதிர்ப்புச் சித்தாந்தமாகவே வடிவம் பெற்றது. அதாவது, புலி எதிர்ப்பு எனும் கோஷம்தான் அவர்களது பிராணவாயு.

இந்தப் புலி எதிர்ப்புச் சித்தாந்தத்தை நான்காவது கட்டத்திற்கு வளர்த்தெடுத்து அரசியல் நடத்த முற்பட்டனர். அதனை ஒரு பெரும் அரசியற் சித்தாந்தக் கண்டுபிடிப்பாக சித்திரித்து, பதவி வேட்டையில் குதித்தனர். அந்தக் கண்டுபிடிப்புத்தான் ''புலி - ரணில்'' கூட்டு என்பது. 'புலி - ரணில்' கூட்டு என்ற கோஷத்தில் நின்று கடந்த கால நாடாளுமன்ற ஜனாதிபதித் தேர்தல்களை அவர்கள் எதிர்கொண்டனர். ஆனால், ஜனாதிபதித்தேர்தலை புலிகள் பகிஷ்கரித்ததன் மூலம் ரணிலுக்கு புலிகள் ஆதரவளிக்காததன் மூலம் 'புலி - ரணில்' கோஷம் அர்த்தமற்றதாகியது.

இப்போது ஐந்தாவது கட்டமானது முற்றிலும் புலி எதிர்ப்பு இராணுவ தேசபக்தவாதமாக பரிணாமம் பெற்றுள்ளது. அதாவது ஜே.வி.பியின் சித்தாந்தம் இப்போது மூன்று அம்சங்களைக் கொண்டது. புலி எதிர்ப்பு வாதம், இராணுவவாதம், தேசபக்த வாதம் ஆகிய மூன்றையும் அது ஒன்றுடன் ஒன்றாய் பின்னிப் பிணைத்து வைத்திருக்கின்றது.

புலி எதிர்ப்பு வாதத்தில் நின்று கொண்டு தேசபக்த வாதம் புரிவதன் மூலம் சிங்கள உயர்குழாத்து இராணுவத்தை தனது இராணுவமாக்க ஜே.வி.பி. கனவு காண்கின்றது. சிங்கள இராணுவத்தை தனது இராணுவமாக்க ஜே.வி.பி. தமிழினப் படுகொலை வாதத்தை முன்வைக்கின்றது. இதன்படி பார்க்கையில் ஜே.வி.பி. பதவிக்கு வருவதற்காக வகுத்துள்ள உத்தி என்பது, தமிழினப் படுகொலை வாதமாகும். ஆதலால் ஜே.வி.பி. என்பது பச்சையாகவே இனப்படுகொலை வாதத்தை முன்வைத்துள்ள ஒரு லும்பன் கட்சியாகும். இது உள்ளடக்கத்தில் ஹிட்லரின் யூத இனப்படுகொலை வாதத்தைவிடச் சற்றும் குறைந்ததாக இருக்கமுடியாது. இதனை இன்னும் தெளிவாகச் சொன்னால் ஜே.வி.பி. என்பது சிங்கள குடும்ப ஆதிக்க, அரசியற் பொருளாதார நோய்க் கூற்றின் மொத்த வடிவமாயுள்ளது. அதன்படி பார்க்கையில் சிங்கள அரசியற் பொருளாதாரப் பிணியானது, தமிழினத்தைப் பலியெடுப்பதன் மூலம் தன்னை சமன் செய்ய முயற்சிக்கின்றது.

ஜே.வி.பியின் இனப்படுகொலை வாதம் இலங்கையில் வெற்றிபெற முடியாது

21 ஆம் நூற்றாண்டின் உலகளாவிய அரசியல் பொருளாதார நிலவரத்தின் கீழ், தமிழீழப் போராட்டமும் ஆயுத பலத்தைப் பெற்றிருக்கும் பின்னணியில், யூத இன எதிர்ப்பு ஹிட்லரின் இனப்படுகொலை வாதம் இலங்கையில் ஒரு போதும் வெற்றி பெற முடியாது என்பதை நவீன ஹிட்லராகிய சோமவன்சாக்கள் புரிந்துகொள்ள இன்னும் வரலாற்று அனுபவம் அவர்களுக்குத் தேவைப்படுகின்றது.

இத்தகைய சோமவன்சாக்களின் அரவணைப்பில் இருப்பவரே புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. புதிய ஜனாதிபதியிடம் நாட்டின் நலன்கருதிய தெளிவான அரசியற் பொருளாதாரக் கொள்கை என்று எதுவுமில்லை. ''எத்தகைய பிசாசுகளுடனும்'' கூட்டுச் சேர்வேன் என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா முன்பு ஒருமுறை கூறியிருந்தது போலவே, ராஜபக்ஷவும் தன் பதவியைத் தக்க வைக்க எத்தகைய பிசாசுகளுடனும் கூட்டுச் சேரும் இயல்புள்ளவராவார். அந்த வகையிலேயே ராஜபக்ஷ ஜே.வி.பி.கூட்டு உள்ளது.

ஜனாதிபதியிடம் இனப்பிரச்சினைக்கான எத்தகைய தெளிவான கொள்கையும் வழிகாட்டலுமில்லை. அவர் பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டுகிறார். அவரிடம் தெளிவான பொருளாதாரக் கொள்கையும் இல்லை. இவற்றைப் பற்றி அதிகம் விஞ்ஞான பூர்வமாக நாம் புரிந்து கொள்ளவேண்டியுள்ளது. அவரிடம் தெளிவான வெளியுறவுக்கொள்கையும் இல்லை. அதேவேளை, ஜே.வி.பியின் பின்னணியில் நிற்பதால் அவரால் அரசியற் பொருளாதாரத்துக்கான தெளிவான வெளியுறவுக் கொள்கையை வகுக்க முடியாது. கொழும்பு மீளமுடியாத சிக்கலுக்குள் அகப்பட்டுள்ளது. ஜே.வி.பியினரோ மக்களைத் தமது பக்கம் திருப்பும் எத்தனத்திலேயே உள்ளனர். ஆனால் அதேவேளை வரலாற்று வளர்ச்சிநிலையானது அவர்கள் விரும்பியவாறு எழுந்தமானத்தில் தமது சிக்கல்களைத் தமிழர் பக்கம் திருப்புவது சாத்தியமில்லை.

பனிப்போராக மாறிவிட்டது சிங்களவர் - தமிழர் பிரச்சினை

சிங்களவர் - தமிழர் பிரச்சினை என்பது இப்போது பனிப்போருக்கு போய்விட்டது. பனிப்போர் என்பது நேரடியாக யுத்தம் புரியமுடியாத நிலையில் அமெரிக்க - சோவியத் அணிகளுக்கு இடையே நிகழ்ந்த அரசியல், இராணுவ பொருளாதார இராஜதந்திர யுத்தமாகும். அது ஒரு மொத்த வடிவிலான ஒரு புதிய யுத்தமாகும். 2002 புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது நேரடிப்போரை நிறுத்தி பனிப்போரை தொடங்கிய ஒரு சாதனமாகும். தீர்வு காணப்படாத, ஆனால் யுத்தபரிமாணமுள்ள பிரச்சினைக்கான எந்த ஒரு ஒப்பந்தமும் பனிப்போருக்கான ஒப்பந்தமாகவே இருக்கும். இதனை பின்னர் ஒரு முறை விரிவாக ஆராய்வோம்.

அலைமோதும் தமிழ்பேசும் மக்களின் அனைத்து அரசியல் பொருளாதார வாழ்வியற் பிரச்சினைகளும் இப்போது பனிப்போராக பரிணமித்துள்ளன. இத்தகைய பனிப்போரில் சிங்கள சக்திகளின் அரசியற் பிணியும் தமிழ்பேசும் மக்களின் அன்றாட அரசியற் பொருளாதார வாழ்வியற் பிரச்சினைகளும் மையங் கொண்டுள்ளன.

ஜீவாதார நிலைக்காக ஏங்கும் தமிழ் மக்களின் வாழ்வு

தமிழ் பேசும் மக்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்ட ஓர் அலைக்கழிந்த வாழ்விற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். நாளையைப் பற்றிய எத்தகைய நிச்சயமும்

நாளையைப் பற்றிய எத்தகைய திட்டமிடலுமின்றி கடலிற் சாதாரணர்கள் போல் அலைகளினால் அங்கிங்காய் அலைக்கழிக்கப்படும் துயரமான வாழ்நிலை அவர்களுடையது. புலம் பெயர்ந்து வாழும் ஐரோப்பிய தமிழரின் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்ட குடும்பங்கள் தம்வயிற்றை ஆற்றமுடியுமேயானும் ஏனைய குடும்பங்களின் வாழ்

மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

நிலைமிகவும் சோகமானது.

அடுத்த நிமிடம் பற்றிய நிச்சயமின்மை, என்ன ஏது செய்வதென்ற திட்டமின்மை, வாழ்விட வசதியின்மை, இராணுவ கெடுபிடி, கல்வி, பொருளாதார வாய்ப்பின்மை, படிக்க மனமின்மை, வாழ்வை ஒருகணம் அனுபவிக்க முடியாமை. மொத்தத்தில் விரக்தி, வெறுப்பு வேதனை கலந்த வாழ்வில் மிகச் சாதாரண ஜீவாதார நிலைக்காக மட்டுமே ஏங்கித்தவிக்கும் துயரமான நிலையில் தமிழ் மக்களை வேட்டையாடி தமது அரசியல் ஆதிக்கப் பசியை தீர்ப்பதற்கு ஜே.வி.பி. உட்பட அனைத்து சிங்களக் கட்சிகளும் முயல்கின்றன.

ஜே.வி.பியினருக்குத் தமது இராணுவ வாதத்தில் முன்னேறுவதற்கு யுத்தம், இனப்படுகொலைகள் என்பன தேவைப்படுகின்றன. இறுதியாக இடம் பெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஜே.வி.பி. வெளியிட்ட இராணுவவாதம் இதனையே நிரூபிக்கின்றது. ராஜபக்ஷவிற்கு தனது அரசை தக்கவைப்பதற்கு யுத்தமின்மை தேவைப்படுகின்றது. ஆதலால் ஜே.வி.பிக்கும் ராஜபக்ஷவிற்கும் இடையில் இழுபறி நிலவமுடியும். அவை புலிகளுடனான பனிப்போரிலேயே தமக்குள்ளான இழுபறிகளைத் தக்கவைக்கின்றன.

★

ஜனாதிபதியும் ஜே.வி.பியினரும் அதிலேயே தமது இழுபறிகளைத் தக்கவைத்துக் கொள்கின்றனர்

இவரிடம் - தெளிவான பொருளாதாரக் கொள்கையும் இல்லை; இவரால் - வெளியுறவுக் கொள்ளையை வகுக்கவும் இயலவில்லை

இதில் ஜே.வி.பியினரை முதலில் ஆராய்வோம். ஜே.வி.பி.என்பது சிங்கள உயர்குழாத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ள தென்னிலங்கை அரசியற் சக்திகளின் பிரதிபலிப்பாய் எழுந்துள்ள ஒரு லும்பன் அமைப்பாகும். இது இனவாதச் சித்தாந்தமாக கொண்டு, அதனை ஒரு பிரதான ஆயுதமாகக் கொண்டு பதவி வேட்டையில் ஈடுபட்டிருக்கும் ஓர் அமைப்பாகும்.

தமது பதவிப் போட்டிக்கான ஓர் ஆயுதமாகத் தமிழின எதிர்ப்பு சிங்கள இனவாதத்தை மேற்படி சிங்கள உயர்குழாத்தினர் சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்தெடுத்துள்ளதால் அத்தகைய இனவாத ஆயுதத்தை தாமும் பாவித்து பதவிக்கு வந்துவிடவேண்டும் என்பதே ஜே.வி.பியின் சித்தாந்த நிலைப்பாடாகும். சிங்கள உயர்குழாம் ஏந்திய அதே இனவாத ஆயுதத்தை தாமும் கையில் ஏந்துவதன்மூலம் அரசியற் பொருளாதாரத்துக்கான தெளிவான வெளியுறவுக் கொள்கையை வகுக்க முடியாது. கொழும்பு மீளமுடியாத சிக்கலுக்குள் அகப்பட்டுள்ளது. ஜே.வி.பியினரோ மக்களைத் தமது பக்கம் திருப்பும் எத்தனத்திலேயே உள்ளனர். ஆனால் அதேவேளை வரலாற்று வளர்ச்சிநிலையானது அவர்கள் விரும்பியவாறு எழுந்தமானத்தில் தமது சிக்கல்களைத் தமிழர் பக்கம் திருப்புவது சாத்தியமில்லை.

பனிப்போராக மாறிவிட்டது சிங்களவர் - தமிழர் பிரச்சினை

சிங்களவர் - தமிழர் பிரச்சினை என்பது இப்போது பனிப்போருக்கு போய்விட்டது. பனிப்போர் என்பது நேரடியாக யுத்தம் புரியமுடியாத நிலையில் அமெரிக்க - சோவியத் அணிகளுக்கு இடையே நிகழ்ந்த அரசியல், இராணுவ பொருளாதார இராஜதந்திர யுத்தமாகும். அது ஒரு மொத்த வடிவிலான ஒரு புதிய யுத்தமாகும். 2002 புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது நேரடிப்போரை நிறுத்தி பனிப்போரை தொடங்கிய ஒரு சாதனமாகும். தீர்வு காணப்படாத, ஆனால் யுத்தபரிமாணமுள்ள பிரச்சினைக்கான எந்த ஒரு ஒப்பந்தமும் பனிப்போருக்கான ஒப்பந்தமாகவே இருக்கும். இதனை பின்னர் ஒரு முறை விரிவாக ஆராய்வோம்.

அலைமோதும் தமிழ்பேசும் மக்களின் அனைத்து அரசியல் பொருளாதார வாழ்வியற் பிரச்சினைகளும் இப்போது பனிப்போராக பரிணமித்துள்ளன. இத்தகைய பனிப்போரில் சிங்கள சக்திகளின் அரசியற் பிணியும் தமிழ்பேசும் மக்களின் அன்றாட அரசியற் பொருளாதார வாழ்வியற் பிரச்சினைகளும் மையங் கொண்டுள்ளன.

ஜீவாதார நிலைக்காக ஏங்கும் தமிழ் மக்களின் வாழ்வு

தமிழ் பேசும் மக்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்ட ஓர் அலைக்கழிந்த வாழ்விற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். நாளையைப் பற்றிய எத்தகைய நிச்சயமும்

நாளையைப் பற்றிய எத்தகைய திட்டமிடலுமின்றி கடலிற் சாதாரணர்கள் போல் அலைகளினால் அங்கிங்காய் அலைக்கழிக்கப்படும் துயரமான வாழ்நிலை அவர்களுடையது. புலம் பெயர்ந்து வாழும் ஐரோப்பிய தமிழரின் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்ட குடும்பங்கள் தம்வயிற்றை ஆற்றமுடியுமேயானும் ஏனைய குடும்பங்களின் வாழ்

மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

நிலைமிகவும் சோகமானது.

அடுத்த நிமிடம் பற்றிய நிச்சயமின்மை, என்ன ஏது செய்வதென்ற திட்டமின்மை, வாழ்விட வசதியின்மை, இராணுவ கெடுபிடி, கல்வி, பொருளாதார வாய்ப்பின்மை, படிக்க மனமின்மை, வாழ்வை ஒருகணம் அனுபவிக்க முடியாமை. மொத்தத்தில் விரக்தி, வெறுப்பு வேதனை கலந்த வாழ்வில் மிகச் சாதாரண ஜீவாதார நிலைக்காக மட்டுமே ஏங்கித்தவிக்கும் துயரமான நிலையில் தமிழ் மக்களை வேட்டையாடி தமது அரசியல் ஆதிக்கப் பசியை தீர்ப்பதற்கு ஜே.வி.பி. உட்பட அனைத்து சிங்களக் கட்சிகளும் முயல்கின்றன.

ஜே.வி.பியினருக்குத் தமது இராணுவ வாதத்தில் முன்னேறுவதற்கு யுத்தம், இனப்படுகொலைகள் என்பன தேவைப்படுகின்றன. இறுதியாக இடம் பெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஜே.வி.பி. வெளியிட்ட இராணுவவாதம் இதனையே நிரூபிக்கின்றது. ராஜபக்ஷவிற்கு தனது அரசை தக்கவைப்பதற்கு யுத்தமின்மை தேவைப்படுகின்றது. ஆதலால் ஜே.வி.பிக்கும் ராஜபக்ஷவிற்கும் இடையில் இழுபறி நிலவமுடியும். அவை புலிகளுடனான பனிப்போரிலேயே தமக்குள்ளான இழுபறிகளைத் தக்கவைக்கின்றன.

★

வலி.மேற்கில் நேற்று [illegible]டைபெற்ற வீடுகள் கையளிப்பு நிகழ்வில் எ[illegible]க்கப்பட்ட படங்கள் இவை. பாண்ட் வாத்தியம் சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா, யாழ்.அரச அதிபர் க.கணேஸ், வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் செ.பத்மநாதன் ஆகியோர் வீடுகளை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் திறந்து வைக்கப்பட்ட வீடு ஒன்றையும் முறையே படங்களில் காணலாம். வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் சீ.ஏ. மோகன்றாஸ், உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் ஆலோசகர் கலாநிதி க.குணராசா ஆகியோரும் படங்களில் உள்ளனர். (படங்கள்: வலி.மேற்கு செய்தியாளர்).

வலி. மேற்கில் உலகவங்கியின் உதவியுடன் நிறுவப்பட்ட வீடுகள் நேற்றுக் கையளிப்பு

வலி.மேற்கு,மார்ச் 12

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் நிதியுடன் முதலாம் கட்டமாக புதிதாக அமைக்கப்பட்ட வீடுகள் வைபவ ரீதியாக பயனாளிகளுக்கு நேற்றுக் கையளிக்கப்பட்டன.

கோலாகலமாக இடம்பெற்ற இந்த கையளிப்பு வைபவத்தில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா, உலகவங்கியின் வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் கே.குணராசா, யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அராலி தெற்கு செம்மணத்தியில் மூன்று வீடுகளும் அராலி மத்தி ஊரத்தியில் மூன்று வீடுகளும் பண்ணாகம் பல்லசுட்டியில் மூன்று வீடுகளும் வைபவ ரீதியாக பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் அராலி செம்மணத்தியிலும் அராலி ஊரத்தியிலும் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் வீடுகளை மங்கள விளக்கேற்றி நாடாவை வெட்டி பயனாளிகளுக்கு வைபவ ரீதியாகக் கையளித்தனர்.

பண்ணாகம் பல்லசுட்டியில் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்களின் 'பாண்ட்' இசையுடன் ஊர்வலமாக பிரமுகர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். பிரமுகர்கள் மங்கள விளக்கேற்றி, நாடாவை வெட்டி வீடுகளை பயனாளிகளுக்கு கையளித்தனர்.

வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் இந்த வீடுகளை கையளிக்கும் வைபவத்துக்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார். (3-175)

வாகனங்களின் ஆவணங்களை பரிசீலிக்கும் அதிகாரம் படையினருக்குக் கிடையாது

யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றின் ஆவணங்கள் பரிசோதனையிடும் அதிகாரம் படையினருக்குக் கிடையாது.

- இவ்வாறு தெரிவித்தனர் யாழ்.பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொலீஸார்.

போக்குவரத்து நடைமுறைகளை மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பாக செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு நேற்று நண்பகல் யாழ்.பொலீஸ் நிலையத்தில் நடைபெற்றது.

அந்தச்சமயம் - இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட செய்தியாளர்கள்:-

போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் ஆவணங்களைப் பொலீஸாரின் பிரசன்னமின்றி படையினர் தன்னிச்சையாக பரிசோதிக்கின்றனரே? இது விடயத்தில் என்ன கூறுகின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த போக்குவரத்துப் பொலீஸார் - 'குடாநாட்டில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையினாலும் - அவசரகாலச் சட்டத்தின் கீழும் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களை மட்டும் சோதனையிடும் அதிகாரம் படையினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

ஆனால், வாகனங்களுக்குரிய ஆவணங்களைப் பரிசோதனை செய்யும அதிகாரம் படையினருக்குக் கிடையாது''. என்று கூறினர். (எ-7)

கழிவு நீர் வாய்க்காலில் இறந்து மிதக்கும் மீன்கள்

யாழ்.பொலீஸ் நிலையம் முன்பாக துர்நாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

யாழ்.பொலீஸ் நிலையம் முன்பாகச் செல்லும் பிரதான கழிவு நீர் வாய்க்காலில் ஆயிரக்கணக்கான மீன்கள் உயிரிழந்து கிடக்கின்றன. இதனால், அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது.

யாழ்.நகரப் பகுதியில் இருந்து மணிக்கூண்டு வீதியூடாக பண்ணைக் கடலுக்குச் செல்லும் பிரதான கழிவு வாய்க்காலிலேயே கடந்த இரு தினங்களாக இவ்வாறு மீன்கள் திடீரென உயிரிழந்து அழுகிய நிலையில் நீரில் மிதக்கின்றன.

கழிவுநீர் வாய்க்காலில் உள்ள மீன்கள் உயிரிழந்தமைக்கான காரணம் என்னவென்று உடனடியாக அறிந்துகொள்ளமுடியவில்லை.

இதற்கிடையில் - இது விடயமாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்திடம் தொடர்புகொண்டும் கேட்டோம். அதற்கு அவர் 'மாநகரசபையினால் கழிவுநீர் வாய்க்காலில் மருந்துகள் எவையும் விசிறப்படவில்லை என்றும் -

நஞ்சுப் பதார்த்தங்கள் எவையும் நீரில் கலந்திருந்தால் மீன்கள் உயிரிழந்திருக்கச் சந்தர்ப்பங்கள் உண்டு' என்றும் - தெரிவித்தார். (எ-7)

யாழ்.பொலீஸ் நிலையம் முன்பாக செல்லும் பிரதான கழிவு நீர் வாய்க்காலினுள் ஆயிரக்கணக்கான குளத்து மீன்கள் திடீரென உயிரிழந்து அழுகிய நிலையில் வாய்க்காலினுள் கிடப்பதையும் படங்களில் காணலாம். (படம்: பிரதி)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 * 10 * 1943

இறப்பு 22 * 02 * 2005

அமரர் குமாரசாமி சுப்பிரமணியம்

(முன்னாள் உரிமையாளர், சதா பேக்கவுஸ் & சதா ஹாட்வெயர்)

ஓராண்டு என்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமோ உந்தன் நினைவுகள்
மலர்ந்த முகத்துடனும் மாசற்ற நெஞ்சுடனும்
வழிகாட்டியாய் இருந்தாய் எல்லோருக்கும்
மறையவில்லை உந்தன் முகம்
கண்முன்னே எப்போதும் எம்முடன் வாழ்கின்றாய்!

உன் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

இணுவில் கிழக்கு, வேம்பேலை. (47996)(42-45)

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 30 - 11 - 1951

மறைவு 10 - 03 - 2006

சிதம்பரி புஸ்பராசா B.A.

(யாழ்ப்பாணம் முன்னாள் இளைஞர் பேரவை அமைப்பாளரும் மாணவர் பேரவைச் செயலாளரும்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரி புஸ்பராசா அவர்கள் 10.03.2006 அன்று காலமானதையிட்டு கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.

பரம்பரைக்குப் பெயர் தந்த சூரியப் புதல்வனே!
பாரம்பரியம் புகழ் பரப்பப் பாடுபட்டவரே!
உங்கள் பிரிவால் வாடி நிற்கும் உங்கள் உறவுகள்.

முதலாம் ஒழுங்கை, உக்கிளாங்குளம், வவுனியா.

தகவல்: சி.தியாகராசா (வவுனியா).

(சி/46298)(32-45-42)

600ஐ தொட்டார்....

[15ஆம் பக்கத் தொடர்ச்சி]

எத்தனை பரிசோதனைகளை மேற்கொண்டாலும் முரளிக்கு வெற்றியே மிகுந்து காணப்பட்டது. கிரிக்கெட் வீரர்களிலேயே அதிக தடவைகள் சோதனைகளைச் சந்தித்தவர் முரளிதரன்தான். எத்தனை சோதனைகள் வந்தாலும் அத்தனையையும் உடைத்தெறிந்து அவற்றைச் சாதனைகளாக்கியவரும் முரளிதரனே ஆவர்.

ஆஸி. நாட்டவர்கள் ஏற்படுத்திய காயங்களைவிட கடந்த ஆண்டு தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தாலும் முரளிதரன் பல முக்கிய தொடர்களில் பங்குபெற முடியவில்லை. அந்தக் காயத்திலிருந்து மீண்டுவந்த முரளி மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டில் சாதனைகளை ஏற்படுத்தத் தொடங்கினார்.

- இவ்வாறு மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்த முரளி, நடந்து முடிந்துள்ள பங்களாதேஷிடனான டெஸ்ட் தொடரில் சர்வதேச அரங்கில் ஆயிரம் விக்கெட்டுகளை வீழ்திய சாதனை மனிதரானார். இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ஆஸி. டெஸ்ட் தொடரில் முரளி குறிப்பிடத்தக்க சாதனைகள் சிலவற்றை அடைந்தார்.

சிற்றஹொங்கில் நடைபெற்ற முதல் டெஸ்டில் 'முரளியின் பந்தில் சோட் - லெக் திசையில் பிடிகொடுத்து காலித் மசூத் ஆட்டமிழக்க 1000 விக்கெட்டுகள் சாதனையை அடைந்த முரளி, போகரோவின் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் அதே காலித் மசூத் டீப் ஸ்கூயர் - லெக் திசையில் முரளியின் பந்தை பிடிகொடுக்க 600 விக்கெட்டுகள் அடைந்த இரண்டாவது வீரர் என்ற சாதனைகளையும் அடைந்தார்.

இரண்டு சாதனைகளுக்கும் இலக்கான காலித் மசூத் தான் ஆட்டமிழந்து சென்ற போதும்கூட முரளிக்குக் கைகுலுக்கிக் கட்டியணைத்து வாழ்த்தியபின்பே ஆடுகளத்தை விட்டு வெளியேறியிருந்தார். டெஸ்டில் 5 விக்கெட்டுகள் கைப்பற்றியதில் அரைச்சதம் அடித்துள்ள முரளிதரன், டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகள் எல்லாவற்றிற்கும் எதிராக 50 விக்கெட்டுகளுக்கு மேல் கைப்பற்றியுள்ள சாதனையும் பெற்றுள்ளார்.

டெஸ்ட் [600] மற்றும் ஒருநாள் [411] ஆட்டங்களில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் பட்டியலில் முரளி இரண்டாவது இடத்தில் உள்ளார். ஒரு சுழற்பந்து வீச்சாளராக முரளிதரன் விளங்குவதால் அவர் இன்னும் சில காலம் சர்வதேசக் கிரிக்கெட்டில் இருப்பார். இதனால், அவர் ஓய்வுபெறும் போது யாரும் அடையமுடியாத சாதனைகளை அடைவார் என்பதில் ஐயமிருக்காது.

UNIVERSITY OF EAST LONDON UEL

✓ BEng Civil Engineering	✓ PG Dip/Msc Civel Eng
✓ BEng Electrical & Electronic Eng.	✓ MSc Information Security
✓ BSc Software Engineering	✓ MSc Internet Engineering
✓ BSc Computing	✓ MSc Information Technology
✓ BSc Computer Networks	✓ MSc Computer System Eng
✓ BA Early Childhood Studies	✓ LLM
✓ LLB / BA English Literature	✓ MSC Biomedical Science
✓ BSc Biomedical Science	✓ MSC Biotechnology
✓ BSc Sports Science	✓ MSc Public Health
✓ BA Business Studies	✓ MSc Financial Management
✓ BA Accounting & Finance	✓ MSc International Marketing
✓ BA Finance, Money & Banking	✓ MSc Molecular Medical Microbiology

September 2006 Intake

Over 100 other programmes available including Extended Degrees and pre-sessional English

•BA(Hons) •BSc(Hons) •MA •MSc •MBA •MPhil/PhD

By Appointment Only:
Mr Loho Gunasekera - Lohos Group
Official Representative & Education Advisor
Tel No's: 0777-917929 / 0714-124446
E-mail: loho@dialogsl.net

Office: Lucky Plaza Building, SH2, 6th Floor, St. Anthony's Mw., Colpetty.
(Weekdays only 8 a.m - 2 p.m
Office Tel: 2301050

FREE ADVICE + FREE VISA GUIDANCE

தமிழில் தொடர்புக்கு: DR. இந்திராணி, Tel: 2862376

துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமைபுரியும் *திருமதி சந்திரமாலிகா ஞானசேகர்* அவர்களின் அன்புத் தந்தை

அமரர் தில்லையம்பலம் சண்முகநாதன்

சட்டநாதர் வீதி, பூதவராயர் லேன், திருநெல்வேலி கிழக்கு, நல்லூர். அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரினது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம், வலி. கிழக்கு, கோப்பாய். பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.

(சி-48299)(11-15)

மரண அறிவித்தல்கள்

கனகசபை சுப்பிரமணியம்

விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல. 02, கொழும்பு- 6 ஐ வதிவிடமாகக் கொண்டவருமான கனகசபை சுப்பிரமணியம் நேற்று (11.03.2006) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - வள்ளியம்மை தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற மார்க்கண்டு - சுந்தரம்மா தம்பதியரின் மருமகனும் அன்னலட்சுமி, மார்க்கண்டு (லண்டன்), மனோகரன் மனோஜ் (**Air Travels Pvt Ltd.** கொழும்பு - யாழ்ப் பாணம்), தனலட்சுமி, அரசரட்னம் (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நடராசா, இராஜேஸ்வரி, சந்தானலஷ்சுமி, சோமசேகரம், சுயானி (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக இன்று (12.03.2006) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வைக்கப்பட்டு, பி.ப. 4 மணிக்கு பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 2, 46ஆவது லேன், கொழும்பு - 6.

தகவல்:
தொ.பே. 0777517019. (சி-48304)(11-15) மனோகரன்(மகன்).

திருமதி சற்குணம் சின்னத்தம்பி

நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணம் சின்னத்தம்பி அவர்கள் 10.03.2006 வெள்ளிக்கிழமை அன்று இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன் னம்பலம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்னம்மா, செல்லையா, தெய்வேந்திரம், நாகரத் தினம் மற்றும் கனகாம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணிதேவி (கிளிநொச்சி), கமலாதேவி (கனடா), கருணாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் கண பதிப்பிள்ளை (காலஞ்சென்ற), ரங்கநாதன் (கனடா), மகாதேவா ஆகியோரின் அன்பு மாமியும், ரங்கநாதன், காலஞ்சென்ற செல்வி, சதீஸ், சுதா மற்றும் தயா, லக்ஷ்மிகுமாரி, ரமேஸ்சாந்தி (இத்தாலி), சுரேஸ்மாலா (கொழும்பு), அமல்கபத்திரா (ஜேர்மனி), கேதீஸ், கவிதா (கனடா), சங்கீதா (கனடா), காண்டீபன் (கனடா), நர்மதா (காலஞ்சென்ற), ராஜி (கனடா), காந்தி (கனடா), ரமேஸ் (கனடா), குமரன், கஜன் (கனடா), மேனகா (கனடா), விது (கனடா), கண்ணா, துர்க்கா (நல்லூர்) ஆகியோரின் அம்மம்மாவும் மயூரன், செந்தூரன், மைதிலி, டயானி, டயந்தன் (கொழும்பு), சர்மிலன் (கொழும்பு), பிரணா, அபி, கிசோலி (கனடா), கிருஷக் (நல்லூர்), பிரதீபன், சசீவன், நிருபன், உஷா, சாருங்கன் (நல்லூர்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவிலுள்ள **Pall Connar (Funeral o Home)** இல் ஒரு மணியளவில் பார்வைக்கு வைக்கப் பட்டு (கனடா நேரம்) 2.30 மணியளவில் பார்பிமன் சீற்றில் அமைந்துள்ள **Ft. Jamet** மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
17/3, பண்டாரக்குளம் வீதி, நல்லூர் வடக்கு, நல்லூர். துர்க்கா (பேர்த்தி நல்லூர்), கண்ணா (பேரப்பிள்ளை).
கண்ணா **0773604840** (48010)(11-15)

திருமதி பிள்ளையம்மா முருகேசு

(கனகம்மா)

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் நந்தாவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிள்ளையம்மா முருகேசு அவர்கள் கடந்த (10.03.2006) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான கந்தையா, இரத்தினசிங்கம், செல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யோகராணி, புஷ்பராணி, இந்திராணி, மல் லிகாராணி (ஜேர்மனி), ஜெயராணி (பிரான்ஸ்), ஸ்ரீ ரஞ்சிதன், இரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் தணிகாசலம், ராஜ்குமார், ராஜேஸ்வரன் (சூட்டி - ஜேர்மனி), தமயந்தி (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - கோப்பாய்) ஆகியோரின் மாமியும் சரஸ் வதி (வவுனியா), குணரத்தினம் (இலங்கை வங்கி - கொழும்பு), நடராசா (இலங்கை வங்கி - யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை), நாகரத்தினம், ரத்தினம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், சிந்து ஜன், டிலோஷா, டிலக்ஷன், சுஜிதன், சுஜிதா, திவிசன், தர்சன், துவிகாசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2006) ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 1:30 மணியளவில் இல. 116 கோவில் வீதி, கொக்குவில் கிழக்கிலுள்ள, அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூத வுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

116, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு.

தகவல்:
(48005)(11-15) இரவிச்சந்திரன் (மகன்).

கிரனேட் வெடிப்பு

எம்பிலிப்பிட்டிய உடுகம பானாமுர பிர தேசத்தில் நேற்று சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பானா முர பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய நபர் ஒருவர் இந்தக் கைக்குண்டைக் கண் டெடுத்து அதனைச் சோதித்துப் பார்த்தபோது அது வெடித்ததில் சம்பவ இடத்திலேயே பலி யானர். இந்த கைக்குண்டு வெளிநாட்டுத் தயாரிப்பு என்று கூறப்படுகிறது. (ஐ)

கண்காட்சி

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் தையல் கண்காட்சியும் விற்பனையும் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணி முதல் கைதடி ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் செய லாளர் செ.கமலநாதன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக தென்மராட்சி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீ நிவாசன் கலந்துகொள்கிறார்.

கைதடி மேற்கு பராசக்தி மாதர் சங்கத் தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந் நிகழ்வில் தியாகி அறக்கொடை நிறுவனத் தில் தையல் பயிற்சியை பூர்த்தி செய்த மாண வர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெறும்.

மரண அறிவித்தல்

மகேந்திரம் பரமேஸ்வரி

காரைநகர், கோவளத்தைச் சேர்ந்த மகேந்திரம் பரமேஸ்வரி(இராசம்மா) அவர் கள் நேற்று (11.03.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் களபூமி, விளானைச் சேர்ந்த காலஞ்சென்ற உபதபாலதிபர் கணபதிப் பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மக ளும் காலஞ்சென்ற தம்பையா - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மகேந் திரத்தின் அன்பு மனைவியும் கருணாநிதி, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் காரைநகர், சாம்பலோடை இந்து மயானத் தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணற்காடு, காரைநகர். (சி- 48305)(11-15)

தகவல்:
பு.மகேந்திரம் (கணவர்).

ஆசிரியர் தேவை

யாழ். நகரப்பகுதியில் உள்ள கல்வி நிறுவனத்தில் ஆரம்பக்கல்வி (தரம் 1,2,3,4,5) கற்பிப்பதற்கும் மற்றும் கணிதம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், விஞ்ஞானம், சுகாதாரம் கற்பிப்பதற்கும் ஆசிரியர்கள் தேவை. சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். (தொ.பே. எண் குறிப்பிடவும்).

(47999)(11-15)

விளம்பர இல. 2830
மே/பா உதயன்

கடை சிப்பந்திகள் தேவை

சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற் பனையில் அனுபவமுள்ள சிப்பந்தி கள் தேவை. எங்களுக்கு அறிமுக மானவர்களுடன் நேரில் வரவும்.

வெங்கடேஸ்வரா,
இல.125A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-222-2905

நாகரிஸ் சுன்னாகம்

விஜய், திரிஷா நடித்த

சிவகாசி

பு.நே. 11.00, 3.00, 7.00

ராஜா யாழ்ப்பாணம்

சத்தியராஜ், சிபிராஜ், நமீதா நடித்த

கோவை பிரதர்ஸ்

பு.நே. 10.30, 1.30, 4.30 , 7.30

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஏகோபித்த வெளியீடு

அக்ஷன்கிங் அர்ஜுன் , கஜாலா , விவேக் நடித்த

மதராஸி

பு.நே.: 10.00, 1.30, 4.30

மரண அறிவித்தல்கள்

கணபதிப்பிள்ளை கந்தசாமி

(குரும்பசிட்டி, கட்டுவன்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கட்டு வனை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற் போது கனடாவில் வசித்தவருமான க.கந்த சாமி அவர்கள் 10.03.2006 வெள்ளிக்கி ழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை (பத்தைமேனி)- தங்கமுத்து தம்ப தியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை (கட்டுவன்) - முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், துஷித்தா, துருபதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலகுமாரின் அன்பு மாமனாரும் சிவசுப்பிரமணி யம் (ஆண்டி), கணேசமூர்த்தி (கொக்குவில்), வரதலட்சுமி (நோர்வே), விஷ்ணுசிங்கம் (நோர்வே), சிவபாதம் (சட்டத்தரணி, கொழும்பு), தங்கவேல் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (14.03.2006) அன்று செவ் வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

அன்றைய தினம் மு.ப. 10 மணியளவில் மஞ்சத்தடி, இணுவி லில் உள்ள க.தர்மநாயகம் (மைத்துனர்) இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மஞ்சத்தடி, இணுவில் க.கணேசமூர்த்தி (சகோதரர்)
க.தர்மநாயகம் (மைத்துனர்).
கனடா: தொ.பே. 0014162870736. (48009)(11-15)

திருமதி பொன்னுச்சாமி கமலாபாய்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாக வும் இந்தியாவில் வசித்தவருமாகிய பொன் னுச்சாமி கமலாபாய் 10.03.2006 வெள்ளிக் கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் - நாகபூசணி அம்மா தம்பதிய ரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி குமாரசாமியின் மருமகளும் காலஞ் சென்றவர் களான இலட்சுமிப்பிள்ளை, ஞானமூர்த்தி, பொன்னம்மா ஆகியோ ரினதும் சிதம்பரநாதன், சிவானந்தன், சந்திராபாய் ஆகியோரின் சகோதரியும் ललितகுமாரி, தனலெட்சுமி, மகேந்திரா; காலஞ் சென்ற ராதா, கலா, அசோகன், கிருஷ்ணகுமார், ரஞ்சன், கீதாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும் யோகதாசன், மணிவண்ணன், கவிதா, சிங்கமூர்த்தி, வத்சலா, வள்ளி, சங்கீதா ஆகியோரின் மாமியும் சிவராம், வித்தியா, வானதி, செந்தூரன், பூரணி, தினேஷ், தேவகி, தர்ஷன், புனிதா, ரிஷிகர் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2006) ஞாயிற் றுக்கிழமை திருச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கெரள்ளவும்.

ஆலடி, வல்வெட்டித்துறை.

தகவல்:
(48004)(11-15) குடும்பத்தினர்.

திருமதி செல்லையா பாக்கியம்

மிருசுவில், கெற்பேலியைப் பிறப்பிட மாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிட மாகவும் கொண்ட திருமதி செல்லையா பாக்கியம் அவர்கள் நேற்று (11.03.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையாவின் (முன்னாள் நேரப்பதிவாளர், இ.போ.ச.) அன்பு மனை வியும் ஜெகநாதன் (நாதன் ஸ்ரோர், சாவகச் சேரி), ஜெகநாதன் (பனை அபிவிருத்திச் சபை), யோகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சுசீலாதேவி (ஆசிரியர் - கச்சாய் மகாவித்தியாலயம்), புஸ்பலதா (ஆசிரியர் - மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்), சாரதாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜீதா, சுஜீவன், சுவர்ணா, விஸ்ணவி, விகா சினி, சபீனா, நிவேதிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2006) ஞாயிற் றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனஞ் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (48001)(11-15)

தகவல்:
ஜெகநாதன் (மகன்).

திருமதி சின்னத்துரை (வெள்ளை) நேசமணி (இலட்சுமி)

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத் துரை - நேசமணி அவர்கள் நேற்று (11.03.2006) சனிக்கிழமை காலை 8.50 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - செல்லி தம்பதியரின் அன்பு மகளும், பண்டாரி - பூவதி தம்பதியரின் அன்பு மருமகளும், பண்டாரி - சின்னத்துரையின் பாசமிகு மனைவியும், சகிலா, சுசிகரன் (லண்டன்), குகதாஸ், ரமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வராசா, தயானி (லண்டன்), கமலினி, றஜிதா ஆகியோரின் மாமியும் தர்மசீலன், விமல், நிதர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி. (48000)(11-15)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

பணத்துடன் தலைமறைவான லொறிச் சாரதி கைது!

கொழும்பு, மார்ச் 12

யாழ். நகரில் செயற்படும் தனியார் போக்குவரத்துச் சேவை நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய லொறிச்சாரதி ஒருவர் பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்தபின் தலைமறைவாகிவிட்டார். பின்னர் அவர் நேற்று கண்டி கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

'ஈஸ்வரன் ட்ரான்ஸ்போர்ட்' என்ற நிறுவனத்தில் பணியாற்றிய - பெரும்பான்மை இனத்தவரான - லொறிச்சாரதி ஒருவரே கடந்த 10 நாள்களுக்கு முன்பாக புளியங்குளம் சோதனைச் சாவடியில் செலுத்த வேண்டிய தீர்வைப் பணத்துடன் தலைமறைவாகி இருந்தார். இது தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது. இந்நிலையில் போக்குவரத்து நிறுவனத்தினர் எடுத்து முயற்சியால் தலைமறைவான சாரதி நேற்று கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

யாழ். பொலீஸாரிடம் கையளிப்பதற்காக அவர் நேற்று இரத்மலானை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். (ஐ)

பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டம் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 19 ஆம் திகதி வரையும் -

இரண்டாவது கட்டம் ஜூன் மாதம் 19ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி வரையும் நடைபெறும்.

மூன்றாவது தவணை செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி வரையும் நடைபெறும்.

- இவ்வாறு மாற்றப்பட்ட தவணை நடைமுறை சிங்கள், தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு மாத்திரமே அமுல் செய்யப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-12)

இந்தியாவின் நிதி உதவியுடன் திருமலையில் அனல் மின்நிலையம்

கொழும்பு, மார்ச் 12

இந்திய அரசின் உதவியுடன் திருகோணமலையில் நிலக்கரி அனல் மின் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க அரசு திட்டமிட்டுவருவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியினை இந்திய அரசாங்கம் இதற்கென வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் இந்த அனல் மின் நிலையத்தை ஆரம்பிப்பதற்குரிய அனைத்து ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளையும் நிறைவுசெய்ய மின்வலு எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்தில் ஆயிரம் மெகா வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

சர்வாதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்வதற்கு அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்றை கடந்த மாதம் போர் குற்றவிசாரணை நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

மிலோசவிக் சிறைக் கூண்டின் உள்ளே கட்டிலில் சடலமாகக் காணப்பட்டார் என்று குற்ற விசாரணை நீதிமன்றம் தெரிவித்தது. அவர் தற்கொலை செய்தமைக்கான சான்றுகள் எதுவும் இல்லை என்று அதிகாரிகள் கூறினர். பொஸ்னியா, குரோசியா, கொசாவோ யுத்தங்களின்போது அவற்றின் நடுநாயகமாக விளங்கியவர் மிலோசவிக்.

மனித குலத்துக்கு எதிராக மேற்கொண்ட யுத்தக்குற்றங்கள் தொடர்பில் அவர் ஐ.நாவின் விசாரணைகளை எதிர்கொண்டிருந்தார்.

சுமார் 2 லட்சம் பேர் உயிரிழக்கக் காரணமாக அமைந்த பொஸ்னிய யுத்தத்தின்போது (1992 - 1995) இடம்பெற்ற ஏராளமான மனிதப் படுகொலைகள் தொடர்பாகவும் மிலோசவிக் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது.

2000ஆம் ஆண்டு வரை சுமார் 13 வருடங்கள் அவர் யூகோஸ்லாவியாவின் அதிபராக இருந்தார். (ஐ)

மீன்பிடித் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

தொண்டைமானாறு கிழக்குக் கடற் பகுதியில் அருகில் இருந்த மீன்பிடித் தடையே நீக்கப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். (ஐ-3)

மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரைத்துறை தொடர்பாக மஹிந்தவுடன் பேசியதாகவும் தமக்கு எதுவித நியமனமும் வழங்கப்படவில்லை என்றும் ரவீந்திர ரந்தெனிய தெரிவித்தார்.

மஹிந்தவின் சிந்தனையால் ஈர்க்கப்பட்டு அவரை தான் ஆதரிக்க முடிவு செய்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளும் முறை, தேர்தல் சட்டத்தை அமுல்படுத்தும் முறை பதிவு செய்யப்பட்ட கட்சிகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ஆகியன குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ)

போக்குவரத்துப் பொலீஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துப் பொலீஸார் தங்களது பணிகளை நிறுத்திப் பின்னர் தற்சமயம் வீதி ஒழுங்குகள் மீறப்பட்டுவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் தலைக்கவசம் அணியாமல் செல்லுதல், சைக்கிள்களில் பக்கம் பக்கமாகப் பயணித்தல், ஒரு வழிப்பாதை முறைகளை மீறிச் செயற்படுதல் போன்றவற்றைச் சாதாரணமாகக் காணமுடிகின்றது.

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் ஓரளவு சுமூகமான சூழ்நிலை திரும்பியுள்ளது. எனவே, வீதிகளில் தமது பணிகளை மீண்டும் ஆரம்பிக்கப் போக்குவரத்துப் பொலீஸார் முடிவு செய்துள்ளனர். எனவே, பொதுமக்கள் முன்னர் நடைமுறையில் இருந்த ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்யும் போது தலைக்கவசம் அணிந்து செல்வதுடன் உரிய ஆவணங்களையும் எடுத்துச் செல்லவேண்டும்.

யாழ். நகரப் பகுதியில் ஒரு வழிப்பாதையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கே.கே.எஸ்.வீதி, கஸ்தூரியார் வீதி, பழைய தபால் நிலையம் லிங் வீதி ஆகிய மூன்று வீதிகளையும் ஒரு வழிப்பாதையாகப் பின்பற்றுதல் அவசியம்.

வீதிகளில் செல்லும் போது பக்கம் பக்கமாகச் செல்வோர் மற்றும் வீதிகளில் வாகனங்களை அதிவேகமாச் செலுத்துவோரும் கண்காணிக்கப்படுவர்.

- இவ்வாறு போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-7)

ஸ்ரீலங்கா இராணுவத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகத்தரான அரசகுமார் கண்ணமுத்து (ஜூன்) ஆகியோர் உட்பட 20 பொதுமக்களையும் கருணா குழு கொலைசெய்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராகச் சண்டை இடுவதற்காக, அரசாங்கம் கருணா குழுவுக்குப் பாதுகாப்பும் ஆயுதங்களும் வழங்கி உதவியது. ஆனால், தனக்கும் கருணா குழுவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று அரசாங்கம் மறுத்துவந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர நேரு அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள பொலநறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள இராணுவச் சோதனை முகாமுக்கு அருகில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பத்திரிகையாளர் தர்மலிங்கம் சிவராமின் கொலைக்கு துணைப்படைகளும் இராணுவ உளவுத் துறையுமே பொறுப்பு என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியதும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் துணைப்படைகளின் துணையுடன் இராணுவத்தினராலேயே கொலை செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியதும் -

அமெரிக்க அரசின் மனித உரிமை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

கொலைகள் தொடர்பாக வழமைபோன்று விடுதலைப் புலிகள் தரப்பையும் அமெரிக்க அறிக்கை கண்டித்துள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் பொலீஸ் படைகளைச் சேர்ந்த 68 பேரையும், தமக்கு எதிரான தமிழ்த் துணைப்படைகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவற்றின் ஆதரவாளர்கள், பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் வழங்கியோர் என்கருதப்படுவோர் மற்றும் பொதுமக்களையும் சேர்த்து 106 பேரையும் விடுதலைப் புலிகள் கடந்த வருடத்தில் கொலை செய்துள்ளனர் எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் நோக்கத்துடன் அரசாங்கம் எவரையும் கொன்றதற்கான உறுதிப்படுத்தப்பட்ட தகவல் எதுவும் இல்லை என்றும் அதே அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

அரசாங்கப் படைகளுடன் சேர்ந்து துணைப் படைகள் இயங்கும் விடயம், அமெரிக்க அரசின் மனித உரிமைகள் அறிக்கையில் அம்பலப்படுத்தப்பட்டுவிட்டதால் -

ஸ்ரீலங்கா அரச படைகளுடன் இணைந்து இயங்கும் சகல துணைப்படைகளினதும் ஆயுதங்களைக் களையவேண்டும் என்று கடந்த மாதம் இடம்பெற்ற நோர்வே சமாதானப் பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் முன்வைத்த நிபந்தனைகளுக்கு ராஜபக்ஷ அரசாங்கம் அடிபணிய நேரிடும் என்று அமெரிக்காவில் அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவும் உள்ளடங்கும் டோக்கியோ தலைமையிலான உதவி வழங்கும் நாடுகளும், அரசியல் பேச்சுவார்த்தையை ஊக்குவிக்கும் சூழ்நிலை ஸ்ரீலங்காவில் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தையே வலியுறுத்தி இருந்ததையும் இங்கு அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அமெரிக்காவின் மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிட்ட அறிக்கை, ஸ்ரீலங்காவின் தேசியப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றம் மற்றும் மூதவை ஆகிய இரண்டு சபைகளையும் சேர்ந்த அரசியல் தலைவர்களைப் புதிய கோணத்தில் அணுகுவதற்கு வழி சமைத்திருக்கின்றது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் 'குப்பைக் கூடைக்குள்' வீசப்போவதாகப் பயமுறுத்தித் தோல்விகண்ட மஹிந்த அரசாங்கம், கடந்த மாதம் நடைபெற்ற ஜெனீவா மாநாட்டில் அதனை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் -

துணைப்படைகள் சம்பந்தமான விவகாரத் தில் அமெரிக்கா ''கம்பத்தை உயரத்தில் பிடித்துள்ள'' சூழ்நிலையில் - எதிர்வரும் மாதங்கள் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகள் எவ்வாறு அமையும் என்பது முக்கிய மானதாகவே இருக்கப்போகின்றது - என்றும் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (அ)

அருள் கொமினிகேஷன்ஸ்
கனடா, அமெரிக்கா அழைப்பு நிமிடத்திற்கு... 3/=
Calling Cards...
எந்த இடத்தில் இருந்தும்...
எந்த தொலைபேசியில் இருந்தும்...
எந்த நேரத்திலும் மே குலைந்த கட்டணத்தில்...
தெளிவான ஒலியில் வெளிநாடும் அழைப்பு நிமிடத்திற்கு 05/=
அருள் கொமினிகேஷன்ஸ், 01 நற்வுன் வீதி, யாழ்ப்பாணம்.

THAMPI தம்பி
யாழ் - கொழும்பு - யாழ்
விமானசிட்டைகள்
மலிவு விலைகளில்
யாழ். நகரில்
90, கந்தப்பசேகரம் வீதி யாழ்ப்பாணம்.
T.P: 222 2823, 222 2504, Fax: 222 2040
கொழும்பு நகரில்
296/D4, காலி வீதி, வெள்ளவத்தை.
T.P: 0112360959, 011 2360960
Hotline: 0777 382343

COMPUTER COURSES
சர்வதேச தரமும் முழுமையான அங்கீகாரமும் உள்ள கற்கைநெறிகள் விரைவில் அறிமுகம்
விவரம் 14ஆம் திகதிய உதயனில்

தரம் 04, 05
புலமைப் பரிசில் பரீட்சை
வே.அன்பழகன்
ஆசிரியரின்
இன்று 12.03.2006 3 p.m.
தினகல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

IIS
விசேட பிரிவுகள் ஆரம்பம்
Eng. Drawing & Auto CAD
14.03.2006 (10.00மணி)
மாணவர்கள், உத்தியோகத்தர்களின் வசதிகளுக்கேற்ப வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

விசேட சலுகை
9000/=
எப்பிரதேசத்திலும் எந்த சூழ்நிலையிலும் வீட்டில் இருந்தவாறு உரையாடக்கூடிய முறையில் டயலொக், மொபிரெல் மேசைத்தொலைபேசிகள் பைக்கேச் இணைப்புக்களுடன் குறைந்த செலவில் பொருத்தித்தரப்படும்.
மொபிரெல் 300/=, டயலொக் 500/= பைக்கேச்சுகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
* உத்தரவாதம் உண்டு.
* அனைத்து விதமான கையடக்கத் தொலைபேசிகளையும் அதற்கான உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: நியூ பவர் செலுலர் டிரேடிங் கம்பனி தொ.பே.: 0773-518330
205/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 077-6660289
(48007) (54-12-11)

UNIT EDUCATION
100% செய்முறைப் பயிற்சியுடன்
Hardware & Networking
16/1, Killnar Lane, Jaffna.

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தினகரன் வாரமஞ்சரி
உதயன்
ஞாயிறு சிறப்பிதழ்
12.03.2006

பௌத்த துறவிகள் கட்சி அரசியலைக் கைவிட வேண்டும்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் சிறந்த கல்விமான். இவர் தனது துறவு வாழ்க்கையில் 50 வருடங்களைக் கடந்த 9ஆம் திகதி முடித்துள்ளார். இன்றைய பௌத்த சமூகத்தின் நிலைப்பாடு மற்றும் பௌத்த துறவிகளின் அரசியல் பிரவேசம் ஆகியன குறித்து 'லங்காதீப' வார இதழுக்கு வழங்கிய பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

வினா:- தங்களது துறவு வாழ்கையில் 50 ஆண்டுகளைக் கடந்து விட்டீர்கள், அந்த ஐம்பதாண்டு கால வரலாற்றில் பௌத்த சமூகத்தின் பிரதிபலிப்புக்கள் எத்தகையன என விளக்கமளிப்பீர்களா?

பதில்:- அன்றைய மக்கள் நேர்மையான வர்களாகவும் சீரிய நடைமுறைகளைப் பின் பற்றுபவர்களுமாகவே காணப்பட்டனர். இன்றுபோல் பெருமளவில் துறவறம் பூணுவது கரணப்படவில்லை. காலப்போக்கில்தான் துற வறத்துக்கு உள் ளீர்க்கப்படுவது ஆரம்ப மானது. சட்டமூலமொன்றின் ஊடாகப் பௌத்த சமயப் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டதன் பின்னர் அந்தப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் தேவைப்பட்டனர். அத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கை முன் வைத்தே துறவறக் கலாசாரம் படிப்படியாக உருவானது. உண்மையில், இலங்கையில் துறவு பூணுவது மிகக் குறைவாகவே இருந்தது. துறவு வாழ்க்கைக்குப் புகுத்தும் செயற் பாடுகளே அதிகமாகக் காணப்பட்டன.



துறவு பூணுவதென்பது ஒருவர் சுயவிருப் பின் பேரில் பௌத்த கோட்பாடுகளைப் பின் பற்ற முனைவதாகும். இளம் பிராயத்தில் அத் தகைய ஆசை தோன்றுவதும் உண்டு. ஆனால், அது வாழ்க்கையில் விரக்தியுற்று உருவாகும் துறவறம் அல்ல. உலக வாழ்கை யைப் பற்றி ஓரளவுக்குத் தெளிவு பெற்று பூணும் துறவறமே உயர்ந்ததாகும். அன்று ஆசிரியர்களும் பெற்றோரும் பௌத்த கோட் பாட்டைப் பின்பற்றுமாறு எமக்கு வழங்கிய அறிவுரைகளே எம்மைத் துறவுபூணச் செய் தன. அன்றைய சமூகத்தில் துறவுபூண விரும் பும் ஒருவரிடம் அதற்குரிய தகுதிகள் உள்ள னவா எனக் கூர்ந்து நோக்கப்பட்டது. சில காலங்கள் வரையில் பௌத்த விகாரைகளில் தங்கி தேவையான பயிற்சிகளைப் பெற வேண்டியிருந்தது. இவ்வாறு பல விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதன் பின்னரே அவர்களுக் குத் துறவறம் வழங்குவது பற்றி கவனம் செலுத்தப்படும். எவரும் துறவு பூணலாம் என்ற நிலைப்பாடே இன்றுள்ளது.

வினா:- இன்றைய நவீன உலகில் இளம் பௌத்த துறவிகள், சமூகத்தில் பல்வேறு சவால்களையும், அழுத்தங்களையும் எதிர் கொள்ள வேண்டியுள்ளதாகக் கருத்து நிலவுகி றது. அன்றும் இந்த நிலை காணப்பட்டதா?

பதில்:- ஆரம்பகாலங்களில் துறவறத் துக்குப் பொருந்தும் கல்வியறிவு எமக்கு வழங்கப்பட்டது. சமயப் பாடசாலைகள் அதற்கு உறுதுணை புரிந்தன. அன்றைய பௌத்த துறவிகளுக்குப் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு இருக்கவில்லை. எப்போதா வது பல்கலைக்கழகங்களுக்குச் சென்றவ ர்கள் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னரே அத்தகைய வாய்புகளைப் பெற் றுள்ளனர். அத்தகைய கல்வி முக்கியமாக திரிபீடக தர்மத்தில் ஆழ்ந்த அறிவைப் பெறு வதாகவே அமைந்திருந்தது.

பன்மொழிப் புலமை தொடர்பாக சமமான அறிவூட்டல்கள் வழங்கப்பட்டன. அதன் வாயி லாகப் பூரணமான ஆழ்ந்த அறிவை அவர்கள் பெற்றனர். அதுபோன்றே சமயப் பாடசாலை களில் துறவறத்தைப் பேணும் செயற்பாடு களே இடம்பெற்றன. மாலைப்பொழுதுகளில் பிரித் ஒதும் நிகழ்வு முடியும் வரையிலும் சகல செயற்பாடுகளும் திட்டமிடப்பட்ட வகையி லேயே இடம்பெற்றன.

1957-1958 காலகட்டங்களில் இந்த நடை முறைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. முக் கியமான இரு பௌத்த சமயப் பிரிவெனாக் கள் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றன. அதன் பின் னரே பௌத்த பிக்குகளின் கல்வி நடவடிக் கைகள் பல்கலைக்கழகங்கள் வரையில் சென்றன. அதன் காரணமாக எமது பாரம்ப ரிய கல்வி முறைகளிலிருந்து விலகி பல்க லைக்கழகங்களில் புகும் நிலை உருவானது.

அக்கால கட்டத்தில் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறுவோரே அறிவாளிகள் என ஏற்கப்படும் நிலை இருந்தது. அதன் காரணமாகவே பௌத்த துறவிகள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறப் பெரு முயற்சி செய்தனர்.

இன்று அந்தப் பாரம்பரிய கல்வி முறை பின்தள்ளப்பட்டுள்ளது. துறவறம் பூணாதவர்கள் பெறும் கல்வியறிவுக்குச் சமமான கல்வியறிவையே துறவறம் பூண்டுள்ள பௌத்த பிக்குகளும் பெறுகின்றனர். இதனூடாக எழும் சவால்களுக்கும் சமூக அழுத்தங்களுக்கும் இன்றைய இளம் பௌத்த துறவிகள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

வினா: இன்றும் பௌத்த துறவிகளுக் குப் பல்கலைக்கழகக் கல்வி அவசியமற்றது என்ற கருத்து மக்களிடையே நிலவுவது பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

பதில்: அக்கருத்து எனக்கு உடன்பாடானதல்ல. பல்கலைக்கழகக் கல்வி பௌத்த துறவிகளுக்குத் தேவையானதே. முக்கியமாக எமது நாடு பௌத்த நாடாக இருப்பதாலும் தேரவாத பௌத்த தர்மம் இங்கு பின்பற்றப்படுவதாலும் அதற்குரிய பாளி மொழி மற்றும் பாளி இலக்கியம் முக்கிய தேவையாக உள்ளது. அத்தோடு திரிபீடக தர்மம் தொடர்பான கல்வியையும் பூரணப்படுத் திய பின்னர் பல்கலைக்கழகங்களுக்குப் புகும் விதமான நடைமுறையைச் செயற்படுத்த முடிந்தால் மிக நல்லது.

அன்று போலல்லாது சர்வதேசங்களோடும் தொடர்புகளைக் கொண்டுள்ள சமுதாயமே இன்றுள்ளது. எனவே, பல்துறைகலைகளில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் , புதிய கண்டு பிடிப்புகளை மேற்கொள்ளவும் பௌத்த துறவிகள் முன்நோக்கிச் செல்ல வேண்டியுள் ளது. அதனால் பல்கலைக் கழகக் கல்வி பௌத்த துறவிகளுக்குப் பயன்மிக்க ஒன்றே. தேசிய, மத மற்றும் கலாசார செயற்பாடு களுக்கும் அதுபோன்றே சர்வதேச செயற்பாடு கள் தொடர்பாகவும் இந்த அறிவு பயன்படும். ஆயினும், தற்போதுள்ள பல்கலைக்கழகக் கல்வி நடைமுறைகளில் சில மாற்றங்கள் தேவைப்படுகிறது.

பல்கலைக் கழகங்களில்.....

பௌத்த பிக்குகள் அல்லாத மாணவர்க ளின் கல்விச் செயற்பாடுகளுக்குப் பொருந்தும் வகையிலேயே பாடநெறிகள், கால அட்டவணை கள் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் உள்ளன. அவற்றின் மத்தியில் பௌத்த பிக்குகளான மாணவர்களின் வெளிப்பாடுகள் பாதுகாக்கப்படுவதற்குரிய வாய்ப்புகள் மிக சொற்பமே.

மறுபுறத்தில் பல்கலைக்கழகங்களில் பௌத்த பிக்குகள் அல்லாத சாதாரண மாணவர்கள் பகிஷ்கரிப்புகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களின்போது அதே பல்கலைக் கழகத்தில் பயிலும் பௌத்த துறவிகளான மாணவர்களால் ஒருபுறம் ஒதுங்கியிருப்பது இயலாத செயலாகும். அதேவேளை, பௌத்த பிக்குகள் அல்லாத மாணவர்கள் தமது பாதுகாப்புக்குப் பௌத்த துறவிகளையே பாதுகாப்புக் கேடயங்களாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய நடைமுறைகள் காரணமாகச் சில சந்தர்ப்பங்களில் பிக்குகள் தரப்பில் சில தவறுகள் ஏற்பட இடமுள்ளது என்பதே எனது வாதமாகும்.

வினா: பிக்கு சமூகத்துக்கு சிறந்ததொரு தலைமை கிடைப்பதில்லை என்றொரு கருத்தும் நிலவுகிறது. மூத்த பௌத்த குரு என்ற கோதாவில் அதுபற்றித் தங்களது அபிப்பிராயம்?

பதில்: ஆம். உண்மையில் இளைய பிக்கு தலைமுறைக்கு அத்தகைய குறைபாடு உள்ளது. இன்று பகிஷ்கரிப்பு நடவடிக்கை யொன்றின்போது பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகளை வைத்தே மக்களால் அவர்களின் தராதரங்கள் பெரும்பாலும் கணிக்கப்படுகின்றன. என்றாலும் இன்றைய பிக்கு சமூகம் முறையாக வழிநடத்தப்படு வதற்குச் சாதகமாக இருந்த புறச்சூழல் இன்று மாற்றமடைந்துள்ளதே அவர்களுக்கு இந்நிலை ஏற்படக் காரணமாகியுள்ளது. மேலும் இன்று பௌத்த பிக்குகள் மத்தியில் பெரும் எண்ணிக்கையானோர் பௌத்த மதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்க ளிடம் எமது பௌத்த சாசனக் கோட்பாடுகள் தொடர்ந்தும் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற உணர்வு காணப்படுகிறது. ஆயினும், அவர்களுக்கு முறையான வழிகாட்டல்கள் தேவையாகவே உள்ளன. பொறுப்பு வாய்ந்த பௌத்த குருமார் மூலம் அத்தகைய தலைமைகள் ஏற்கப்படும்போது சில தரப்புகளில் இருந்து எதிர்ப்புகளும் எழலாம்.

வினா:- மகிழ்வோடு சகலரும் இணைந்து சமாதானமாகச் செயற்பட வேண்டுமென பௌத்த தர்மம் உபதேசித் துள்ள போதும் பௌத்த பிக்குகளிடையே பல்வேறு அபிப்பிராய பேதங்களும் வேறுபாடு களும் காணப்படுகின்றன. பௌத்தத்தில் வித்தியாசமான பிரிவுகள் காணப்படுகின் றன இந்த நிலைப்பாட்டை நீக்குவது குறித்துத் தங்களது தரப்பு பெரிதும் கவனம் செலுத்தியுள்ளதாகத் திருப்தியுற முடியுமா?

பதில்:- ஒவ்வொரு பௌத்த நிக்காயங் களிலும்[பிரிவுகள்] வித்தியாசங்கள் இல்லை. நாம் அந்த வார்த்தையை வித்தியாசம் என்று கருதுவதும் இல்லை. நாம் ஒரே திரிபீடக தர்மத்தையே பின்பற்றுகின்றோம். எமது பாரம்பரியத்தில் காவி உடைகளை அணிவதில் சில மாறுபட்ட முறைகள் உள்ளன. அது போன்ற சிறுசிறு வித்தியாசங்கள் மாத்திரம் இருக்கலாம். ஒரு வகையில் எமது பின்னடை வுகளுக்கு இவை காரணமாகக் குறிப்பிட்டா லும். பல சிறப்பான இலட்சணங்களும் உள்ளன. பல்கலைக்கழகக் கல்வி போன்றே ஏணைய பொதுவான செயற்பாடுகளிலும் கூட நிக்காயங்கள் என்ற வேறுபாடுகள் இன்றி பங்களிப்புகள் இடம்பெறுகின்றன. ஒரு காலத்தில் இரு நிக்காயங்களைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் தானங்களை ஏற்கும் நிகழ்வுகளில் பங்கேற்கும் சந்தர்ப்பங்களில் வெவ்வேறாக உபசரிக்கப்பட்டுள்ளனர். இன்று அவ்வாறு நிகழ்வதில்லை; அத்தகைய மோதல்களும் இன்றில்லை.

நிக்காயங்களில் மாறுபாடான கோட்பாடு கள் இருப்பதாக ஒரு சிலர் நூல்களைக் கூட எழுதுகின்றனர். ஆயினும், அத்தகைய நிலை இன்று இல்லை. பண்டைய பாரம்பரியம் ஒன்று நிலவுவது உண்மையே. அவையும் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறுவோ ரும் இருக்கவே செய்கின்றனர்.

எனது கூற்று, இந்த நிக்காயங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு, ஒரே பிரிவாக இயங்க வேண்டும் என்பதல்ல. இந்த நிக்கா யங்களைச் சேர்ந்த அனைத்து பௌத்த பிக்கு களும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டு மென்பதேயாகும்.

வினா:- நவீன பிக்கு சமூகம் தேரவாதக் கோட்பாடுகளையே பின்பற்றுவதாகக் குறிப் பிட்டுள்ளீர்கள். ஆனால், மகாயான கோட்பா டுகளுக்கும் சார்பான புதுமையான பௌத்த கோட்பாடொன்றும் செயற்படுவதாகவே தெரிகிறது? அது பற்றியத் தங்களது அபிப்பி ராயம் என்ன?

பதில்:- இதற்கான பொறுப்பை பொது சன அமைப்புகளே ஏற்கவேண்டும். சில குறிப் பிட்ட பௌத்த பிக்குகளை முதன்மைப்ப டுத்த, மக்களிடையே அவர்களைப் பிரபலப்ப டுத்த பல்வேறு உபாயங்களை இவை மேற் கொள்கின்றன. நோய்களைக் குணப்படுத் தும் சக்தி அவர்களுக்கிருப்பதாகப் பிரசாரம் செய்கின்றன. ஒவ்வொருவரும் தனித்தனி யாகத் தமக்கெனவே உருவாக்கிக் கொண்ட எண்ணக்கருக்களுக்கு ஏற்ப மேற்கொள்ளும் செயற்பாடுகளும் உள்ளன. ஒரு காலத்தில் அரச மரம் பெரும் அற்புதங்களைப் புரிவதாகி வும் கூறப்பட்டதுண்டு. ஆனால், அவ்வாறு எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

அத்தகைய புனை கதைகள் இறுதியில் அரசியல் உபாயங்களுக்குப் பயன்படுத்தப்ப டுகின்றன. அத்தகையதோர் பொய்க் கதை களைத் தாமாகவே உருவகப்படுத்திக் கொண்டிருப்பார்களாயின் அவற்றின் அடிப்ப டையே ஆட்டம் கண்டு இற்று வீழும் வரை அவர்கள் அதை அறிய மாட்டார்கள். இவை தற்காலிகமானவை. பாரம்பரியம் மிக்க வர லாற்றில் இடம்பெறும் நிர்மாணங்களே எமக் குத் தேவை. மக்களை மயக்கி வசப்படுத்தும் செயற்பாடுகள் மூலம் பௌத்த தர்மத்தைப் பாதுகாக்க இயலாது ஞானத்தைப் பெறுவ தற்குப் புனிதத் தன்மை வேண்டும். அதைப் பெற முயற்சிப்போர், புனிதத்தன்மை என்ற வட்டத்துக்குள் மாத்திரமே ஒழுக வேண்டியுள் ளது. புனிதம் தேவைதான். ஆனால், அது தீவிர பக்தியாக இருக்கக் கூடாது.

ஆனால், இன்று அதுதான் தென்படுகி றது. தர்மோபதேசம் மக்களுக்குப் பயனளிக் கக் கூடியதாக அமைதல் அவசியமேயொளிய, அதைச் செவிமடுப்போர் இறுதியில் தர்மோப தேசத்திற்கு வந்தனம் கூறி வெறுமனே வீடு செல்வதாக அமையக் கூடாது.

ஆனாலும், இவை அனைத்தும் மக்களை வசப்படுத்தும் எதிர்பார்ப்புகளோடு மேற் கொள்ளப்படுபவை என்றே என்னால் உணர முடிகிறது. ''பரிநிர்வான நிலையை அடைய வெகு தூரம் செல்ல வேண்டாம்.... இதோ இப் போதே அதை அடையலாம்'' என்ற சாரப்ப டவே சமயச் சொற்பொழிவுகளில் கருத்துக் கள் வழங்கப்படுகின்றன. சமயச் சொற்பொ ழிவுகளை மக்களிடையே அறிமுகப்படுத்த மக்களைக் கவரும் அது போன்ற வார்த்தை களே பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்துவதால் மாத்தி ரம் யதார்த்தத்தை அடைய இயலாது.

வினா:- பௌத்தபிக்கு ஒருவருக்கு அரசியல் பொருத்தமற்றது என்றொரு கருத்து நிலவுகிறது. ஆனால், இன்று சில பௌத்த பிக்குகள் நேரடியாகவே அரசியலில் குதித்துள்ளனர். இந்த நிலைப்பாடு பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:- பௌத்த பிக்குகளின் அரசியல் பிரவேசத்துக்கு நல்லதோர் உதாரணம், 1940களில் வெளியிடப்பட்ட வித்தியாலங்கார பிரகடனமாகும். இந்த வித்தியாலங்காரப் பிரகடனத்தின் ஊடாகவே அண்மைக் காலங்களில் பௌத்த பிக்குகளின் அரசியல் பிரவேசம் இடம்பெற்றுள்ளது. அக்காலகட்டத் தில், மக்களிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கை முன்வைத்தே வித்தி யாலங்காரப் பிரகடனம் மூலம் வித்தியாலங் கார பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. ஏகாதிபத்தியவாதிகளான அங்கியர்களது ஆட்சி நிலவிய அக்கால கட்டத்தில் மேற்குலகக் கலை, கலாசாரங்களில் மூழ்கிய சமுதாய மொன்றே இங்நாட்டில் இருந்தது. அவர்களது மொழி, நடையுடை பாவனைகளைப் பின்பற்றிய பிரமுகர்களின் தரப்பு அவர்களோடு இணைந்து செயற்பட்டது.

அனகாரிக தர்மபால முன்வைத்த கருத்துக்களைப் பின்பற்றிய வித்தியாலங் கார பௌத்த சமயக் கல்லூரியைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் அன்று டி.எஸ்.சேனா நாயக்க தலைமையில் செயற்பட்ட குழுவினருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினர். அப் போராட்டம் அன்று பிக்குகளின் அரசியல் என்றே அறிமுகமானது. ஆனால், அவர்கள் அன்று கட்சியொன்றை உருவாக்கி அதனூடாக அரசியல் போராட் டங்களை மேற்கொள்ளவில்லை. அன்று அவ்வாறு உருவான அரசியல் செயற்பாடு களே காலப்போக்கில் கட்சி அரசியலாக மாற்றமடைந்தது.

1956இல் இந்நாட்டின் சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் முனைப்பு பெருமளவில் தலைதூக்கியது. தேசிய உணர்வை முன்னிலைப்படுத்தி, தேசியத்தைக் காக்கும் அமைப்புக்கு பௌத்த பிக்குகளே அன்று தலைமையேற்று செயற்பட்டனர். அன்று தொட்டு இன்று வரையிலும் பௌத்த பிக்குகள் பண்டார நாயக்க பரம்பரைக்கு அனுசரணை வழங்கும் விதமாகவே செயற்பட்டுள்ளார்களேயன்றி, எதிர்காலத்தோடு தொடர்புடைய செயற்திட் டங்கள் அவர்களிடம் காணப்படவில்லை. அதன் காரணமாகவே 1956இல் தலைதூக்கிய தீவிர சக்திகளுக்கு அதிக காலம் எடுப்பதற் குள் அந்தப் பலன்கள் கிடைக்கவில்லை.

கட்சி அரசியலிலிருந்து பௌத்த பிக்குகள் நீங்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும். நாட்டின் பொதுவான விவகாரங்களில் தலை யிட்டு தலைமையேற்று - அவற்றைத் தீர்த்து வைப்பது தவறல்ல. அதைவிடுத்து, கட்சிகளில் இணைந்து அல்லது கட்சிகளை உருவாக்கி பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதால் அவர்கள் தமது தகுதிகளை இழக்க நேரிடும். அது இன்று தெளிவாகத் தெரிகிறது.

தமிழில் :சரா

சிறுபிணக்குகள் கொலையில் முடியும் கொடூரம்...!

குடாநாட்டில் சமூகச் சீரழிவுகளுக்கு மாறி மாறி இடம்பெயர்ந்து அவலப்படும் வாழ்க்கை முறைமையும் ஒரு காரணம் என்பதை உளவியலாளர்களும் சமூகவியலாளர்களும் ஏற்றக்கொள்கின்றனர்.

குற்றச்செயல்கள் மலிந்துவரும் குடாநாட்டில் கொலை என்பது சர்வசாதாரண விடயமாகி விட்டது. உயிர்க்கொலை என்பது யுத்தகாலத்தில் மலிந்திருந்தது. அதுவேறு, இப்போது நடக்கும் கொலைகளைப் பார்த்தால் யாழ்ப்பாணச் சமூகம் அதன் பண்பாட்டை பாரம்பரியங்களை, பற்றுறுதியை, மனப்பான்மையைத் தொலைத்துவிட்டதோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

சாதாரண பிணக்குகள், சச்சரவுகள் நீதிமன்றங்களில் வழக்குகளாகக் குவிகின்றன. அது ஒரு புறம் நடக்க, சிறுபிணக்குகளில் கூட பிணங்கள் வீழ்கின்ற ஆபத்தான போக்கு அண்மைக்காலத்தில் தெரிகிறது.

குடும்ப சச்சரவுகள், அயல் சண்டைகள் கோரக் கொலைகளில் போய் முடிகின்ற பேரவலம் இன்று காணப்படுகிறது.

ஒரே காணிக்குள் குடியிருப்போரின் பகைமை கொடூரமான ஒரு கொலையில் முடிந்த சம்பவம் அண்மையில் கொக்குவில் பகுதியில் இடம்பெற்றது.

நாகரிக சமூகம் - வெட்கப்படும் வகையில் - மனித விழுமியங்களைக் காலில் போட்டு மிதித்தது போல கொலை... கொலை... எடுத்ததற்கெல்லாம் கொலை.

ஒருவரது கோபம், வெறுப்பு, ஆதங்கம் கொலையாகப் பரிணமிக்கிறது. அதை நியாயப்படுத்தும் போக்கும் மக்கள் மத்தியில் வளர்கின்றது.

கொக்குவிலில் பெண் ஒருவரை மற்றொரு பெண் ஒரே குத்தில் கொன்று போட்டார். ஒரே காணிக்குள் அருகருகே குடியிருந்த இரு குடும்பங்களின் பகைமை குடும்பப் பெண் ஒருவரின் மார்பில் பெரும் கத்திக் குத்தாக இறங்கியிருக்கிறது.

பளை இயக்கச்சிப் பகுதியில் வசித்து வந்த தங்கவேலின் குடும்பம் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்தது. தங்கவேலின் குடும்பம் அடிக்கடி இடம்பெயர்ந்து அதற்குப் பரீச்சயப்பட்டவர்கள் என்பதால் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் இருப்பதற்கு வந்தபோது கொக்குவில் பொற்பதி வீதியில் வெளிநாடு சென்ற குடும்பம் ஒன்றின் வீடு கிடைத்தது.

இவர்கள் அந்த வீட்டில் குடியேறினர். இவர்கள் இருக்கும் வீட்டின் வளவினுள் அருகே இன்னுமொரு வீடு அமைந்துள்ளது.

அந்த வீட்டில் வடமராட்சியைச் சேர்ந்த ஐயாத்துரை ஜெயமலர் என்ற பெண்ணின் குடும்பம் குடியேறியது.

இந்த இரு குடும்பத்தவர்களுமே வெளிநாட்டில் வசித்துவரும் வீட்டின் உரிமையாளருக்கு உறவினர்களோ அல்லது நண்பர்களோ அல்லர் என்று கூறப்படுகிறது. வீட்டின் உரித்துடையோருக்கு இவர்களை யார் என்பது தெரியாது.

இந்த நிலையில்தான் குடியமர்ந்த இரு குடும்பங்களுக்கு இடையே முரண்பாடு தொடங்கியது.

இரண்டு வீடுகளிலும் எதிர்எதிரே வசித்த குடும்பங்களிடையே காணியைப் பங்கிடுவது, பராமரிப்பது போன்ற விடயங்களில் பிணக்கு உருவாகி மெல்ல வளர்ந்து விஸ்பரூபம் எடுத்தது என்கிறது ஒரு தகவல்.

ஒரு வீட்டில் நான்கு பிள்ளைகளுடன் ஒரு தாய் மட்டுமே வசித்து வந்தார். அவரது கணவர் இறந்து விட்டார். அடுத்த வீட்டில் கணவன் - மனைவி, பிள்ளைகள் அடங்கிய குடும்பம். இவர்கள் இருதரப்பாரும் ஒரே வாயில் ஊடாகவே வீட்டில் இருந்து வெளியே சென்றுவர வேண்டி இருந்தது. இந்த நுழைவாயில் தொடர்பாகவும் இவர்களிடையே பிணக்கு இருந்தது என்று இன்னுமொரு தகவல் கூறுகின்றது. இந்தத் தகவல்கள் சரியா, தவறா என்பது ஒருபுறம் இருக்க, இந்தப் பிணக்குகள் மிகச் சாதாரணமானவை. கொலை விழும் அளவுக்கு பாரிய பிரச்சினைகளே அல்ல என்பதே இங்கு கவனிக்க வேண்டியது.

ஒரு நாள் காலை எதிர்வீட்டுக் குடும்பப் பெண் விளக்குமாற்றினால் முற்றத்தைப் பெருக்கிக் கொண்டு நிற்க, சீறிச் சினந்து காறித் துப்பியவாறு அவரை நெருங்கிய அடுத்த வீட்டுப் பெண் தயாராக தனது கையில் எடுத்து வந்த கிறிஸ் கத்தியை ஒங்கி அடுத்த பெண்ணின் இருதயப் பகுதி மீது ஒரு குத்துக் குத்தி அவரைக் கொன்று வீழத்தியுள்ளார். கொலையுண்ட பெண்ணின் மகள் ஒருவரும் கத்தியால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார்.

கொலையுண்ட பெண்ணும், கொலையாளியான பெண்ணும் நடுத்தர வயதுடைய குடும்பப் பெண்கள். பற்றுப்பாசம், உறவுகள் உடையவர்கள். அப்படி இருக்க, இத்தனை வன்மம் ஏன் எப்படி வந்தது? ஏன் வளர்ந்தது? கொலை புரியும் அளவுக்கு நிலைமை வந்தது ஏன் என்பவற்றுக்கெல்லாம் சமூக ஆய்வாளர்கள் தான் விடை காணவேண்டும்.

மனிதத்தன்மை பெறுமதி இழந்து மனிதன் போகப் பொருள் போன்று அல்லது சடப்பொருளாக மாறுகின்றானா?

பொருளாதார ஆதிக்கம், அதற்கு முகம் கொடுக்க முடியாதவனாக மனிதனை மாற்றி விட்டிருக்கிறதா? பொருளே முதன்மை பெற அதற்கு முன் உயிர் பெறுமதி இழந்து போகிறதா?

குடாநாட்டில் சமூகச் சீரழிவுகளுக்கு மாறி மாறி இடம்பெயர்ந்து அவலப்படும் வாழ்க்கை முறைமையும் ஒரு காரணம் என்பதை உளவியலாளர்களும் சமூகவியலாளர்களும் ஏற்றக்கொள்கின்றனர்.

இந்தக் கொலைக்குக் காரணமான பிணக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு குடும்பங்களுமே இடத்துக்கிடம் இடம்பெயர்ந்து நிரந்தர இருப்பிடம் இன்றி அலையும் நிலையில் உள்ளவர்கள். இருப்பிடம் தொடர்பாக எழுந்த பிணக்குக்கு இடம் பெயர்வும் ஒரு காரணமாகின்றது. பாரம்பரிய வாழ்விடங்களை விட்டுத் தள்ளிச் சென்று - ஒட்டாத ஊரில் ஒட்டாத உறவுகளோடு - வாழ்தல் என்பது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் சோகக் கதையாக உள்ளது.

பிடிப்பு அற்ற வாழ்க்கை பிணக்குகளுக்கு வழிகோலுகிறதா? ஆழமாகச் சிந்திக்கப்படவேண்டிய விடயம்இது.

சமூகநலனின் அக்கறை உடையோரும் சமூகவியலாளர்களும் சிரத்தையுடன் கண்டறிய வேண்டிய பெரும் விவகாரம் இது. எமது சமூகம் எங்கே போகிறது. இது எதில் போய் முடியும் என்று கண்டறியப்பட வேண்டியது முதற்தேவை.

களத்திலிருந்து
பிரதீபன்

அறிந்து கொள்ளுங்கள்!

விசர்நாய்க்கடி/நீர்வெறுப்புநோய் (RABIES)

விசர் நாய்க்கடி அல்லது நீர்வெறுப்பு நோய் என்னும் நோயானது பலகாலமாக எம்மிடையே அறியப்பட்டு இருந்தாலும் மருத்துவ வளர்ச்சியடைந்த இக்காலத்தில் கூட இது ஒரு பிரச்சினையாகவும் பயமுறுத்தும் நோயாகவும் காணப்படுகிறது. ஏனெனில், இந்த நோயால் பீடிக்கப்பட்டவர் இறப்பதென்பது கிட்டத்தட்ட 100% உறுதி என்கின்றன மருத்துவ ஆய்வுகள். எனவே, இந்நோயை வரவிடாமல் தடுப்பதே இதிலிருந்து தப்புவதற்கான ஒரே வழியாகும். ஆனால், இந்நோய் பற்றிய முழுமையான அறிவின்மையாலும் அலட்சியப் போக்காலும் இன்றும் பலர் விசர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டு இறக்கின்றார்கள். உலகளாவிய ரீதியில் வருடந்தோறும் அண்ணளவாக 35 ஆயிரம் - 50ஆயிரம் வரையானோர் இந்த நோயினால் இறக்கின்றார்கள் என உலக சுகாதார நிறுவனம் கணிப்பிட்டுள்ளது. உலகை உலுப்பும் இந்தநோயின் கோரப் பிடியிலிருந்து குடாநாடும் கூடத் தப்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நோய்பரவும் முறை:

விசர் நாய்க் கடியானது விலங்குகளிலிருந்து மனிதனுக்குத் தொற்றும் ஒரு நோயாகும். இது றேபிஸ் (Rabies) என்ற வைரசினால் ஏற்படுகின்றது. இந்த rabies வைரஸ் நாய், பூனை, வெளவால் மற்றும் நரி, ஓநாய் போன்ற காட்டு விலங்குகளில் தொற்றுவதனால் இவற்றின் உமிழ்நீரில் இவ் வைரஸ் காணப்படும்.

இவ்விலங்குகள் மனிதனுக்குக் கடிக்கும் போது உமிழ்நீரினூடாக வைரஸ் உடலினுள் செல்கின்றது. எம்மிடையே பெரும்பாலும் நாய் கடிப்பதனாலேயே இந் நோய் உண்டாவதால் விசர் நாய்க்கடி என்று கூறப்பட்டாலும் மேற்கூறப்பட்ட பல விலங்குகளும் கடிப்பதால் இந்த நோய் உண்டாகலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேலும் உடலிலுள்ள காயங்களில் நாய், பூனை ஆகியவற்றின் உமிழ் நீர் படுவதாலும் இக்கிருமி உடலினுள் பரவலாம். உடலினுள் சென்ற வைரஸ் நரம்புகளினூடாக மூளைக்குச் சென்று அங்கே பல்கிப் பெருகுகின்றன. பின் நரம்புகளின் வழியே கீழிறங்கி, உடலின் பல பாகங்களுக்கும் செல்கின்றன. அப்போது உமிழ்நீர்ச் சுரப்பியிலும் தோல், சிறுநீரகம், நுரையீரல் போன்றவற்றிலும் வைரஸ் காணப்படலாம். றேபிஸ் வைரஸ் மனிதனில் இருந்து மனிதனுக்கு தொற்றுவது மிகக் குறைவாயினும் விழிவெண்படல மாற்றீடு மூலம் பரவ முடியும். இவ்வைரஸ் ஆனது குருதியில் கலப்பதில்லை. ஆதலால் இதற்கு நோய் எதிர்ப்பு சக்தி உருவாவதில்லை.

நோயரும்பு காலம் :

உடலினுள் கிருமி உட்சென்றதிலிருந்து நோய்க்கான குணங்குறிகள் தோன்றும் வரையான காலமே நோயரும்பு காலம் எனப்படும். விசர் நாய்க்கடியின் நோயரும்பு காலம் சராசரியாக 20-90 நாள்களாகும். பெரும்பாலானோருக்கு நாய் கடித்த ஒரு வருடத்திற்குள்ளேயே நோய் ஏற்பட்டுவிட்டாலும் சில வேளைகளில் பல வருடங்களின் பின்னும் ஏற்படலாம்.

கே.கலாநிதி, 28ஆம் அணி

நோயரும்பு காலமானது மூளைக்கும் நாய் கடித்த இடத்திற்கும் இடையிலான தூரத்திலும் கடித்த இடத்திலுள்ள நரம்புகளின் செறிவிலும் தங்கியுள்ளது. மூளைக்கு அண்மையிலுள்ள இடத்தில் கடிக்கும் போதும் (உ+ம்:- தலை, முகம், மார்பு, கழுத்து) நரம்புகளின் செறிவு கூடிய இடத்தில் கடிக்கும்போது (உ+ம் :- கைவிரல், கால்விரல், புறத்தே காணப்படும் இனப்பெருக்க உறுப்புகள்) குறைந்த காலத்திலும் மூளையிலிருந்து சேய்மையில் கடிக்கும்போது பெரும்பாலும் நீண்டகாலத்தின் பின்னும் நோய் ஏற்படும்.

(VIIபக்கம் பார்க்க)

சீதனக் கலாசாரம் எழுதப்படாத சட்டமா?

21ஆம் நூற்றாண்டில் வெற்றி நடை போடுகின்றோம். நவீன யுகத்திற்கேற்ப நம்மையும் நம் கலாசாரத்தையும் மாற்றிக்கொண்டு வருகின்றோம்.

காலத்தின் தேவைக்கேற்ப பெண்கள் செய்தொழிலில் மேன்மையான ஓர் இடத்தைப் பிடித்துள்ளார்கள். அதற்கேற்ப தம் வாழ்வியல் நடைமுறைகளையும் மாற்றிக் கொண்டுள்ளார்கள். இது வரவேற்கத்தக்க விடயமே!

ஆனால், இன்று நம் [illegible]ப்பாணத்தில் புதிதாக ஓர் கலாசாரம் தோன்றியுள்ளது. அக் கலாசாரத்தால் நம்மூரில் பல யுவதிகள் வேதனைக் கடலில் தத்தளிக்கின்றார்கள்.

என்ன அது? எது அந்தப் புதுக்கலாசாரம்? அக் கலாசாரத் தால் ஏன் யுவதிகள் வேதனையை அனுபவிக்க வேண்டும் என்பதுதானே கேள்வி.

இன்று குடாநாட்டில் ஒரு நோயாகப் பரவிவரும் கலாசாரம் 'சீதனக்' கலாசாரம்.

ஆரம்ப காலங்களிலிருந்து பெண்ணுக்குத் திருமணம் செய்து வைக்கும்போது சீதனம் வழங்குவது நம்மூரில் நடைமுறையிலிருந்த விடயம். ஆனால், இன்று அது உச்சத்தில் நிற்கின்றது.

இருப்பவர்கள் கொடுப்பார்கள். வாங்குபவர்கள் வாங்குவார்கள். இங்கு இல்லாதாரின் நிலை என்ன?

ஆரம்பத்தில் சிறியதோர் தொகையைப் பெண்ணுக்குச் சீதனமாக வழங்கினார்கள். அதை மணமகன் வீட்டாரும் மகிழ்வுடன் வாங்கிக் கொண்டார்கள்.

ஆனால், இன்று அத்தொகை இருமடங்காகி, 10 மடங்காகி, 100 மடங்காகவே ஆகிவிட்டது.

சீதனம் வாங்காது திருமணம் செய்வது ஆணுக்கு இழுக்கு என எண்ணும் நிலைகூட இப்பொழுது எமது பிரதேசத்தில் உள்ளது.

தாங்கள் புத்திசாலிகள் என எண்ணும் சில ஆண்கள் [இங்கு குறிப்பிடத்தக்கது சில ஆண்கள்] சொல்வார்கள். 'நான் சீதனமே கேட்கமாட்டேன். ஆனால், அவர்கள் தங்கள் பெண்ணுக்குச் செய்வதை வேண்டாம் என்று சொல்லமாட்டேன்' என்று. இவர்களின் நோக்கம் மற்றவர்கள் தங்களை நல்லவர்கள் என நினைக்கவேண்டும் என்பதே. உதட்டளவில் இவர்கள் இவ்வாறு சொன்னாலும் அவர்களுடைய மனதில் சீதனம் வேண்டவேண்டும் என்ற எண்ணம் இருந்து கொண்டே இருக்கும்.

ஒரு வகையில் பார்த்தால் மேலே சொல்லப்பட்ட வகை ஆண்கள் பரவாயில்லை என்றே சொல்லலாம். ஏனெனில், சிலர் எந்த விதத் தயக்கமும் இன்றிப் பல இலட்சங்களைச் சீதனமாகத் தரவேண்டும் என நேரடியாகவே கேட்பதை இன்று காணலாம்.

வசதிபடைத்த பெற்றோர் தமது பெண்களுக்கு லட்சக் கணக்கில் சீதனத்தை - வாரியிறைக்கின்றார்கள் என்றே சொல்லலாம் - கொடுக்கின்றார்கள்.

இதைத் தவறென்று சொல்லமுடியாதுதான். அவர்களிடம் இருக்கின்றது, கொடுக்கின்றார்கள். ஆனால், சீதனம் என்ற பெயரில் கொடுப்பதுதான் இங்கு தவறாகின்றது.

பக்கத்து வீட்டுக் காமாட்சியின் [கற்பனைப் பெயர்] மகனுக்கு இத்தனை இலட்சம் சீதனமாக வாங்கியிருக்கினம். என் மகன் என்ன காமாட்சியின் மகனுக்குச் சளைத்தவனா? நான் என்ர மகனுக்கு அவன் வாங்கியதைவிடக் கூடுதலாகவே சீதனம் வாங்குவேன் என்ற தோரணை இன்று நம்மிடையே உள்ள பெற்றோரிடையே உள்ளது.

இதனால் சீதனம் கொடுப்பதற்கு சற்றுக்கூட வசதியில்லாத பெண்களின் திருமண வாழ்வு கேள்விக்குறியாகி நிற்கின்றது.

இவ்வாறு, இருப்பவர்கள் கொடுத்துப் பழக்கப்படுத்தியது இன்று இல்லாதவர்களிடமும் மணமகன் வீட்டார் சீதனத்தை எதிர்பார்த்து நிற்கும் நிலையை உருவாக்கிவிட்டது.

அண்மையில் கல்யாணத்தரகரும் தூரத்து உறவினருமாகிய ஒருவரைச் சந்தித்தபோது அவர் கூறிய விடயம் மலைப்பையும் வேதனையையும் உருவாக்கியது.

'இப்பொழுது மணமகன்களுக்கு நல்ல கிராக்கி. மணமகனுக்கு எத்தனை வயதானாலும் பரவாயில்லை. மணமகளின் வயதிற்கேற்ப இலட்சத்தில் சீதனம் வேண்டும். அப்படித்தான் கேட்கிறார்கள்' என்று கூறினார்.

இவ்வாறு நம்மூரில் தலைவிரித்தாடும் சீதனக் கலாசாரத்தால் இன்னும் சில காலத்தில் அதிகளவான முதிர்கன்னிகளைக் கொண்ட பிரதேசம் என்ற பெருமையை எமது பிரதேசம் தட்டிக்கொள்ளும்.

சம்யுக்தா

எழுதப்படாத சட்டமாக 'சீதனம்' உருவாகும் நாள் வெகுவிரைவில் வரப்போகின்றது என்றால் அது மிகையில்லை.

கனவுகளோடு...

ஓ... கார் மேகமே
கொஞ்சம் நில்!
கனவுக் கடையில்
அடகு வைத்தாயா!
உன் எண்ணங்களை?
கண்ணீர்ப் பூக்களெனும்
கவிதைத் தொகுப்பை
நெஞ்சில்
நினைத்தாயா?
நிலா மகளின்
நிச்சயதார்த்தம்
நியமனம்
பெறவில்லையா?
உலாவரும்
நிலாவுக்கு
நியமனம் எதற்கு?
கனாக் காலமான
கன்னியின்
திருமணக் காலம்?
வட்டிக்குவேண்டியாவது
'வரன்' தர
முன் யாரும்
வரவில்லையா?
சட்டி - பெட்டி கடையா
கல்யாணப் பெண் வீடு
எல்லோரும்
தட்டிப் பார்க்கிறார்கள்!
ஓ....! கார் மேகமே
கொஞ்சம் நில்!
நீ கண் கலங்கும்
காரணம் தான்
என்ன?
விதி யென்று
ஏதுமில்லை!
விளை நிலம்
விம்முகின்றதா?
நிலாப் பெண்ணே!
கீற்று முகிலின்
மத்தியில்
முகம் காட்டாதே!
ஆயிரம் நீரிறைக்கும்
இயந்திரத்தை வைத்து
நீரிறைத்தாலும்
கடல் நீர் வற்றி விடுமா?
நீ அழுது
கமை இறங்கிவிடுமா?

றஜீபன் தர்மினி

அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு அனைவருமே ஆசைப்படுகின்றோம். அதற்கு நாம் அவசியம் நாளாந்தம் செய்ய வேண்டியது, உடற்பயிற்சி. உடற்பயிற்சி என்றதுமே நம்மில் பலருக்கு மிகவும் சிரமத்துடன் செய்யும் உடற்பயிற்சிகள் தான் நினைவு வரும்.

மிக இலகுவானதும் இன்பகரமானதுமான உடற்பயிற்சி ஒன்றுண்டு என்பதையும், அது மிகுந்த பலனைத் தரும் என்பதையும் நாம் மறந்து விடுகின்றோம்.

அதிகாலையில்

அழகுக்கு ஆரோக்கியத்துடன் நடைப்பயிற்சி

எழுந்து ஈரமான புல்வெளியில் சுத்தமான காற்றை சுவாசித்தபடி தினமும் நடந்தாலே போதும். நீண்டநாள் ஆரோக்கியத்துடன் வாழ முடியும்.

எவ்வளவு தூரம், எப்போது, எங்கே எவ்வளவு நேரம் நடக்க போகின்றோம் என்பதை முதலிலேயே தீர்மானியுங்கள். நடக்க ஆரம்பிக்கும் (பயிற்சிக்காக) போது தற்போது நாம் வழமையாக நடக்கும் முறையைக் கையாளாதீர்கள். பயிற்சியின் போது முதலில் சற்று மெதுவாக நடக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக நடையின் வேகத்தைக் கூட்டலாம். அதேபோன்று பயிற்சி தொடங்கிய நாளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக நடக்கும் நேரத்தை அதிகப்படுத்த வேண்டும். அதிக பட்சம் அரைமணி நேரமாவது நடக்க வேண்டும்.

நடக்கும்போது நன்றாக நிமிர்ந்தபடி, தோள்களை இலகுவாக வைத்து கைகளை இயல்பாக ஆட்டியபடி நடக்கலாம். நடைப்பயிற்சி செய்வதற்குச் சரியான நேரம் அதிகாலை. சரியான இடம் புல்வெளி, பூங்கா, கடற்கரை போன்றவை. ஆயினும், உங்கள் வசதிக்கேற்பவும் நீங்கள் செயற்படலாம்.

குழந்தைகளின் மனதில் நல்லவற்றை விதைப்போம்

சின்னஞ்சிறு மழலைகள் தானே. அவர்களுக்கு என்ன தெரியும் என்று தான் நம்மில் பலர் நினைக்கின்றோம். ஆனால், பெரியவர்களாகிய நம்மை விட சிறு குழந்தைகளின் மனதில் எந்த ஒரு விடயமும் ஆழமாகப் பதிந்து விடும்.

சந்தோசமான விடயமோ, துயரமான விடயமோ சட்டென குழந்தைகளின் உள் மனதைத் தாக்கும். அது அவர்களின் முதுமை வரை தாக்கத்தை உணர்த்தும்.

பெரியவர்களுக்கான உளவியல் செயலமர்வில் அதிகமானவர்கள் வெளிப்படுத்தும் பாதிப்பை உண்டாக்கிய விடயங்கள் அனைத்துமே அவர்களின் சிறு பராயத்தில் ஏற்பட்டதாகவே இருக்கும்.

'பெற்றோர் வீட்டில் பேசுவதைத்தான் பிள்ளைகள் தெருவில் பேசுவார்கள்' என்பது சான்றோர் வாக்கு. (ஒரு சில பிள்ளைகள் விதிவிலக்காகவும் இருக்கலாம்) எனவே, நாம் வீட்டில் எவ்வாறு வாழ்கின்றோமோ - செயற்படுகின்றோமோ அவ்வாறே நமது குழந்தைகளும் செயற்படும் என்பதை உணரவேண்டும்.

ஏனெனில், குழந்தைப் பருவம் என்பது கற்றுக்கொள்ளும் பருவம். அப்பருவத்தில் நன்மை, தீமையைப் பகுத்தறியத் தெரியாது. தான் சார்ந்துள்ளோர் - தனக்கு விருப்பமானவர்கள் - எதைச் செய்கின்றார்களோ - அதுதான் சரி என நினைக்கும் பக்குவமே அவர்களிடத்தில் இருக்கும்.

பிள்ளைகள் முன் பெற்றோர் சண்டை பிடிப்பது அந்தப் பிள்ளையின் மனதைப் பெரிதும் தாக்கும். இவ்வாறு சண்டைபோடும் பெற்றோரின் பிள்ளைகள் ஒன்றில் தமக்குள் ஒடுங்கிப் போய் இருப்பார்கள் அல்லது பெரியவர்களை போல் எல்லாவிடயத்திலும் மூக்கை நுழைந்து சண்டை போடுவார்கள். இது அவர்களின் வளர் பருவத்தில் பெரும் பாதிப்பை உண்டு பண்ணும். பெற்றோர் எந்த வகையான பிரச்சினையாக இருந்தாலும் பிள்ளைகள் முன் பேசுவதையோ சண்டையிடுவதையோ வழக்கமாகக் கொள்ளாதீர்கள். எந்த விடயமானாலும் (தேவையற்றவை) பிள்ளைகள் முன் பேசாதீர்கள். சில பெற்றோர் தமது சிறு பிள்ளைகளையும் அருகில் வைத்துக் கொண்டு ஊர்வம்பு கதைப்பார்கள். இதைக் கண்ணுறும் பிள்ளைகள் அவ்வாறு கதைப்பது தான் சரி என நினைத்து தானும் அவ்வாறு பேசப் பழகும். அதைவிட எங்கள் அம்மா அவரைப் பற்றி இப்படிச் சொன்னார் என ஏனைய பிள்ளைகளுக்குச் சொல்லும். அவ்விடயம் சம்பந்தப்பட்டவரின் காதைச் சென்றடைந்ததும் அது அயலவர்களுக்கிடையிலான பிரச்சினையாக உருவெடுக்கின்றது.

எனவே, சிறு பிள்ளைகள் விடயத்தில் அவதானம் தேவை.

தீபா

அம்மணியின் பக்கம் அடிக்கிறது காற்று !



தமிழகச்சட்டசபைத் தேர்தல் களம் இப்போது நாளுக்கு நாள் மணிக்கு மணி சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது.

அரசியல் கட்சிகளின் திடீர்த் தாவல்கள் களத்தைப் படு சூடாக வைத்துள்ளன. அம்மாவின் கூட்டணியில் கூட்டுச் சேர்ந்தவர்கள் ஒரு புறம் ஐயாவிற்கு டாட்டா காட்டிப்போட்டுப் போனவர்கள் இன்னொருபுறம் என சென்னை செஞ்சூடாக இருக்கின்றது.

இதில் அம்மணியின் பக்கம்தான் அதிக காற்று வீசு கின்றது போலத் தென்படுகின்றது. அவர்பக்கம் தான் எல்லோரும் தலை சாய்க்கின்றார்கள். "கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற யேசுபிரானின் வாசகத்தைப் போல ஐயா யார் யாருக்கு எதையெல்லாம் கொடுக்க மறுக்கிறாரோ

அவர்களுக்குக் கேட்டதை விட கூடுதலாக வழங்கி வந்தோரை வரவேற்கின்றார். தஞ்சமென்று போன வர்களுக்குப் பஞ்சமின்றித் தொகுதிகளைப் பகிர்ந்து கேட்டபடி கொடுக்கிறார். இதனால் பலர் தமது பழைய கசப்பான அனுபவங்களை மறந்து அவர்கள் கால டியில் சரண்புகுந்துள்ளார்கள்.

"கொடுத்ததெல்லாம் கொடுத்தேன் அது யாருக்காகக் கொடுத்தேன்? ஒருத்தருக்கா கொடுத்தேன் இல்லை ஊருக்காகக் கொடுத்தேன்" என்று மக்கள் திலகம் ஒரு படத்தில் பாடி நடித்துள்ளார்.

அதுபோன்று "கேட்ட தொகுதி யெல்லாம் கொடுக்கின் றேன். வந்தவரை அவர் எதிரியாயினும், நண்பனாயி னும் சரி வரவேற்கின்றேன். இதையெல்லாம் ஒருத்த ருக்காகவா செய்கின்றேன். இல்லை என் அரசியல் வாழ்வு முடிந்து விடக்கூடாது என்பதற்காக எல்லோ ருக்கும் செய்கின்றேன்." என்ற தோரணையில்தான் அம்மணியின் குடுமி ஆடுகின்றது. இது தெரியாமல் அவரின் மகுடிக்கு மயங்கிப் பல அரசியல்வாதிகள் ஆட்டம் போடுகிறார்கள்.

"நக்கிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன" என்பது போல அரசியலின் பதவிகளுக்காகப் பறந்த டித்துத் திரிபவர்களுக்கு யாருடைய கட்சியென்ன, கொள்கையென்ன என்று தெரியாமல் மதிமயங்கிப் போயுள்ளனரே!

கடைசியில் அம்மணியிடம் மண்டியிட்டுப் போன வர்தான் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ. சிறையில் பூத்த மலர் இன்று ஜெயாவீட்டுத் தரையில் பூத்துக்குலுங்கத் தொடங்கிவிட்டது.

பாவம் வை.கோ! சூடுகண்ட பூனை அடுப்பங் கரையை நாடாது என்று தான் சொன்னார்கள். ஆனால் இந்தப் பூனை அடுப்புக்குள்ளே போய் இறங்கி நிற் கின்றது. அதை நினைக்கும் போது கவலைப்படுவதா? அதன் வீரத்தையும் துணிவையும் பாராட்டுவதா? என்கின்ற கேள்வியைத் தவிர்க்கவே முடியாதுள்ளது.

"யார் குற்றினாலும் அரிசியானால் சரி" என்ற நிலைப்பாட்டில் தான் அம்மணி இருக்கின்றார்.அந்தப் பணியில் வை.கோ வும் இணைந்திருக்கின்றார்.

கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து "ம.தி.மு.க வுக்கு 34 தொகுதிகளைத் தாருங்க ளேன்!" என்று கேட்டுள்ளார். ஐயாவின் வார்த்தைகள் வெளியே வரவில்லை. மௌன மாக இருந்து விட்டார்.

எஸ்.கவிதரன்

சரி! அவருக்கேன் சங்கடத்தைக் கொடுப்பான் என்று நினைத்துக் கொஞ்சம் கீழே இறங்கி 25 தொகுதிகளையாவது தாருங்கள் என்று ம.தி.மு.க.வினர் கேட்டுள்ளனர். ஐயாவின் வாய் அசைந்தது. ஒருமா திரி 23 தொகுதிகளைத் தருவதாக ஒப்புக் கொண் டார். இதை ஏற்றுக்கொண்டு மனத்திருப்தியுடன் திரும்பினர் ம.தி.மு.கவினர். இது இப்படி இருக்கையில் திருச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் மத்தியில் தோன்றிய ஐயா கருணாநிதி வை.கோவுக்கு கொடுத்த வாக்குறுதியை மறந்து போனார். ம.தி. மு.க விற்கு 22 தொகுதிகளைத் தருவேன் என்று பட்டென்று கூறிவிட்டார்.

"இது தான் முடியும். விரும்பினால் கூட்டணி இல்லை யேல் வெளியேறலாம்." என்ற சாரப்படக் கூறினார்.

வை.கோவைப் பொறுத்தவரை ஜெயாவினால் மிகவும் நொந்து போனவர் அவர். அ.தி.மு.க வில் போய் சேர்ந்துவிடமாட்டார் என்ற ஒருவிதத் துணிச்சலு டனும்-நம்பிக்கையுடனும்தான் அப்படிச் சொன்னாரோ? என்னவோ?

ஆனால் பழையதை மறக்கும் பக்குவம் வை.கோவுக்கு உண்டு என்பதை மறந்து விட்டார் போலும் கலை ஞர். இப்படித் திடீரென அ.தி.மு.கவில் போய் ஒட் டிக்கொள்வார் என்று அவர் கனவிலும் நினைக்க வில்லை.

விளைவு, வை.கோ கேட்டதெல்லாம் அம்மணி கொ டுத்துள்ளாராம்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்ன யம் செய்து விடல்" என்ற அமுத வாக்கை வைகோ நன்றாகப் படித்துள்ளார் போலும் அதனால்தான் இந்தக் கதியானாரோ என்னவோ?

யார் இந்த வை.கோ?

சாதாரணமான ஆளா? ஈழத் தமிழரின் இன்னல்களைக் கண்டு கொதித்தெழுந்து தான் தோன்றும்-சந்தர்ப்பம் கிடைக்கும் அரங்குகளில் எல்லாம் ஈழத்தமிழரின் விடுதலைப்பாதை சரியானது அதற்கு எந்தத் தீயசக்தி கள் தடைபோட நினைத்தாலும் - மூடிவிட நினைத் தாலும் தமிழகத்தில் உள்ள தமிழர்கள் விடமாட்டார் கள் என்று வீரமுழக்கம் முழங்கி வந்தார்.

அண்மையில் கூட தமிழகத்தில் ஈழத்தமிழர் பாது காப்பு மாநாடுகளை பரவலாக நடத்தியதுடன் ஐ.நா சபையில் வெகுவிரைவில் தமிழீழத் தேசியக் கொடி பறக்கும் என்று கூட சவால் விட்டவர் வைகோ

இவர் ஈழத்தமிழர்களின் விடுதலையையும், அதனை முன்னெடுக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளையும் ஆதரித்துப் பேசியமைக் காக பொடா சட்டத்தின் கீழ் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

அந்தப் பொடா சட்டத்தின் பிரகாரம் வைகோவை சிறைக்குள் கம்பி எண்ண வைத்தவர் வேறு யாரு மல்லர். அம்மணிதான். அதையெல்லாம் மறந்து போய் அவருடன் கூட்டணி சேர்ந்துள்ளாரே வைகோ!

தமிழகத்தில் ஒரு நடிகராக இருந்து மக்கள் வாழ்விற் காக அவர்களின் நிம்மதியான-சுதந்திரமான வாழ் வுக்காகப் பாடுபட்டவர் எம்.ஜீ.ஆர். அவர் நடிக னாக இருந்தபோது கூட மக்களோடு மக்களாக நின்று பல அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சேவையாளன். வெறுமனே நடிகராக அ.தி.மு.க என்ற கட்சியை அமைத்து அந்தக் கட்சிக்காக அய ராது-அல்லும் பகலும் உழைத்து மக்கள் மத்தியில் நீங்காத இடம் பிடித்து தமிழகத்தில் முதலமைச்சர் என்ற ஆசனத்தைப் படிப்படியாக எட்டிப் பிடித்தார் எம்.ஜீ.ஆர். முதலமைச்சர் பதவியில் இருந்து பத்து வருடங்கள் தமிழக மக்களின் நலனுக்காப் பாடுபட்ட வர்.

அது மட்டுமல்ல. ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டதையும்-அதன் நியாயத்தன்மையையும் - மனப்பூர்வமாக அங்கீகரித்தார். தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கும் அவருக்கும் இடை யில் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பது வர லாற்று உண்மை.

ஆனால் அவருடைய கட்சியில் இருந்து எம்.ஜீ.ஆரின் பெயரைச் சொல்லி ஆட்சியைப் பிடித்தவர் ஜெயலலிதா. இருப்பினும் ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் கடும்போக்கான செயற்பாடுகளை இறுக்கமாகக் கடைப்பிடித்து வருகின்றார் அவர்.

"விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள், அவர்களை கூண்டோடு அழித்தே தீருவேன்"-என மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அலைந்தவர் தான் அம்மணி.

ஈழத்தமிழருக்கு ஆதரவாகப் பேசியவர்களை யெல்லாம் பொடா சட்டத்தின் பிரகாரம் உள்ளே பிடித்துப் போட்டவர் தான் அவர்.

இப்படி ஒரு கடுமையான போக்கினைக் கடைப்பிடித்த ஜெயா, அண்மைக்காலமாக ஈழத்தமி ழர் விவகாரத்தில் எதுவும் பேசுவதில்லை. மிக அமைதியாக நல்லபிள்ளைபோலச் செயற்படுகின்றார்.

"சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்பது போல அம் மணியின் மௌனம் எதைக்குறிவைத்திருக்கின்றதென் றால் சட்டசபைத் தேர்தலைத்தான். எது எவ்வாறாயி னும், எதையிழந்தேனும் ஆட்சியைப் பிடித்தே தீர வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார்.

இத்தகைய நிலையில்தான் வை.கோ அம்மணியின் பக் கம் சாய்ந்துள்ளார். இருப்பினும், ஈழத்தமிழர் விவகாரத் தில் தன்னுடைய நிலைப்பாடு என்றைக்கும் மாறாது என்று அறிக்கை கூட வெளியிட்டுள்ளார் வைகோ.

இதை இப்போது அம்மணி ஏற்றுக் கொண்டு கேட் டும் கேளாதது போல இருந்தாலும், ஆட்சியைப் பிடித் ததும் என்ன செய்யப் போகின்றார் என்பதில் தான் உள்ளது மிகுதி விடயம்.

பெண்ணே!.....- உன் ஆளுமையுடன் நீ போராடு....!

பெண்ணே!
உங்கள் உயர்வு வேண்டி
நீங்கள் தலையெடுக்கையில் ... நாம்
உங்களை ஆக்கிரமிக்கும் கணங்களில்...
எம் மீது உங்கள் அனலைக் கொட்டுவீர்கள்...
ஆத்திரம் கொண்ட நாம்
கொற்றவை...
அடங்காப்பிடாரி...
பத்திரகாளி .... நீலி.... சூலி....
ஏன்?
நாயே... பேயே... பரதேசி...
என்றெல்லாம்....
கொதியாய் குவித்தோம்
உங்கள் கொடூரக் கோலம் – எம்மைச்
சுட்டபோதும் – உங்களின்
கெட்டித்தனமான ஆளுமைக்ளின்
வெளிப்பாடென புரியாது விலத்தி நின்றே
எமக்கு உங்கள் ஆளுமைகள் மீது
பொறாமைகள் அதிகம்...
போட்டி... அதிகாரம் அதிகம்...
ஏனோ?.... எம்மை அகழ்ந்து விடுவீர்களோ...
என்ற பயமும் வேறு...
அதனால்தான் நீங்கள் எமக்கு தந்த இடத்தை
மீண்டும் உங்களிடம் கையளிக்க
முடியாத நிலையுண்டு...
எமது அகங்காரம் ..... இது தான்...
ஆயினும், போராடுங்கள்...
உங்கள் ஆளுமைகள் விடுதலை பெறும்வரை ...
உழையுங்கள்... எம்மை
பலமாக வெற்றி கொள்வீர்கள்!

- பி.யாழவள்

'5-எஸ்' நிர்வாக முறை ஏற்படுத்தும் சுயகட்டுப்பாடு

பாடசாலைகள் உட்பட அரசாங்க நிறுவனங்களில் வினைத்திறன் மந்தகதி அடைந்திருப்பது பற்றிய குற்றச்சாட்டுகள் பரவலாகக் கூறப்படுகின்றன. ஒரு நிறுவனத்தின் வினைத்திறன் அதன் பணியாளர்களின் திருப்தியில்தான் தங்கி உள்ளது. பணியாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான - திருப்திகரமான - சூழலை உருவாக்கிக் கொடுப்பது அந்த நிறுவனத்தை முகாமை செய்வோரின் முதற்பணி. இன்று அரச துறையில் அருகி வருகின்ற சிறப்பான முகாமைத்துவத்தை தூக்கி நிறுத்தக் கூடிய ஆலோசனைகளை உள்ளடக்கியது இந்தக் கட்டுரை. கல்வி நிர்வாகத்தில் சேவை மூப்பும் பட்டறிவும் நிறைந்தவர் கட்டுரையாளர். அவர் கூறும் ஆலோசனைகள் சூரியகாந்தியில் தொடராக வெளிவருகின்றன.

'5-எஸ்' (5 - S) முறைகளிலும் உள்ள எல்லாக் கட்டங்களையும் பாடசாலைகளிலோ அல்லது எதாவது ஒரு திணைக்களத்திலோ தொடர்ச்சியாகச் செயற்படுத்து வதனூடாக பயிற்சியும் ஒழுக்க நெறியும் இயல்பாகவே வளர்ச்சி பெற்று வருவதால், மிகச் சிறந்த வினைத்திறனுள்ள முகாமைத்துவத்தைப் பேணமுடியும். இங்கு ஒரு சுய கட்டுப்பாடு தானாகவே ஏற்படுகின்றது.

இந்த நிறுவனம் நடத்தும் நுட்பமான '5-எஸ்' முறையில் உள்ள ஒவ்வொரு கட்டமும் சமூக மயப்படுத்தும் பொழுதே அதன் வெற்றியைப் பிரத்தியட்சமாக அறிந்துகொள்ள முடியும்.

இதற்குப் பின்வரும் நடைமுறைகளைக் கையாளுவது 5-எஸ் முறையே. கிராமிய மட்டத்திற்குக் கூடக் கொண்டு செல்ல முடியும்.

✸ '5-எஸ்' முறையின் சிறப்பை, நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாது, அனைத்துத் தரப்பினருக்கும் சொல்லிக் கொடுத்து அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும்.

❑ உ+ம் - மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், பெற்றோர் என ஒவ்வொருவரும் இவற்றை முறையாக அலுவலகத்திலும் வெளியிலும் வீட்டிலும் கடைப்பிடிக்க வேண்டும்.

✸ '5- எஸ்' முறைக்குரிய செயற்பாடு சார்ந்த புகைப் படங்களை எல்லோரது பார்வையிலும் தெரியக் கூடியதாக வைத்தல் வேண்டும். இதனால் இம்முறைகளைக் கடைப்பிடிப்பது தொடர்பாக ஆர்வம் அதிகரிக்கும்.

✸ '5-எஸ்' பற்றிய நியம மதிப்பீட்டைச் சீராகவும் ஒழுங்காகவும் செயற்படுத்தல் வேண்டும்.

✸ எல்லோரும் பங்கு கொள்ளக் கூடிய வகையில் '5-எஸ்' கலாசாரத்தைப் பாடசாலையினுள் ஏற்படுத்துதல் -

✸ பாடசாலையில் மாணவர்களுக்கிடையேயும் ஆசிரியர்களுக்கிடையேயும் பிரிவு ரீதியாக '5-எஸ்' தொடர்பான போட்டிகளையும் கண்காட்சிகளையும் நடத்துவதன் மூலம் அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

❑ உ+ம் : '5 -எஸ்' முறைகளை வெளிப்படுத்தும் வகையிலான சுவரொட்டிகள், புகைப்பட்ங்கள், பாதாதைகள், நாடகப்போட்டிகள் என்பவற்றைப் பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்தல்.

✸ '5-எஸ்' முறையைத் தமது அன்றாட வாழ்வில் செயற்படுத்தி ஒழுகுபவர்களுக்குப் பரிசளிப்பதற்கான வேலைத் திட்டத்தைப் பாடசாலை மட்டத்தில் ஆரம்பித்தல்.

ஏனெனில், பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடையே '5-எஸ்' நுட்ப முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஊக்குவிப்புக்களையும் விழிப்புணர்வையும் வழங்குவதனூடாக அவை அவர்களின் வீடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டுப் பெற்றோர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களிடையேயும் செயற்படுத்தப்படும். இது ஒரு நர்ட்டின் நிர்வாக மேம்பாட்டிற்கும் வழி கோலும்.

✸ '5-எஸ்' முறை எப்போதும் செய்ய வேண்டிய வேலை என ஆக்கிக் கொள்வதன் மூலம், அதனால் ஏற்படும் அனுகூலங்களை விரைவில் அடைந்து கொள்ளலாம்.

இவ்வாறு ஒரு நிறுவனத்தைச் சிறப்பாக நிர்வகிக்க வழிகாட்டும் இந்த '5-எஸ்' முறையிலான 'நிறுவனம் நடத்தும் நுட்பங்கள்' என்ற முறையானது, இன்று வளர்ச்சியடைந்த பல நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது ஒன்றே இதன் சிறப்பைப் புலப்படுத்துகின்றது.

'5- எஸ்' முறைகளைச் செயற்படுத்துவதனூடாகப் பின்வரும் சாதகமான விளைவுகளை ஒரு நிறுவனம் அல்லது பாடசாலை பெற்றுக் கொள்ளும்:-

1. நிறுவனத்தினுள் அல்லது குடும்பத்தினுள் ஏற்படும் முரண்பாடுகளும் கருத்து வேறுபாடுகளும் நீக்கப்படும்.

2. உடல், உள ரீதியாக மனோரம்மியமான சூழலையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்த முடியும்.

3. பண்புசார் விருத்திக்கான மனங் கவரக்கூடிய ஒரு சூழல் உருவாகும்.

4. தொழில்சார் ஒழுக்கவியலைப் பேணுதல்.

5. தன்னம்பிக்கையை வளர்த்தெடுத்தல்.

6. ஊழியர்களை ஊக்கப்படுத்துதல்.

7. அலுவலகத்தில் அல்லது பாடசாலையில் அல்லது வீட்டுச் சூழலில் இருக்கின்ற தேவையற்றவற்றை நீக்குவதுடன் தேவையானவற்றை மட்டும் வைத்திருப்பதால் வேலை செய்யும் நேர அளவு குறைவடைவதாலும் மன அமைதியும் ஒய்வும் அதனால் மகிழ்ச்சியும் ஏற்படும்.

நடராஜா அனந்தராஜ்
(எம்.ஏ.)

8. அலுவலகமும் பாடசாலைச் சூழலும் நல்ல தோற்றத்தையும் அழகையும் தூய்மையையும் கொண்டிருப்பதால் எல்லோராலும் விரும்பப்படும் இடமாக இருக்கும்.

9. உரிய பொருள்களை உரிய இடங்களில் வைத்துப் பழகுவதால் ஒரு வேலையை இலகுவாகவும் விரைவாகவும் குறைந்த செலவுடனும் குறைந்த நேரத்திற்குள்ளும் செய்து முடிக்கலாம்.

10. பதற்றம் இல்லாநிலையில் மகிழ்ச்சிகரமான வேலை செய்வதற்கு உகந்த கவிநிலை காணப்படும்.

நிறுவன முகாமைத்துவம் சில ஆலோசனைகள் 06

11. நிறுவனத்தின் உற்பத்தித்திறன் அதிகரிக்கும் அதேவேளை, பாடசாலையாயின் கல்வி, கலை, விளையாட்டு போன்ற செயற்பாடுகளின் பெறுபேற்று வீதம் உயரும்.

12. வெளியில் இருந்து பாடசாலைக்கு வருகைதரும் கல்வி அலுவலர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் போன்றோரின் மனதில் பாடசாலை தொடர்பான நன்மதிப்பும் உயர்வான அபிப்பிராயமும் ஏற்படும்.

(வளரும்)

குட்டிக்கதைகள்

குருவி குருவி!

வல்லிபுரத்தாருக்கு உழவு இயந்திரத்தை இயக்கவே விருப்பமில்லை. ராத்திரிக்கண்ட கனவு இன்னமும் பயமுறுத்திக் கொண்டேயிருந்தது.

இரவு மூண்டு மணிபோல எழும்பினால் ஒரு 'றூட்' ஓடிப்போடலாம். பத்தாயிரம் தேறும் என்று நினைத்துக்கொண்டு படுத்தவர்தான் அப்படியே உறங்கிப் போனார்.

முன்பக்கம் யாரோ கூப்பிடும் ஒரு குரல் கேட்டது. எழும்பி வந்து பார்த்த மாத்திரத்தே அதிர்ந்து போனார்.

முழங்காலுக்குக் கீழே கால்களிரண்டும் துண்டிக்கப்பட்ட நிலையில் நீண்ட வெண்தாடி நிலத்தில் முட்ட தவழ்ந்து தவழ்ந்து ஒரு கிழவன் வருகின்றான். முகத்தில் களைப்பைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. தவழ்ந்து வந்ததை புழுதிமணல் பதித்துக் காட்டியது.

''அப்பு எங்கையிருந்து வாறாய்?''

''வயல் வெளிக்கும் பக்கத்திலையிருக்கிற தரவையிலைதான் அங்கை இப்ப இருக்கேலாது''

''அப்ப எங்கே போகப்போறாய்?''

''என்ரை காலை வெட்டிப் போட்டியள். இனி நான் எங்கை போறது. இந்த முத்தத்திலை கிடக்கிற புல்லுகளைச் செதுக்கிறன்.எனக்குக் கஞ்சி ஊத்தினாலே காணும்'' என்று கைகளை ஏந்திய படியே பரிதாபமாக நிற்கிறான்.

கனவு கலைந்து திடுக்கிட்டார்.

அவருடைய மூன்றாவதோ நாலாவதோ சந்ததி 'கஞ்சி... கஞ்சி...' என்று பட்டினியால் கதறுவதுபோல அவரது காதுகளில் எதிரொலித்தது.

கனவின் பொருளும் விளங்கியது.

ஓ.... நிலத்தாயே! உணவளிக்கும் வயல்தாயே என்னை மன்னித்துக் கொ இவ்வளவு காலமும் மண் ஏற்றி ஏற்றி வித்துத் தள்ளினேன். எவ்வளவு காக வந்தாலும் மனதிலை திருப்தியோ நிம்மதியோ இல்லை.

உன்னைத் தொடவோ சுரண்டவோ நான் யார்?

இனிமேல் இந்தக் கள்ள மண் எத்துற வேலையைச் செய்யமாட்டன். மற்றவையளையும் ஏற்ற விடமாட்டன்.

இது சத்தியம்! இது சத்தியம்.

நிலமகளே! எதிர்கால சந்ததிக்குத் துரோகம் செய்யாமல் உன்னைப் பண் பயிர் விளைவித்து வாழப்போறன்.

.... ஓ.... வாழப் போறன். கனவின் பயத்தோடு ஆனந்தக் கண்ணீர் ததும்ப முடிவெடுத்தார். உழவு இயந்திரம் பெட்டியை மாற்றிவிட்டு கலப்பையுடன் நகரத் தொடங்கியது வயல் வெளியை நோக்கி....

ந.வினோதினி, ஒட்டுவெள

சுதந்திரம்

அந்த இரு விட்டில் பூச்சிகளும் ஒன்றாகப் பிறந்தன. ஆறுகளின் மேலாகப் பறந்த போது ஆறுகளின் ஓட்டத்தை ரசித்தன. ஆற்றின் கரையினிலே மக்கள் நின்று குளிப்பதையும் ஆறுகள் வளைந்து வளைந்து ஓடுவதையும் பார்த்து ரசித்தன.

நந்தவனங்களின் மேலாகப் பறந்த போது பூங்கொத்துகளின் அழகை ரசித்தன. விதம் விதமான பூக்களின் தேனை உறிஞ்சி மகிழ்ந்தன. தேனுண்டு வெளியேறி அங்குமிங்கும் அலைந்தன.

புல்வெளிகளின் மீது பறந்தபோது பசுமையை ரசித்தன. மலைகளை அண்மித்தபோது நீர் வீழ்ச்சிகளின் அழகினை ரசித்தன. வாழைகள் குலைதள்ளி மகிழ்ந்ததைப் பார்த்தன. முகில்கள் மழை பொழிந்து மகிழ்ந்ததைப் பார்த்தன. தம்மை விட பறவைகள் வேகமாகப் பறப்பது கண்டு விட்டில்களுக்குப் பொறாமை.

விளக்கு வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்த தமிழினியின் மேசையில் வந்திருந்த விட்டில் பூச்சிகளுக்கு உலகைச் சுற்றிப் பார்த்ததில் ஓர் ஆனந்தம். அவையிரண்டும் மேசையின் மேல் புரண்டன; உருண்டன. தமது இறகுளை உதிர்த்துக் கொள்வதற்காக அவை உருண்டு புரள்வது தமிழினிக்கு வேடிக்கையாக இருந்தது. அவை தமது முயற்சியில் வெற்றி பெற்று இறக்கைகளின்றி விட்டில் புழுக்களாக ஊர்ந்து சென்றன.

சுதந்திரம் என்னும் சிறகுகளுடன் பறந்த தனது இனம் மதிநுட்பமின்மையால் அதையிழந்து இன்று விட்டில் புழுக்களாக மாறிவிட்டதை நினைத்த தமிழினி அந்த இறக்கைகள் திரும்ப முளைக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்கிறாள்.

(யாவும் கற்பனை)

எஸ்.எஸ்.சாரதினி

பழங்கால உயிர்வாழ்க்கை

சுமார் 50 கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியின் நிலப்பகுதி வெறும் பாறையாகத் தான் இருந்தது. நிலப்பகுதியில் அப்போது உயிரினங்களே இல்லை. முதன் முதலில் தாவரங்களும் விலங்குகளும் கடலில் தான் தோன்றின.

இருபது கோடி ஆண்டுகள் இந்த நிலைமை நீடித்த பின் நிலத்தில் சில தாவரங்களும் விலங்குகளும் தோன்றின. முதலில் தோன்றியது கடல்தேள். பின்னர் சிலந்திகள் தோன்றின. உயிரினங்கள் விரைவில் நிலத்தில் பரவி வந்தன. இவ்வாறு நான்கு கோடி ஆண்டுகள் கழிந்ததும் கடலில் மீன்கள் தோன்றிய காலம் வந்தது. அடுத்து நீரிலும் நிலத்திலும் உயிர் வாழக் கூடிய உயிரினங்கள் உண்டாயின. சிலவகைப் பூச்சிகளும் வளர்ச்சியுற்றன.

அடுத்த ஆறு கோடி ஆண்டுகளுக்குப் பூமியில் மிகப் பெரிய பூண்டு வகைகளும் படர் செடிகளும் செடிவகைகள் சிலவும் சதுப்பு நிலங்களில் காடுகளாகச் செழித்து வளர்ந்தன. இவை பூமியினடியில் புதைந்து நிலக்கரியாக மாறின. இதை நிலக் கரிக் காலம் என்பர்.

நிலக்கரிக் காலத்தின் முடிவில் ஊர்ந்து செல்லும் பிராணிகள் தோன்றிச் சுமார் பதினாறு கோடி ஆண்டுகள் பூமியில் ஆதிக்கம் செலுத்தின. பழங்காலத்தில் வாழ்ந்த ஊர்ந்து செல்லும் பிராணிகள் பயங்கரத் தோற்றம் கொண்டவை. உருவத்தில் மிகப் பெரியவை. இவற்றில் சில தாவரங்களை உண்டு வாழ்ந்தன. மற்றும் சில புலால் உண்டு வாழ்ந்தன. மிகப் பெரிய விலங்கு 25 மீற்றர் நீளமும் சுமார் 50 டன் எடையுள்ளதாகவும் இருந்தது. இவற்றின் எலும்புகள் பூமியில் சில இடங்களில் தற்போது கிடைத்துள்ளன. இந்த எலும்பு களை விலங்கின் வடிவத்தில் வடிவமைத்துப் பொருட்காட்சி சாலையில் வைத்துள்ளனர்.

பழங்கால ஊர்வனவற்றின் காலம் சுமார் ஏழு கோடி ஆண்டுக ளுக்கு முன் முடிவுற்றது. அவற்றுள் இன்று எஞ்சியிருப்பது தூயத் தாரா ஒன்றுதான். இக்காலத்தில் இறுதியில் பாலூட்டிகளும் ஆர்க்கி யாப்டெரிக்ஸ் என்ற முதல் பறவையும் தொடர்ந்து சில வகைப் பறவைகளும் தோன்றின.

தொடக்கத்தில் பாலூட்டிகள் நிலத்தில் வாழ்வனவாக இருந்தன. பின்னர் திமிங்கிலம், சீல், நீர்நாய் போன்றன தண் ணீரில் சென்று வசிக்கத் தொடங்கின. காலப்போக்கில் சில பாலூட்டிகளும் பெரிய பறவைகளும் மறைந்து விட்டன. குதிரை, யானை போன்றவை நாளடைவில் பெரிதும் மாறுதல் அடைந்தன.

பத்து லட்சம் ஆண்டுகளுக்குமுன் பனியுகம் தோன்றியது. வெப்ப ரத்தப் பிராணிகளான பறவைகளும் பாலூட்டி களும் இக்குளிரையும் தாங்கிக் கொண்டு வாழ்ந்து வந்தன. இக்காலத்தில் தான் மனிதன் தோன்றினான் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இன்று நடைபெறுவது பாலூட்டிகளின் காலம் ஆகும்.

- கவிதா

உங்களுக்குத் தெரியுமா?

- உலகின் மிக உயரமான நாடு - திபெத்
- 2007 ஆம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ள இடம் மேற்கிந்தியத் தீவுகள்
- இலங்கையில் தமிழ் மொழியில் முதன்முதலில் வெளியான நாளிதழ் உதயதாரகை (1941)
- நீல நிறப் பறவையால் ஊதா நிறத்தைப் பார்க்க முடியாது.
- நீலத் திமிலங்கிலத்தின நாக்கின் எடை யானையின் எடையை விட அதிகமானது
- வேகமாகப் பேசக்கூடிய மொழி பிரெஞ்ச்.
- ஹைக்கூ கவிதைகளின தாய் நாடு ஜப்பான்
- மிகக் குறைந்த வார்த்தைகளைக் கொண்ட மொழி இத்தாலிமொழி
- ரஷ்ய நாட்டின் செயதி நிறுவனம் டாஸ்

நற்குணம் - ஜீவன், தரம் 9 சி,
யாழ்/சென்ஜோன்ஸ் கல்லூரி.

விந்தைச் செய்திகள்

◆ ஜமெய்க்கா தீவுப் பகுதியில் உள்ள கவுரமி என்ற மீன் வகை கடலினுள்ளேயே கூடு அமைத்து வாழ்கின்றன. சிறு வருகு - குச்சிகள், கடற்பாசி, ஜெல்லி இவைகளைக் கொண்டு கடல் பகுதியில் ஆழம் அதிகமாக உள்ளதும் அலை ஓட்டமும் சுழலும் அற்ற பகுதியில் பறவைகளைப் போல் கூடுகள் அமைத்து முட்டையிட்டுக் குஞ்சு பொரிக் கின்றன.

◆ அனபாஸ் ஸ்காண்டன்ஸ் என்ற மீனினம் மரமேறிச் செல்லக் கூடியது. மரத்தலும் நீரிலும் இந்த மீன்கள்கூட்டம் கூட்டமாக வாழும். இந்த வகை மீன்கள் கிழக்கிந்திய கடற்கரையில் பிலிப்பைன்ஸ், போர்ணியோ தீவுக் கூட் டங்களில்தான் அதிகமாகக் காணப்படுகின்றன.

◆ கடற்குதிரை என்ற மீனினத்தில் ஆண்கள் தான் தன் வயிற்றில் முட்டைகளை வைத்து அடை காக்கின்றன. இது மீன்கள் இனப் பண்பு அதிசயங்களில் ஒன்றாகும். இந்த இன மீன்கள் ஹப்போகாம்பஸ் என்றும் அழைக்கப்படு கின்றன.

◆ குறிப்பிட்ட வயதிற்கு முன்னர் யரேனும் இறந்தால் அவரைப் பாதுகாக்கும் உறுவினர்கள் ஜெயில் தண்டனை அனுபவிக்கவேண்டும். அல்லது அபராதம் கட்டவேண்டும்.

இந்தச்சட்டம் எங்குள்ளது என்று தெரியுமா? பிரேசில் நாட்டில் பிரிட்டிபாமிரிம் நகரில்தான். இந்த நாட்டு மேய ராக இருப்பவர் சில்வா. இவர்தான் மேற்குறிப்பிட்ட சட்டத்தை இயற்றி உள்ளார். ஏனெனில், பிரிட்டிபாமிரிம் பகுதி 89 சத வீதம் ஆறுகளால் சூழப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதி பாதுகாக் கப்பட்ட வனப்பகுதியாகும். இப்பகுதியில் உள்ள இடுகாட் டில் சடலங்கள் புதைக்கப்பட்டு நிறைந்துள்ளது.

இனி இறப்பவர்களைப் புதைக்க சிறிதளவும் இடமில்லை. இதனால்தான் குறிப்பிட்ட வயதுக்கு முன்னர் இறக்கக் கூடாது என சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த விநோதமான சட்டத் தால் நகரில் வசிக்கும் மக்கள் உடற்பயிற்சிகள் செய்தும் மருத் துவர்களைச் சந்தித்தும் உடலை ஆரோக்கியமாக வைத் துள்ளனராம்.

விடுகதைகள்

- சுற்றுவது தெரியாது. ஆனால் சுற்றிக் கொண்டி ருப்பான். அவன் யார்?
- கழற்றிய சட்டையைத் திரும்பப் போட மாட்டான். அவன் யார்?
- அடர்ந்த காட்டுக்குள் திரிந்து அழகுபடுத்துவான். அவன் யார்?
- தீக்குளித்தாலும் திடமாகவே இருப்பவன். அவன் யார்?
- வரும்போது வெண் சிவப்பு. வளர வளரத் தகதகப்பு. போகும் போது கடும் சிவப்பு. அது என்ன?
- வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்?

1. பூமி 2. பாம்பு 3. சீப்பு 4.செங்கல் 5. சூரியன் 6. மண்புழு

லூட்ஸ் பூரணி, தரம் 5,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

சிரியுங்களேன்....

சிறுமி (பேத்தி) : டீவிக்கு கிட்ட இருந்து பாராதிங்கோ கண்கெட்டுப்போகும் பாட்டி!

பாட்டி : கொஞ்சம் பொறடி பிள்ள முரளி 'போல்' போடுறானோ 'பட்' பண்ணுறானோ எண்டு பாப்பம்.

ஆசிரியர் : என்ன உங்கட பையன் கணக்கு போடேக்க உறுமிக் கொண்டே இருக்கிறான்!

அம்மா: அதான் நான் சொன்னன் அவன் கணக்கில புலி எண்டு!

சிவசுப்பிரமணியம் வாமதீபன்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

வாழ்க்கைக் கணக்கு

சோம்பலைக் கழிக்கவேண்டும்
கறுகறுப்பைக் கூட்டவேண்டும்
உழைப்பைப் பெருக்கவேண்டும்
உயர்வாழ்வை வருக்க வேண்டும்.

உங்களின் கைவண்ணங்கள்

இ.தனுகரன்,
தரம் - 3பி,
யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.

வி.கிஷோபன்,
தரம் - 8ச,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

கி.துளசிகரன்,
தரம் - 10,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

ந.லீனோத்,
தரம் - 7,
யா/ஸ்கந்தவரோதயா வித்தியாசாலை, தொல்புரம்.

க.சிவகஜன், தரம் - 8பி,
யா/வைத்திஸ்வராக் கல்லூரி.

ஸ்ரீ.பார்த்தீபன், தரம் - 11சி,
யா/யூனியன் கல்லூரி.

புவிராஜ், தரம் -10ஏ,
கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை.

இந்தியா எங்கும் 'கோழிக்கறித் திருவிழா!'

இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பீதியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்ட இறைச்சிக்கோழி மற்றும் முட்டை விற்பனையை மீண்டும் தூக்கி நிமிர்த்த பண்ணை உரிமையாளர்கள் படாதபாடுபட்டு வருகின்றனர்.

பெரிய பண்ணை நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து பொது இடங்களில் 'கூட்டுச் சமையல்' முறை மூலம் கோழி இறைச்சிக்கறியைச் சமைத்து மக்களுக்கு இலவச விருந்து வைக்கிறார்கள். அந்தளவுக்கு நிலைமை போயிருக்கிறது.

பறவைக் காய்ச்சல் பீதியால் படுத்துவிட்ட கோழிஇறைச்சி விற்பனையை மீண்டும் பறக்க வைக்க, சேலத்தில் இலவச 'சிக்கன்மேளா' நடத்தப்பட்டது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அசைவப் பிரியர்கள், இரண்டாயிரம் கிலோ கோழி இறைச்சியும் மூவாயிரம் முட்டைகளையும் காலி செய்தனர். வட மாநிலங்களில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சலால் லட்சக்கணக்கான கோழிகள் இறந்தன. இந்தப் பறவைக் காய்ச்சல் தமிழகத்துக்கு பரவாவிட்டாலும் கூட, காய்ச்சல் குறித்த பீதி வெகுவேகமாக தமிழகத்துக்குள் பரவிவிட்டது. இதனால் கடந்த பத்து நாள்களாக தமிழகத்தில் கோழி மற்றும் முட்டை வியாபாரம் சுத்தமாக படுத்து விட்டது.

இதையடுத்து, கோழிப் பண்ணை நிறுவனங்கள், அரச கால்நடைத்துறை ஆகியவை தமிழகத்தில் பறவைக் காய்ச்சல் இல்லை என்று அறிவித்தன. இருந்தாலும் மக்களிடம் பயம் நீங்கியபாடு இல்லை. இதைச் சரிக்கட்ட சென்னை, நாமக்கல் ஆகிய இடங்களில் 'சிக்கன் மேளா' நடத்தப்பட்டு, விதவிதமான கோழிக்கறிகள் இலவசமாக பொது மக்களுக்கு பரிமாறப்பட்டன. இதைத் தொடர்ந்து, சேலத்திலும் 'சிக்கன் மேளா' நடந்தது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு, தமிழ்நாடு கோழி பண்ணையாளர்கள் சங்கம், புரொய்லர் ஒருங்கிணைப்பு குழு மற்றும் சேலம் ரோட்டரி சங்கம் ஆகியவை இணைந்து இந்த மெகா சிக்கன் மேளாவை சேலம் பழைய பஸ் நிலையம் அருகில் உள்ள நேரு கலையரங்கத்தில் நடத்தின.

பல கோடி ரூபாய் முதலீடு செய்து நடத்திவரும் கோழிப் பண்ணை தொழிலில் 'ரிஸ்க்' அதிகம். பிரச்சினை எந்த நேரத்திலும் வரலாம். சிறு வதந்தி கூட தொழிலை வெகுவாகப் பாதிக்கும்.

70 பாகை வெப்பத்தில் வேகவைத்துச் சாப்படும் எந்தப் பொருளும் உடலுக்கு தீங்கு விளைவிக்காது. பொதுமக்கள் பயமின்றி கோழி, முட்டைகளை வாங்கி உண்ணவேண்டும் – என்று அங்கு வலியுறுத்தப்பட்டது.

இந்த சிக்கன் மேளாவுக்காக அன்று அதிகாலையே நான்காயிரம் கோழிகள் கொண்டு வரப்பட்டன. இரண்டாயிரத்து ஐந்நூறு கிலோ கோழி இறைச்சி, மூவாயிரம் முட்டைகள் பரிமாறப்பட்டன. சிக்கன் புரியாணி, சிக்கன் 65, சில்லி சிக்கன், பெப்பர் சிக்கன், சிக்கன் லாலிபாப், க்ளப் சிக்கன், சிக்கன் சைனா டவுன், சில்லி வறுவல், சிக்கன் சூப், சிக்கன் ஈரல் ப்ரை, முட்டை மசாலா, முட்டை பொரியல், தயிர் பச்சடி, தால்ஜா, சிக்கன் க்ரேவி என விதவிதமான உணவு வகைகள் தயார் செய்யப்பட்டன. சேலத்தில் பிரபலமான முகமத்புறா பகுதியைச் சேர்ந்த 'புல்லட்' பாட்சா மற்றும் அம்மாப்பேட்டை தேங்காய் மணி ஆகியோர் தலைமையில் 60 பேர் கொண்ட குழு இந்த சமையலை செய்திருந்தது. சிக்கன் மேளா தொடங்கிய ஒன்றரை மணி நேரத்தில், ஆயிரத்துக்கும் மேற்பட்டார், இரண்டாயிரத்து ஐந்நூறு கிலோ இறைச்சியையும், மூவாயிரம் முட்டைகளையும் இலவசமாக சாப்பிட்டு 'காலி' செய்தனர். பறவைக் காய்ச்சலால் அடித்த அதிர்ஷ்டம் இது.



அறிந்து கொள்ளுங்கள்...

(II பக்கத் தொடர்ச்சி)

நோய்க்கான அறிகுறிகள்

வைரஸ் மூளையை அடையும் பொழுதுதான் அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. முதலில் பொதுப்படையான குணங்குறிகளே தோன்றும்.

இக்காலப்பகுதி Prodromal Period எனப்படும். இக்காலப்பகுதியில் சோம்பல், பசியின்மை, தலையிடி, காய்ச்சல், குமட்டல், சத்தி, பதட்டம், நித்திரையின்மை, தொண்டை அழற்சி, வயிற்றோட்டம் என்பன ஏற்படலாம். அத்துடன், நாய் கடித்த இடத்தில் நோ அல்லது விறைப்புத் தன்மை அல்லது உணர்வற்ற தன்மை ஏற்பட்டால் அது விசர் நாய்க் கடிக்கான முக்கிய அறிகுறியாகும்.

சில நாள்களின் பின் மூளையில் வைரஸ் பெருகுவதால் மூளை அழற்றி ஏற்படும். இக்காலப்பகுதி Acute neurologic period எனப்படும். இந்நிலையிலிருக்கும் ஒருவருக்கு செயற்பாடுகள் அதிகரித்தல் (Hyperactivity) அமைதியின்மை, மாறாட்டம், வலிப்பு, ஏனையோரைக் கடிக்க முயலுதல் போன்ற அறிகுறிகள் காணப்படலாம்.

அத்துடன், தொண்டையில் ஏற்படும் தசைச் சுருக்கத்தால் (Spasm) தண்ணீர் குடிக்கும்போது கடுமையான நோ ஏற்படும். இதனால் இவர்களுக்குத் தண்ணீரைக் கண்டவுடனேயே வெறுப்பு ஏற்படும். இதனால் இந்நோய் நீர் வெறுப்பு நோய் (Hydrophabia) எனவும் அழைக்கப்படும்.

சிலருக்கு அவயவங்கள் செயலிழந்தும் காணப்படலாம் (Paralysis) . இக்குணங்குறிகள் தோன்றிப் பத்து நாள்களுக்குள் மயக்கநிலை ஏற்படும் (Coma). இதன்பின் அவரின் சுவாசம் செயலிழப்பதனால் இறக்கநேரிடும்.

விசர்நாய்க்கடி என்பதை உறுதிப்படுத்தல்

* கடித்த விலங்கின் செயற்பாடுகளை அவதானிக்க வேண்டும். அவை வழமைக்கு மாறாக மிகவும் ஆக்ரோசமானவையாகவும் கடிக்கும் மனோபாவம் உள்ளவையாகவும் காணப்படும்.
* இயலுமானால் கடித்த விலங்கைக் கட்டி வைத்து அவதானிக்க வேண்டும். கடித்துப் பத்துநாள்களுக்குள் அது இறந்து விட்டால் அது விசர் நாய் என்பதை உறுதிப்படுத்தலாம்.
* இவற்றைவிட வைத்தியசாலையில் உமிழ்நீர், குருதி, தோல் என்பவற்றைப் பரிசோதிப்பதன் மூலமும் உறுதிப்படுத்தலாம்.

விசர்நாய்க்கடிக்கெதிராகக் கடைப்பிடிக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள்.

* வீட்டில் வளர்க்கும் நாய், பூனை என்பவற்றிற்கு றேபிஸ் வைரஸ்சுக்கெதிரான தடுப்பு மருந்தினை ஒழுங்காகப்போடுதல்.
* பழக்கமற்ற அல்லது நோய்த்தடுப்பு ஏற்றப்படாத பிராணிகளுடன் பழகுவதைத் தவிர்த்தல்.
* வீடுகளில் தேவைக்கு அதிகமாக நாய்களை வளர்க்காதிருத்தல்.
* தேவையற்ற நாய்கள் வீடுகளிலும் சூழலிலும் காணப்படின் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரியப்படுத்தி அவற்றை அழித்துவிடுதல்.
* வீடுகளிலும் சூழலிலும் எஞ்சிய உணவுப் பண்டங்களையும் கழிவுகளையும் வீசாதிருத்தல். (இதனால் பல நாய்கள் ஒன்றாகக் கூடுவதையும் அதன் மூலம் நாய்கள் பெருகுவதையும் தவிர்க்க முடியும்)
* கட்டாக்காலி நாய்களை இல்லா தொழித்தல்.
* இந் நோய்க்குள்ளாகும் ஆபத்துடையோர் முன்கூட்டியே தடுப்பு மருந்தைப் போட்டுக்கெள்ள வேண்டும்.

உ+ம்

* மிருக வைத்தியர்கள் , மிருக வைத்திய மாணவர்கள்.
* மிருகக்காட்சிச் சாலை வனவிலங்கு உத்தியோகத்தர்.
* நாய் ஒழிப்புப் பணியாளர்கள்.
* இவ் வைரஸைப் பரிசோதிக்கும் ஆய்வு கூடப் பரிசோதகர்கள்.
* மற்றும் விலங்குகளிடம் பழகும் சந்தர்ப்பமுடையோர்.

மேற்கூறப்பட்டோர் அனைவரும் தடுப்பு மருந்தை முழுமையாகப் போட்டுக்கொள்ளவேண்டும். அதாவது 0,7,21 ஆம் நாள்களில் தடுப்பூசி போடவேண்டும்.

நாய்க்கடிக்குள்ளானவர்கள் கவனிக்க வேண்டியவை

நாய் கடித்த உடலின்பாகத்தை சவர்க்காரமிட்டு ஓடும் நீரால் நன்றாகக் கழுவ வேண்டும். கழுவுவதற்கு உப்பு நீர்,மதுசாரம் போன்றவற்றையும் பயன்படுத்த முடியும். அத்துடன் வீட்டு அல்லது காட்டு விலங்கு கடித்தவர்கள் உடனடியாக அண்மையிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று விசர் நாய் கடிக்கு எதிரான தடுப்பு மருந்தை ஒழுங்காகப் போட்டுக் கொள்ள வேண்டும். வீட்டுப்பிராணி தானே என்று அலட்சியப்படுத்தக் கூடாது. இவர்கள் முன்பு தடுப்பூசி போடாதவர் களாயிருந்தால் 0, 3,7,14,28 ஆம் நாள்களில் (5முறை) தடுப்பூசியையும் போட்டுக் கொள்ளவேண்டும். கடிக்க முன்பு தடுப்பூசி போட்டவர்கள் 0,3 ஆம் நாள்களில் இரண்டு ஊசிகள் போட்டால் போதுமானதாகும்.

குறிப்பு: கர்ப்பிணித் தாய்மார்களும் இத்தடுப்பூசியை போட்டுக் கொள்ளலாம். விசர் நாய்க்கடிக்கெதிராகப் பயன்படுத்தப்படும் தடுப்பு மருந்துகளாகப் பின்வருவன காணப்படுகின்றன.

1.Human diploid Cell vaccine (HDCV)
2. Purified chick embryo cell Vaccine

நன்றி: நாடி(2005)
மருத்துவ மாணவர் ஒன்றியம்

சமுதாயத்தில்...

சமுதாயத்தில் வினையெச்சங்களாகவே
எல்லோரும்
ஒருத்தரை ஒருத்தர்
பெயரெச்சங்களாகப்
பெயரளவிலேயே வைத்திருக்கிறார்கள்
மட்டுமன்றி
சமுதாயத்தில் அடைப்புக் குறிகளுள்
அடைக்கப்பட்டவர்களாகவே
எல்லோரும்....
ஒருத்தரை ஒருத்தர்
வியப்புக் குறிகளாகப் பார்த்தபடி...
சமுதாயத்தில்
ஒருவரை ஒருவர்
ஏவல் வினையாய் ஏவிக்கொண்டிருக்கிறார்கள்
ஒவ்வொருத்தரும் தம்முள்
கேள்விக் குறிகளாய்
இயங்கிக்கொண்டிருக்க
சமுதாயத்தில் தன்மை, முன்னிலை,
ஒருமைகளிலேயே எல்லோரும்
அலட்டிக் கொள்கிறார்கள்
படர்க்கை, பன்மை இல்லாமல்
குறிப்பாகச்
சமுதாயத்தில் காலம் காட்டும்
உரிப் பொருளாகவே பலர்
கருப்பொருளாக சிலர் தான்
வேற்றுமைகள் வேறுபடுவதனால்
சமுதாயத்தில்
குழுவுக் குறிகளாகவே
எல்லோரும்.

- சுபாஷினி ஜெகநாதன்

காரணத்தைச் சொல்லி விடு

தீபி

உணர்வுகள் மங்கிப்போய்
மரத்துக் கிடந்த
என் மனதில்
பசுமைப் புரட்சி செய்வதாய்
நீ வந்தாய்!

எத்தனை வேகம்
உன் வரவிலே
அத்தனை வேகமாய்
மறைந்தும் சென்று விட்டாய்!

காதலர் தினத்திலே
காதலைச் சொன்னால்
காவியம் படைக்கலாம்
என்று தான் நீ சொன்னாய்!

காதலைச் சொன்ன
உன் இதழ்கள்
இன்று மௌனத்தில்
உறைந்து கிடப்பதேன்!

தூங்கிக் கிடந்த
என் காதல் உணர்வுகளை
தட்டி எழுப்பியவனும்
நீ தானே!

இன்று தூக்கமின்றி
நான் தவிக்க
என் தூக்கத்தைக்
கெடுத்தவனும் நீ தானே!

உன் மௌனத்தின்
காரணத்தைச் சொல்லி விடு
இல்லையேல்
என்னைக் கொன்றுவிடு!

சிறுசுகளுக்காக...!

சிறுவர்களை சிறுசுகளாகவே ஒதுக்கி வந்த மரபு எங்களுக்கு நிறையவே உண்டு. அவர்களையும் மனிதர்களாக - பெரியவர்களுக்குச் சமதையாக - மதியுங்கள் என்ற கருத்து இப்போது வேகமாக வேரூன்றி வருகிறது. அவர்களது உரிமைகள் பற்றியும் அவர்களை அவர்களுக்காகச் செயற்பட விடவேண்டும் என்பது பற்றியும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பல எம் மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்றன.

மேற்குலகச் சிந்தனையின் திணிப்புகளாக வரும் இவற்றில் நல்லதும் கெட்டதும் கலந்திருக்கிறது. என்றாலும் எம் சிறுவர்களுக்காக, அவர்களின் நலன்களுக்காக சிந்திப்போர் - செயற்பாடுவோர் எவரும் எம்மிடம் இல்லையா? திணிப்புகளுக்கு வெளியே எம் சிறுவர்களை எம் சூழலுடன், கலாசார பண்பாடுகளுடன் பொருத்தி வளர்க்க எவரும் முன் வரவில்லையா? வெளியிலிருந்து வந்து குவியும் பணமூடைக ளுடன் பொருத்திப் பெரும் வெளிப் பாடுகளைக் காட்டக் கூடியோர் (முடிய வில்லை) இல்லை என்றாலும் ஆங் காங்கே

உண்மை யான அர்ப்ப ணிப்புள்ள முயற்சி களும் இல்லா மல் போய் விட வில்லை. தன் சமூகம் சார்ந்து சிந்தித்து அவர்க ளுக்காக உழைக்கும் சிலரின் முயற்சிகள் இலைமறை காயாக ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன. பசுமை நிறைந்த சூழலுக்குள் கிடந்த திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலை (பாம் ஸ்கூல்) மண்டபத்தில் அண்மையில் இத்தகைய முயற்சி ஒன்றைக் காணமுடிந்தது.

குழந்தை ம.சண்முகலிங்கம்

சிறுவர்களுக்கான பாடல்கள் அடங்கிய இறுவட்டு தொடர்பான கலந்துரையா டல் அங்கு இடம் பெற்றது. செயற்திறன் அரங்க இயக்கம் இந்த இறுவட்டுக்களை வெளியிட்டுள் ளது. மிக மிக வரையறுக்கப்பட்ட ஆர்வலர்களுடன் ஆக்க பூர்வமாக நடந்த ஆய்வுக் களம் அது.

சிறுவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள பிரபல நாடகாசிரியர் குழந்தை ம.சண்முகலிங் கத்தால் எழுதப்பட்ட பாடல்கள் இசைக் கோர்ப்புகளுடன் இறுவட்டாகி இருக்கின்றன.

குழந்தை ம.சண்முக லிங்கம் ஈழத்து நாடக உல

கினதாய் என்று வர்ணிக் கப்படுபவர். கடந்த ஒரு தசாப்த காலமாக அவர் சிறுவர்களுக்கான நாடகங்களில் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார். சிறுவர்களின் உளவியலைப் புரிந்து கொண்டு, பெரியோராகத் தம்மைப் பாவனை செய்யாத சிறுவர்களுக்கான நாடகங்கள்தான் அவரது படைப்புக களின் சிறப்பு. அப்படி அவர் எழுதிய நாடகங்கள் சிறுவரை மகிழ்வூட்டும் உளவியலுடன் சேர்ந்தவை. ஆட லும் பாடலும் அவற்றின் அச்சாணிகள்.

அவரது நாடகங்களில் இடம் பெற்ற 50 பாடல்கள்தான் 'சிறுவர் நாடகம் பாடல்' இறுவட்டாக வெளி வந்துள்ளது.

பாடல்களை இசை கோர்த்து இறு வட்டாக்கி இருக்கும். செயற்றிறன் அரங்க இயக்கம், அரங்கின் வளர்ச் சிக்காக ''வளமான அரங்கப் பண் பாட்டுக்காக உழைப்போம்'' என்ற மகுடத்துடன் திருநெல்வேலியில் இருந்து செயற்பட்டு வருகின்றது.

அண்மைக் காலமாகக் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் சிறுவர் நாட கங்களை மேடையேற்றி வருவதும் இந்த நிறுவனம்தான். தன் சொந்த வளங்களையும் ஆளணியினரையும் பயன்படுத்தியே இந்த இறுவட்டை அது வெளியிட்டுள்ளது.

''நாடகங்களில் காட்சிப் பெறுமா னங்களுடன் சேர்த்துப் பார்க்கும் போது இருக்கும் கனதி, பாடல் களைத் தனித்துக் கேட்கும்போது இருக்குமா என்பது தெரியவில்லை'' - என்ற சந்தேகத்தை செயற்திறன் அரங்க இயக்கத்தின் இயக்குநர் தே.தேவானந்த் கிளப்பினாலும், அந்தப் பாடல் தொகுதி அவசியமா னது; எதிர் காலத்தில் சிறுவர் கல்வியில் பாடத்திட்டமாகச் சேர்க்கப்பட வேண்டியது என்று ஆணிந்தரமாகக் கூறினார் கவிஞர் நா.சிவசிதம்பரம். பாடல்களின் கவிதைத் திறம் பற்றி ஆய்வு செய்தார் அவர்.

இன்று சிறுவர் உரிமை விடயத்தில் மாணவனாய் இருக்கும் இலங்கைதான், உலகில் முதன் முதலில் சிறுவர் இலக்கியத்துக்காகப் போட்டி நடத்திய நாடு என்று, பெருமை யையும் ஆச்சரியத்தையும் ஒருங்கே தரும் தகவலையும் அவர் சொன்னார்.

கே.எஸ். அருணந்தி என்பவரே அந்தப் போட்டியை நடத்தி யுள்ளார். அப்போதும் சிறுவர்க ளுக்காகப் பெரி யோரே பாடல்களை எழுதியுள்ளனர். சுவாமி விபுலானந்தர், பண்டித மணி சிக்கடதிப் பிள்ளை போன்றோர் இந்தப் போட்டியின் நடுவர்களாக இருந்து சிறப்பித்திருக்கிறார்கள்.

இன்று நிலைமை மாறி, சிறுவர் உரிமை பற்றி மேற்குலகம் எமக்குப் போதிக்கும் நிலை வந்துவிட்ட போதும், எம்மிடையே ''சிறுவர் கல்வி பற்றிச் சிந்திப்போர் இருப்பது மிகப் பெரிய விடயம்'' என்று கூறினார். யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் வி.பி.சிவநாதன்.

''சூழலுடன் சேர்ந்திருப்பதுதான் ஆரம்பக் கல்விக்கு முக்கியம். சூழலுடன் ஒன்றித்துத்தான் சிறு குழந்தைகள் வளர்கின்றன. 'குழந்தை'யின் நாடகங்களில் வரும் காட்சிகளும் பாடல்களும் சிறுவர்களின் மனங்களில் உடனேயே நன்கு பதிந்துவிடும். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது ஆரம்பக் கல்விப்பாடல்கள்தான் என்றைக்கும் மறக்காது மனதில் பதிந்திருக்கும்' - என்றார் பேராசிரியர்.

தொலைக் காட்சிப்பெட்டிகளுக்குள் நம்மவர்கள் முடங்கிப் போகத் தொடங்கிய பின்னர் சிறுவர்கள் அதற்குள் அடக்கமாகியே

கவிஞர் சிவசிதம்பரம்

பேரா.சிவநாதன்

'போய்விட்டார்கள். பாலர் பாடசாலைக்குச் செல்ல முன்பே '' கல்யாணம் தான் கட்டிக் திட்டு ஓடிப் போலாமா. ஓடிப் போய் கல்யாணம் தான் கட்டிக்க லாமா'' என்று ரி.வியைப் பார்த்துக் கற்றுக் கொள்ளும் குழந்தை களின் கிரகிக்கும் ஆற்றலை நல்லவற்றின்பால் திருப்ப வேண்டிய தேவை, அவசியம் எமக்கு இருக்கிறது. அடுத்த சந்ததியின் எதிர்காலம் பற்றிய கவலை இது.

திருமதி சுகன்யா உரையாற்றுகிறார். அருகில் தே.தேவானந்த், கேதீஸ், சிவசிதம்பரம்

ணவே இந்தப் படைப்பு பாலா கலவியில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. ''இவ்வாறு அர்பணிப்புடன் வழங்கப்படும் படைப்புகளைக் கையேந்திய- நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்'' - என்று கூறினார் பேராசிரியர் சிவநாதன். எதிர்காலச் சிறுவர் கல்வித் திட்டத்திற்கு இந்தப் பாடல்கள் இனிவரும் காலத்தில் அடிப்படையாகலாம் என்றும் அவர் எதிர்வு கூறினார்.

இந்த இறுவட்டில் காணப்படும் பாடல்கள் அனைத்துமே சிறுவர்களுக்கு அறிவுரைகளைக் கூறுபவை என்று சொல்லி விட முடியாது. ஆனால், ஒவ்வொன்றும் ஏதோவொன்றைச் சிறுவர்களுக்குச் சொல்லித் தருகின்றன. மொழி உச்சரிப்பை அல்லது சந்தத்தை அல்லது நல்லறிவை அது புகட்டும் பாங்கு சிறுவர்களுக்கே உரியது. இதனைத் தெளிவுபடுத்திக் கூறினார் திருமதி சுகன்யா. யாழ். பல்கலைக் கழக இசைத்துறைப் பட்டதாரியான இவர், இறுவட்டின் - இசைச் செழுமை பற்றி மதிப்பீடு செய்தார்.

சிறுவர் பாடல்களுக்கு இசையமைப்பது மிகச் சிரமமா னது என்று கூறிய சுகன்யா, அவ்வாறு இசையமைக் கையில் கவனிக்கப்பட வேண்டியவை பற்றி விரிவாக விளக்கினார். இந்த இறுவட்டுக்கு யாழ். பல்கலைக் கழகத்தின் மற்றொரு இசைத் துறைப்

பட்டதாரியான த.றொபேர்ட் மற்றும் கேதீஸ் இசையமைத் துள்ளனர். அவர்களது இசையில் மிக நேர்த்தியாக - சிறுவர் பாடல்களுக்குரிய இலக்கணங்களுடன் - பாடல்கள் இசைக் கோலம் பூண்டுள்ளன என்று தெரிவித்தார் சுகன்யா.

50 பாடல்களை யும் ஜெகனி என்ற வளர்ந்துவரும் இளம் பாடகியே பாடியுள்ளார். அத்தனை பாடல் களையும் ஒரே குரலில் கேட்பது சற்று சலிப்பைத் தரக்கூடும் என்பதை ஏற்றுக் கொள்ளும் செயற்திறன் அரங்க இயக்க இயக்குநர், குரல்களில் வித்தியாசம் பேண முடியா மைக்கு ஆளணி வளப் பற்றாக்குறையே காரணம் என்றார்.

பாராட்டப்பட வேண்டிய இந்த முயற்சி ''முதல் என்பதால் இன்னும் முழுமை பெறலாம்'' - என்கிறார் கவிஞர் சிவசிதம் பரம். சிறுவர்களுக்கான பாடல்களை சிறுவர்களே எழுதும் ஒரு நிலைவர வேண்டும் என்றும் அவர் விரும்புகின்றார். அதுவரைக்கும் ''சிறுவர்களுக்கான பாடல் களைப் பெரியவர்களே எழுதுவார்கள். அதுதான் இன்றைய தேவையும் கூட'' - எனவும் சொன்னார் அவர். சிறுவர் பாடல்களை சிறுவரே எழுதும் நிலை வருவதற்கு இந்தச் 'சிறுவர் பாடல்' தொகுதியை ஒவ்வொரு சிறுவனும் கேட்க வேண்டும்.

தேபிந்த்

பாடகி ஜெகனி

இறுவட்டு தயாரிப்பிலும் அதில் இடம்பெற்ற பாடல்கள் வரும் நாடகங்களிலும் பங்கேற்ற இளம் கலைஞர்கள்